
கல்கி



KALKI 6-3-83 ரூ. 1.20


ஒவ்வொரு இல்லமும்
விரும்பும்-ரஸ்னா
அற்புதமான ஒரு பொட்டலம் ரஸ்னாவைக் கொண்டு 32 டம்ளர் சுவைமிக்க குளிர் பானத்தைத் தயாரிக்கலாம்.
அது மிகவும் சுலபம். ஒரு குழந்தைகூட அந்த தந்திரத்தைச் செய்துகாட்டலாம். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் சர்க்கரை மற்றும் நீருடன் ரஸ்னாவைக் கலக்குங்கள். நிமிடங்களில் பானம் தயார். 32 டம்ளர் சுவைமிக்க குளிர்பானம் தயாரிக்க 2 பாட்டில்கள் சிரப் போதும். இதை இதர எந்த சிரப்/ஸ்குவாஷுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். மற்றவைகளைவிட ரஸ்னாவுக்கு பாதி விலைதான் ஆகிறது என்பதை உணர்வீர்கள்.
ரஸ்னா
சாஃப்ட் ட்ரிங்க் கான்ஸன்ட்ரேட்
சுவையானது!
சிக்கனமானது!
Rasna
Rasna soft drink concentrate
தயாரிப்பவர்கள்: பயோமா இண்டஸ்ட்ரீஸ், அசர்வா, அகமதாபாத் 380 016.

சென்னை விமான நிலையம் அருகே சிறுத்தை ஒன்று உலாவுவதாகச் செய்தி. திருப்பதியில் ஒரு சிறுத்தை பிடிக்கப்பட்டதாக மற்றொரு செய்தி. காடுகளில் உலாவ வேண்டிய சிறுத்தை ஊருக்குள் உலாவரக் காரணமென்ன! வனவிலங்கு நிபுணர் சொல்கிறார்.



காட்டு மிருகங்கள் நாட்டுக்குள் வருவதேன்?

பொதுவாக மிருகங்களைக் கண்டால், மனிதர்களுக்குப் பயம். ஆனால் உண்மையில் மனிதர்களைக் கண்டால் மிருகங்களுக்குப் பெரும் பயம். தன்னைக் காத்துக்கொள்ளவே வன விலங்குகள் மனிதர்களைத் தாக்குகின்றன. சுதந்திரமாகத் திரிய விரும்பும் மிருகங்கள் மனிதர்கள் வாழும் பகுதிகளை நோக்கி வருவதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, உணவுக்காக, மற்றொன்று தான் இதுவரை வாழ்ந்த காட்டுப் பகுதியில் ஏற்பட்ட மாறுதல்களால் ஏற்படும் இடையூறுகள்.

காடுகளில் பெரிய மிருகங்கள் சிறிய மிருகங்களை அடித்துக் கொன்று தின்னுவது வழக்கம். அத்தகைய பெரிய மிருகங்களுக்கு வயதாகி விட்டால், அவைகளால் சிறிய மிருகங்களை எளிதில் தாக்கி உண்ண முடிவதில்லை. வாலிபப் பருவத்தில் உள்ள ஒரு புலியோ, சிறுத்தையோ மிக வேகமாக ஓடும் மான்களைக் கூட விரட்டிப் பிடித்து உணவாக்கிக் கொள்ளும். ஆனால் வயதாகி விட்டால் அவ்வாறு செய்ய இயலாது. எனவே காடுகளில் கீழ்ப் பகுதிகளில் மேய்ந்து கொண்டிருக்கும் ஆடு, மாடுகளை நோக்கி வன விலங்குகள் நகரத் தொடங்குகின்றன. இப்படி வரும் விலங்குகள் ஊருக்குள் புகுந்துவிட ஏதுவாகிறது.

அடுத்ததாகக் காடுகளில் ஏற்படும் மாறுதல்கள். அடர்ந்த மரங்கள் செறிந்த ஒரு பகுதியில் ஒரு புலி வாழ்ந்து வருகிறது. ஏதேனும் ஒரு காரணத்தால் இப் பகுதியில் மரங்கள் வெட்டப்படலாம். அல்லது புதர்கள் அழிக்கப்பட்டிருக்கலாம். அப்போது அது இடம் பெயர்ந்து ஊருக்குள் வந்துவிடுகிறது. அதேபோல், காடுகளில் உள்ள தாகம் தணிக்கும் நீர்நிலைகள், அல்லது ஓடைகள் வற்றினால், நீர் தேடி ஊர் நோக்கி வனவிலங்குகள் வருவதுண்டு. காடுகளில் விவசாயம் செய்பவர்கள் திடீரென ஓடை நீரை வேறு வழி நோக்கிச் செலுத்திவிடும் போதும் நீர் தேடி வன விலங்குகள் மக்கள் வாழும் பகுதி வரை வந்து விடுகின்றன.

இவ்வாறு ஊருக்குள் தப்பி வரும் வன விலங்கு பெரும்பாலும் சிறுத்தையாகவோ அல்லது புலியாகவோதான் இருக்கும். இதற்குக் காரணமுண்டு. புலி, சிறுத்தை போன்றவை எப்போதும் தனித்து வாழ்பவை. பாலுணர்வு ஏற்படும் குறிப்பிட்ட சில மாதங்களில் மட்டுமே இவை துணையோடு திரியும். ஆனால் சிங்கங்களைத் தனித்துக் காண முடியாது. ஆண் சிங்கமும் பெண் சிங்கமும் தங்கள் குட்டிகளோடு எப்பொழுதும் ஒன்றாய்த் திரியும்.

மனிதர்கள் வாழும் பகுதிகளில் வன விலங்குகள் புகுந்துள்ளதை மிக எளிதில் கண்டு பிடித்து விடலாம். ஊருக்கு அருகில் வன விலங்குகள் உலாவினால்முதலில் கால்நடைகள் காணாமல் போய்விடும். அல்லது கொல்லப்பட்டு இறந்து கிடக்கும். தவிர, வன விலங்கு இருக்கும் இடத்தில் ஒருவித நாற்றம் வரும். மூக்கை நன்றாக உறிஞ்சிப் பார்த்தால் இந்த நாற்றத்தை எளிதில் கண்டு பிடித்து விடலாம். மிருகக் காட்சி சாலைக்குள் நுழைந்ததுமே ஒருவித நாற்றம் நம் நாசிகளைத் தாக்குவதை நீங்கள் உணர்ந்திருக்கலாமே!

திருப்பதியைப் பொறுத்தவரையில் அது காட்டுப் பகுதி. எனவே சிறுத்தை அங்கு வர வாய்ப்பிருக்கிறது. ஆனால் சென்னை விமான நிலையம் அருகே காடுகள் இல்லை. எனவே சிறுத்தை சென்னைக்கு வர வாய்ப்பில்லை. எனினும் பொறுத்திருந்து பார்க்க வேண்டியது அவசியம். சிறுத்தைகள் கண்களில் அகப்பட்டால் நம் வீட்டில் எலி பிடிக்கும் அதே முறையில்தான் அவைகளும் பிடிக்கப்படுகின்றன.

பேட்டி : **ஜோஸ்**



இப்படிச் செய்யலாமா என்.டி.ஆர்?

ஆந்திர முதல்வரின் இரு காரியங்கள் சர்ச்சையைக் கிளப்பியுள்ளன. 'மேலவையை ஒழிக்கிறேன்' என்று புறப்பட்டிருக்கிறார். அது பற்றி திரு பக்தவச்சலம் இங்கு கருத்துத் தெரிவிக்கிறார். அரசு ஊழியர்களின் ஒய்வு பெறும் வயதை 55 ஆக குறைத்துள்ளது பற்றி கல்கி வாசகர்கள் சிலர் அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளனர்:

வேலை தேடிக்கொண்டிருக்கும் இளைஞர் திரு ஜெயசந்திரன்:

ஆந்திரா மட்டுமின்றி எல்லா மாநில அரசாங்கங்களும், மத்திய அரசாங்கமும்கூட ஒய்வு பெறும வயதை 55 ஆகக் குறைத்து வேலை இல்லாத பல்லாயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முன்வர வேண்டும். ஐம்பது வயதைத் தாண்டினாலே, பொதுவாக எல்லோருக்கும் ஒரே மாதிரியான வேலை செய்வதன் காரணமாய் அலுப்பு சலிப்பு ஏற்பட்டுவிடும். அந்தச் சமயத்தில் ஆர்வமும் துடிப்புமுள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதினால் அரசாங்கத்துக்குத்தான் லாபம்.

தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் திரு பாலசுப்பிரமணியன்:

இப்போது ஒய்வு பெறும் 30,000 பேரில் சுமார் 10,000 பேர் எப்படியும் இந்த வருடம் ரிடையர் ஆகவேண்டியவர்கள்தானே?

மேலவை ஒழிக்கப்பட வேண்டுமா?

மேலவை ஒழிக்கப்படக் கூடாது என்கிறார் முன்னாள் முதல்வர் பக்தவத்சலம். ஏன்? காரணங்களை அவரே விளக்குகிறார்.

நிருபர்: ஆந்திர முதல்வர் என். டி. ராமராவ் மேல் சபைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளாரே?

பக்தவத்சலம்: என். டி. ராமராவ் கூறியிருப்பது சரியல்ல. மேலவையின் முக்கியத்துவத்தை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

நிருபர்: முன்பெல்லாம் மேல் சபையில் பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர்கள்தான் இருப்பார்கள். ஆனால் இப்போது அப்படி இல்லையே!

பக்தவத்சலம்: அதற்கு நமது அரசியல்வாதிகள்தான் காரணம். மேல் சபை உறுப்பினராவதற்குச் சில அடிப்படைத் தகுதிகள் வைத்திருக்க வேண்டும். என்னைக் கேட்டால் 'குறைந்தபட்சம் பட்டப் படிப்புப் படித்திருக்க வேண்டும்; நாற்பது வயதாகி இருக்க வேண்டும்' என்பேன்.



நிருபர்: இப்போதெல்லாம் அரசியல் கட்சிகள் சில நபர்களைத் திருப்தி செய்ய எம். எல். ஸி. பதவி தருகின்றனவே இது சரியா?

பக்தவத்சலம்: இது தவறு என்று சொல்ல மாட்டேன். ஆனால் அரசியல் கட்சிகள் அப்படி சில நபர்களை மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கும்போது, குறைந்தபட்சம் அந்த நபர் அறிவு முதிர்ச்சியும், ஏதாவது ஒரு துறையில் நல்ல அறிவையும் பெற்றிருக்கிறாரா என்று பார்த்து விட்டுத் தேர்ந்தெடுப்பது நாட்டுக்கு நல்லது.

நிருபர்: ஒரு மசோதாவைப் பற்றியோ அல்லது சட்டத் திருத்தத்தைப் பற்றியோ கருத்துக் கூற மேல் சபை தேவையில்லையென்றும் சிறிய அறிஞர் குழு ஒன்று போதும் என்றும் என். டி. ஆர். சொல்கிறாரே?



ஆக வேலை வாய்ப்பு புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது 20,000 பேருக்குத்தான். அதுவும் இந்த ஒரு வருடம் மட்டும்தான் சாத்தியம். புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு வேலை தரும்படி இருந்தால் தான் சிறப்பாக இருக்கும். நாட்டில் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும். இப்போது இடது கையிலிருந்து வலது கைக்கு மாற்றிக் கொள்கிற கதைதான்.

சில மாதங்களில் ஓய்வு பெற இருக்கும் திரு குப்புசாமி:


அறுபது எழுபது வயதில் கூடத் திடமாகத் வேலை செய்பவர்களும் இருக்கிறார்கள். நாற்பதிலேயே வேலை செய்யக் கஷ்டப்படுகிறவர்களும் இருக்கிறார்கள். இந்த நிலையில் 55 ஆகக் குறைத்திருப்பது மிகக் கொடுமை. இன்னும் மூன்று வருடம் கழித்து ரிடையர் ஆகவேண்டிய ஒருவரை இப்போதே வீட்டுக்குப் போ என்று அனுப்பலாமா? இதை மனிதாபிமானத்தோடு கொஞ்சம் சிந்திக்க வேண்டும். அவருக்கு எத்தனை பிரச்னைகளோ? இப்போது 58 அடுத்த வருடம் 57 அதற்கடுத்து 56, அடுத்து 55 என்று படிப்படியாய்க் கொண்டு வந்திருக்கலாம். அப்போது சம்பந்தப்பட்டவர்கள் முன்னெச்சரிக்கையுடன் தங்கள் வாழ்க்கையைத் திட்டமிட்டுக்கொள்வதற்கு அவகாசம் இருந்திருக்கும்.

ரிடையராகிவிட்ட திரு நடராஜன்

நல்ல அனுபவம் நிறைந்த அரசு அலுவலர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, முன் அனுபவம் இல்லாத இளைஞர்களை வேலைக்கு எடுக்கப் போகிறார்கள். 55 வயதுக்கு மேலானவர்கள் முதலமைச்சராயும், மந்திரியாயும் இருக்கலாமாம். ஆனால் அவர்களுக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரிகளும், பணியாளர்களும் 55 வயதில் ரிடையராகிவிட வேண்டுமாம்.

பேட்டி:

எல். சந்திரமௌலி



திரு கெ. குப்புசாமி



திரு ஜெயசந்திரன்



திரு பாலசுப்ரமணியன்

பக்தவத்சலம்: அந்த அறிஞர் குழு சொல்லும் கருத்தெல்லாம் பொதுமக்களுக்குத் தெரிய வாய்ப்பு இருக்காதே. ஆனால் மேலவை என்று ஒன்று இருந்தால், அறிஞர்களின் கருத்து வெளிப்பட வாய்ப்பு இருக்கிறதே! அங்கு அவர்களுக்குப் பாதுகாப்பு இருப்பதால் மனம் விட்டுப் பேசுவார்கள்.

நிருபர்: மேலவையை நிர்வகிப்பதில் ஏகப்பட்ட செலவு ஆகிறது என்றும் சிக்கனத்தைக் காரணம் காட்டி அதை ஒழிப்பதுதான் சரி என்றும் சொல்கிறார்களே!

பக்தவத்சலம்: (சற்றுக் கோபத்துடன்): இந்த அரசுகள் ஏகப்பட்ட வழிகளில் எக்கச்சக்கமாகப் பணத்தை விரயம் செய்து வருகின்றன. உதாரணமாக இந்த சட்டசபை உறுப்பினர்களும் மேல் சபை உறுப்பினர்களும் வெளி நாடு சென்று வருவதில் மிக அதிகமாகச் செலவாகிறது. அதைக் குறைத்தாலே போதும். மேலவையை நிர்வகிப்பதில் ஏற்படும் செலவு அப்படி ஒன்றும் அதிகமில்லை.

நிருபர்: மேல் சபை இருந்துதான் ஆக வேண்டும் என்று நீங்கள் சொல்வதற்கு முக்கிய காரணம் ஒன்றைக் கூற முடியுமா?

பக்தவத்சலம்: எந்த மசோதாவானாலும் சட்டத் திருத்தம் ஆனாலும் சட்ட மன்றத்தில் ஆளும் கட்சி பெரும்பான்மையாக இருப்பதால் மிகச் சுலபமாக அங்கீகரிக்கப்பட்டு விடும். ஆனால் மேலவையில் தான் மசோதாக்களும் திருத்தங்களும் தீவிரமாக விவாதிக்கப்பட வாய்ப்புள்ளது. மேலும் விஷயம் தெரிந்த அறிஞர்கள் இருப்பார்கள். அவர்கள் சொல்லும் சில திருத்தங்களை ஏற்றுக்கொண்டால் பின்னால் நீதி மன்றங்களில் திருத்தங்கள் நிராகரிக்கப்படாமல் செல்லுபடியாகும். 1960–1965 கால கட்டங்களில் வக்கீல் பாலசுப்பிரமணிய ஐயரும் நீதிபதி பதஞ்சலி சாஸ்திரி அவர்களும் தமிழக மேலவையில் உறுப்பினராக இருந்து நிறைய உபயோகமான திருத்தங்களைச் சொல்லி, அரசுக்கு வழிகாட்டியிருக்கிறார்கள்.


பேட்டி: பிரியன்

கவிஞன் உள்ளத்தில் குமுறல் தானா?

● அன்புடன் கொஞ்சம் வம்பு' பகுதியில் (13—2—83 கல்கி) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழியில் எம்.ஏ., எம்.எஸ்.ஸி., பயிலும் மாணவர்களுக்கு பிரவரியாகியும்கூட முதல் தொகுப்பு பாடங்கள் அனுப்பிவைக்கப்படவில்லை என்று வெளியிட்டுள்ளீர்கள். இது உண்மைக்கு மாறான செய்தியாகும். ஜனவரி 20-ஆம் தேதி முதல் பாடங்கள் அனுப்பப்படுகின்றன.

மேலும் தொடர்பு வகுப்புகள் நடத்தியும் மற்றும் எல்லாப் பாடங்களும் அனுப்பிப் போதிய அவகாசம் கொடுத்த பிறகுதான் தேர்வுகள் நடைபெறும். தேர்வுகள் செப்டம்பர் திங்களுக்குப் பிறகு நடைபெறும்.

அண்ணாமலைநகர் டி. ஆர். இராமசந்திரன்
இயக்குநர்,
அண்ணாமலை பல்கலைக் கழகம்



[மேற்கண்ட கடிதத்தை, எனக்கு தகவல் சொன்ன மாணவரிடம் காட்டியபோது அவர் சொன்னார்: "வழக்கமாக் பரீட்சைகள் மே, ஜூனில் நடக்கும். நாங்கள் ஆகஸ்ட்டில் விண்ணப்பித்தும், பாடங்கள் வர ஆரம்பித்ததென்னவோ ஜனவரி கடைசியில் தான். ஐந்து மாதத்துக்குள் எல்லா பாடங்களும் வந்து, ஒழுங்காகப் படித்து, பாஸ்பண்ண வேண்டுமே என கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். இவர்கள் பரீட்சை செப்டம்பருக்குப் பிறகுதான் என்கிறார்கள். இதனால் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டாலும், ஒராண்டு படிப்பை ஒன்றேகால் வருடத்துக்கு நீட்டி, அநியாயமாக் மூன்று மாதங்களைப் பாழாக்குகிறார்களே என்ற ஆதங்கம்தான் மேலிடுகிறது"

சென்னை ஜூலி]

● அண்ணாமலை பல்கலைக் கழகத்துக்கு அண்ணன்தான் சென்னைப் பல்கலைக் கழகமும். சென்னை பல்கலைக் கழகம் ஜூலை 81ல் தபால் மூலம் கல்வியைத் துவக்கியது. அக்டோபர் 82 முடிவில் பி.ஏ., பி.எஸ்ஸி, பி.காம் தேர்வுகளை முடித்தது. இடையே 16 மாதங்கள் இருந்தும் பாடங்கள் சரியான நேரத்தில் மாணவர்களுக்கு அனுப்பப்பட-வில்லை. தபால் மூலம் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மிகவும் அவசியமான "ரெஸ்பான்ஸ் ஷீட்" ஒன்றுகூட அனுப்பப்படவில்லை. தேர்வுக்குப் பிறகும் கூட முதலாண்டு பாடங்கள் அனுப்பப்பட்டன! இரண்டாம் ஆண்டுப் பாடங்கள் எதுவும் இன்னும் அனுப்பப்படவில்லை. தபால் மூலம் படிக்கும் மாணவர்களுக்குத் தபால் செலவுக்கென தனியாக 50 ரூபாய் கேட்கும் பல்கலைக் கழகம் மாணவர்களுக்குச் சரியான முறையில் வழிகாட்டவில்லை.

மேலப்பாளையூர் குமாலி

● நாகர்கோவிலில் 13—2—83 அன்று நடைபெற்ற இந்து மாநாட்டைத் தடை செய்யும் நோக்கத்தில் தமிழக அரசு 144 தடை உத்தரவு பிறப்பித்தது நியாயமா? போலீஸார் இந்துக்களின் புனித ஸ்தலமான நாகராஜா கோவிலின் உள்ளே சென்று இந்து பக்தர்களை அடித்தது நியாயமா? வீடு வீடாகச் சென்று அவர்கள் பொதுமக்களை அடித்தது எந்த வகையில் சரியானது? இவையெல்லாம் விடப் பெரிய அநீதி இவற்றுக்கு நீதி விசாரணை தேவையில்லை என்று முதல்வர் கூறுவதுதான்.

நாகர்கோயில் ம. இரமேஷ்

● "இவர்களுக்கு ஒட்டும்; இவர்களுக்கு ஒட்டாது அது என்ன?" பகுதியைக் கண்ட போது தோன்றியது இது:

இவை ஒட்டும், ஆனாலும் ஒட்டாதவை!
Araldite, Fevicol, Quickfix

பெங்களூர் கல்யாணி விஜயன்

● வீடியோவரை காத்திருவில் குறிப்பிட்டுள்ளது போல் ஆய்புவான் என்று சிங்கள வார்த்தை கிடையாது. "ஆய்போவன்" என்றால்தான் வணக்கம் என்று அர்த்தம். மற்ற மூன்று வார்த்தைகளும் திருத்த வேண்டியவையே!

திருப்பூர்-4 இரஞ்சிதவல்லி இரத்தினம்

● உண்ணாவிரதத்தால் ஒரு லாபம் இருப்பதைத் தலையங்கத்தில் கூறுது விட்டு விட்டீர்களே! மக்களின் பிரச்னைகள் அரசியல்வாதிகளின் பொழுதுபோக்காகியுள்ளன.

சென்னை-5 வே. இராசேந்திரன்


● "இருக்கிற ஒன்றிரண்டு பேரிடமும் தகவல்களைச் சேகரிக்கச் சென்றபோது, கௌரவம் காரணமாக உண்மைச் செய்திகளைக் கூட ஆதாரம் தெரிந்திருந்தும் தெளிவாக்கத் தயங்கினார்கள்" என்று ம. பொ. சி. குறிப்பிட்டுள்ளதைப் படித்தவுடன், விடுதலை வீரரின் மகன் என்பதால் மட்டுமல்லாமல் இந்தியக் குடிமகன் என்பதாலும் மிகவும் மன வேதனை அடைந்தேன்.

லால்குடி ஆ. சந்திரசேகரன்

● கவிஞன் அழகை, இயற்கையை எவ்வளவுதான் வர்ணித்தாலும் அவன் மனம் அடித்தளத்தில் — மனித குலத்தின் மனக் குமுறல்களையே தாங்கி நிற்கின்றது என்பதை மு. மேத்தாவின் புதுக் கவிதையின் கடைசி வரிகள் நிரூபித்தன.

வளவனூர் வி. ஆர். நாகராஜன்


தொழில் வளர்ச்சியும் வெள்ளிப் புரட்சியும்!



⌘ பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை

குஜராத் மாநில அரசு அண்மையில் சில தமிழக பத்திரிகைப் பிரதிநிதிகளை வரவேற்று மாநில வளர்ச்சியைக் காணச் செய்தது. 'கல்கி' சார்பில் சென்ற துணை ஆசிரியரின் அனுபவங்கள்.

'**வா**டோதரா' என்ற பெயரைக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? மண்டையைக் குழப்புகிறதா? நாங்களும் அந்த ரயில் நிலையத்தில் அந்தப் பெயரைக் கேள்விப் பட்டுக் குழம்பிப்போனோம். 'வாடோ



⌘ வெள்ளைப் புரட்சிக்கு உதவும் கரிய எருமை

தரா' என்ற குஜராத்திப் பெயரை உச்சரிக்கச் சிரமப்பட்ட அன்றைய ஆங்கில அரசாட்சியினர் 'பரோடா' என்ற நாமத்தைச் சூட்டினர்! குஜராத் மக்கள் தங்கள் மொழியில் அதற்குப் பெயர் சூட்டி ரயில்வே ஸ்டேஷனை 'வாடோதரா' என்று வழங்க வைத்து விட்டனர்! மாயூரம் மயிலாடுதுறை ஆன கதை தான்!

● ● ●

குஜராத் மாநிலத்தில் சென்ற வருஷம் அடித்த புயல் மின்சக்திக் கம்பங்களையும் மின் இணைப்புக்களையும் அதிகமாகப் பாதித்து விட்டது. குஜராத் மின்சார போர்டு இப்பொழுது மீட்புவேலையில் துரிதமாக இயங்கி வருகிறது. குஜராத் மாநிலத்தில் மின்சக்தி அபிவிருத்திக்குப் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. வாணக்போரி எரிசக்தி மின்நிலையம், உக்காய் எரிசக்தி மின் நிலையம் — ஐந்தாவது கட்டம், கடானு நீர் மின் நிலையம், சிக்கா எரிசக்தி மின்நிலையம் ஆகியவை 2000 மெகாவாட் மின்சக்தி தரவிருக்கின்றன. பருவ மழை பொய்த்ததன் காரணமாகக் குஜராத்தில் மின்வெட்டு உண்டு. விரைவில் இது நீங்கலாம் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் குஜராத் மின்சார போர்டு நிர்வாக அங்கத்தினர் திரு ரங்கநாதன்.


● ● ●

வாடோதரா ஒரு தொழில் நகரமாகப் பரிணமிக்க மிகப் பிரும்மாண்டமான குஜராத் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, இந்தியன் பெட்ரோ கெமிகல்ஸ் கார்ப்பரேஷன் ஆலை முதலியவை உதவி வருகின்றன. வடக்கு குஜராத்தில் அங்கலேஷ்வரில் எண்ணெய் கண்டுபிடிப்பே குஜராத் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை வாடோதராவில் 1965ம் வருஷம் உருவாக வழி பிறந்தது. 56 கோடி ரூபாயில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை இந்திய என்ஜினியர்களே உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பது பெருமைப்படக்கூடிய காரியம்.

வாடோதரா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் பெண்மணிகளுக்குத் தேவையான சமையல் காஸ் ஒரு நாளைக்குப் பத்தாயிரம் சிலிண்டர்களில் அடைக்கப்படுகிறது. மேலும் இவ்வாலை பெட்ரோலியம் தயாரிப்புப் பொருள்களை ஒவ்வொரு நாளும் 600 ரயில் வாகன்களில் ஏற்றி அனுப்புவது ஆசியாவிலேயே மிகப் பெரிய சாதனை!

சென்னையில் தண்ணீர்க் கஷ்டம். இந்தத் தண்ணீர்க் கஷ்டத்தைத் தீர்க்க குஜராத் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிர்மாணித்துள்ள பிரெஞ்சு முறை நீர்க் கிணறுகள் உதவலாம் என்று தோன்றுகிறது! மஹி நதியில் இந்த பிரெஞ்சு முறை ஆழ்கிணறுகளை நிறுவி ஒரு நாளைக்கு 20 மில்லியன் காலன் நீரைஎண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு எடுத்துச் செல்கிறார்கள். கழிவு நீரையும் சுத்த நீராக்கும் வசதி உண்டு. சென்னை நகரசபை பார்த்தறிய வேண்டிய நீர்த் திட்டம் இது!

பெட்ரோ கெமிகல் பொருள்கள் தயாரிப்பு விஸ்தரித்ததன் விளைவாக வாடோதராவில் இந்தியன் பெட்ரோ கெமிகல்ஸ் கார்ப்பரேஷனை உருவாக்கிற்று இந்திய சர்க்கார். பிளாஸ்டிக்கில்தான் எத்தனை எத்தனை பொருள்கள்! பக்கெட், டம்ளர், சமையலறைப் பாத்திரங்கள், டப்பாக்கள் — பிளாஸ்டிக் யுகத்தில் ஆகாத பொருள்கள் இல்லை! ஓடைகளில் நீர்க் கசிவைத் தடுக்க Polyethylene or PVCFilm தயாரிப்பதுதனிச்சிறப்பு.



✖ இந்தியாவிலேயே இது போன்ற சாதனை வேறு இடையாது. பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து வெளிப்படும் கழிவு நீர் தூய்மைப் படுத்தப்பட்டு விவசாயத்துக்குப் பயன் படுகிறது.

உலகில் ஸ்பெயின் போன்ற நாடுகளில் சிமெண்ட் பயன்படுத்துவதற்குப் பதில் Polyethylene பிலிமைப் பயன்படுத்தி 30 மில்லியன் நீரைத் தேக்கங்களில் பத்திரமாய்ப் பாதுகாக்கிறார்கள். கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் இந்த Polyethylene பிலிமைப் பயன்படுத்தினால்ஏராளமாக நாசமாகும்நீர்க் கசிவைக் குறைக்கலாம்!

● ● ●

'வெள்ளைப் புரட்சி' நடந்த ஆனந்துக்குச் செல்கிறோம்.

1945ம் வருஷத்திலேயே பம்பாய்க்குக் குஜராத்திலிருந்துதான் பால் விநியோகமாயிற்று. விவசாயிகளிடமிருந்து இடைத் தரகர்கள் லிட்டருக்கு முப்பது பைசா அடித்தனர். இதை ஒழிக்க சர்தார் வல்லபாய் பட்டேல் கூட்டுறவு முறையில் பால் தொழிலை நிர்வகிக்க வழி வகுத்தார். இது வெள்ளைப் புரட்சியைத் தோற்றுவித்தது! சுமார் பத்து ஆண்டுகளில் படிப்படியாக பல்வேறு தலைவர்களால் வளர்க்கப்பட்டு, கடைசியில் 1955 வருஷம் 'அமுல்' என்ற நாமகரணத்தோடு பால் பவுடர் தயாரிப்பு ஆலையை நிர்மாணித்தனர். இன்று இந்தப் பால் பவுடர் ஆலை ஒரு நாளைக்கு ஏழு லட்சம் லிட்டர் பாலை ஏற்று பால் பவுடர், வெண்ணெய்,சாக்லெட் என்று உற்பத்தி செய்து நாட்டுக்கு வழங்குகிறது. வருஷத்துக்கு 565.5 மில்லியன் ரூபாய் புழங்கும் இந்த அமுல் ஆலையை நிர்வகிப்பவர்கள் ஆறு லட்சத்துப் பதினோராயிரம் விவசாயிகள் என்பது பெருமைப்படக் கூடிய சாதனை. குஜராத் மாநிலத்தில் 17 மாவட்ட யூனியன்கள் 3762 கிராம கூட்டுறவு பால்சங்கங்கள் இயங்குகின்றன. அதோடு யூனியனில் 8,819 பேர்களுக்கும் கிராமக் கூட்டுறவில் 6,044 பேர்களுக்கும் வேலை வாய்ப்பு உண்டு.

அதிகாலையில் கூட்டுறவு பால் சங்கத்திற்குப் பெரிய பாத்திரங்களில் பாலைக் கொணர்ந்து தந்து பதிவு செய்து முந்தின நாள் பாலுக்கு விவசாயிகள் பணம் பெற்றுச் செல்வது கண்கொள்ளாக் காட்சி. கிராமப் புறப் பொருளாதாரத்தை விருத்தி செய்யும் ஆனந்த் வெள்ளைப் புரட்சி இந்தியாவுக்கே ஒரு வழிகாட்டி.

பால் சுத்திகரிக்கப்பட்டு, பதனிடப்பட்டு டில்லி,பம்பாய், கல்கத்தா நகர்களுக்கு ரயில் வாகனங்களில் செல்கிறது. கைபடாமல் பால் பவுடர் டின்கள் தயாரிக்கப்படுகின்றன. வெண்ணெயும் பாலாடைக் கட்டியும் தயாரிக்கப்பட்டு மலை மலையாகக் குவிகின்றன.

—பி.எஸ்.எம்.

அட்டைப் படத்தில் மகாராணி!



○ எந்த தேசத்து ராணி என்று கேட்காதீர்கள்!
○ பெயரே மகாராணிதான்!
○ பரதநாட்டியம், குச்சிப்புடி, ஒரியண்டல் நடனங்கள் ஆடுவதுடன் பிறருக்கும் கற்றுத் தரும் மகாராணி—
○ என். டி. ஆர். ஆளும் மாநிலத்தில் பிரசித்தம். அவர் இங்கு காட்சியளிப்பது—
○ குஜராத்தி நடன உடையில்!
○ வண்ணப்படம்:
சரஸ்வதி சத்தியமூர்த்தி

கல்கி



1983 மார்ச் 6
துந்துபி மாசி 22
மலர் : 41 இதழ் : 32

பட்ஜெட் பீதி

ஒவ்வொரு பட்ஜெட்டும் நாட்டின் பொருளாதாரத்தை அபி விருத்தி செய்ய வேண்டும். ஆனால் நமக்கோ ''ஐயோ! நம்மை மேலும் கசக்கிப் பிழிய இன்னொரு பட்ஜெட் வரப்போகிறதே'' என்று பீதியாக இருக்கிறது. ஏற்கனவே வறட்சியினால் விவசாய உற்பத்தி குறைந்து மக்களை வறுமையும் பிணியும் வருத்தி வருகிறது. தொழிலகங்களில் உற்பத்தி பாதிப்பும், பொருளாதார மந்தநிலையும், விலைவாசி உயர்வும் வாழ்க்கையை நரகமாக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் அடுத்த பட்ஜெட்டைத் தயாரிக்கும் நிதி அமைச்சர் கருணையோடு செயல்பட வேண்டும். அவர் நெஞ்சில் ஈரமிருக்கிறதா இல்லையா என்பது இந்த இதழ் உங்கள் கரங்களை அலங்கரிக்கு முன்பே தெரிந்து போகும்.

சென்ற ஆண்டு பட்ஜெட்டில் துண்டு விழுந்தது 1,365 கோடி ரூபாய். இந்த ஓராண்டில் இத்தொகை இரட்டிப்பாகியுள்ளதாகப் பொருளாதார நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர். அதாவது இந்த அளவுக்கு நோட்டு அச்சடித்துச் சமாளித்துள்ளது அரசு. இப்படி ஆண்டுக்கு ஆண்டு பண வீக்கம் அதிகரித்துக் கொண்டே போனால் ரூபாயின் மதிப்பு இருபது காசாக வீழ்ச்சியடைவதில் வியப்பென்ன?

பட்ஜெட் ரொம்பக் கொடுமையானது என்று தோன்றாதிருக்க இப்போதெல்லாம் ஒரு தந்திரத்தைக் கையாள்கிறார்கள். நாடாளு மன்றத்தின் பட்ஜெட் தொடருக்குச் சில காலம் முன்பாகவே அரசு ஆணை மூலம் விலைகளை உயர்த்தி விடுகிறார்கள். சில தினங்கள் முன்பு இப்படித்தான் கெரசின், டீசல் போன்ற பெட்ரோலியம் பொருட்களின் விலைகளை அரசு ஏற்றியது. இதன்மூலம் ஆண்டொன்றுக்கு 500 முதல் 800 கோடி வரை அரசுக்கு அதிகப்படி வருமானம் கிட்டும். உலகச் சந்தையில் பெட்ரோலியம் பொருட்களின் விலை சரிந்து வருகையில் நமக்கோ விலை உயர்வு! இதனால் அரசு இரட்டிப்பு லாபம் பெறுகிறது. வெளிநாட்டு மார்க்கெட்டில் குறைந்த விலை தருகிறது; நமக்கு அதிக விலைக்கு விற்கிறது! 'இந்த அநியாயத்தை யாரிடம் சொல்லி அழ?' என்று யோசித்து முடிவதற்குள் இப்போது தபால் இலாகாவும் நாடாளு மன்றத்தைப் புறக்கணித்து, தபால், தந்தி, டெலிஃபோன், கட்டணங்களை உயர்த்தியுள்ளது. ரயில்வே பட்ஜெட்டும் தன் பங்குக்கு சரக்கு, பயணக் கட்டணங்களை ஏகமாக உயர்த்தியாயிற்று. இவை தவிர இவ்வாண்டு பட்ஜெட்டிலும் வரி விதிப்பு மிகக் கடுமையாக இருக்கும் என்றே எதிர்பார்க்கலாம்.

பட்ஜெட் மூலம் திரட்டப்படும்நிதியில் பெரும்பகுதி அரசாங்கச் செலவினங்களுக்கே போய்விடுகிறது. இவை உற்பத்திக்கு உதவுவதில்லை. இதுதான் நமது கஷ்டங்களுக்கெல்லாம் மூல காரணம். 145000 கோடி தேசிய வருமானத்தில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் 46,000 கோடியைச் செலவழித்து விடுகிறார்கள். இதில் மத்திய அரசின் பங்கு ரூ. 30,000 கோடி. இந்த வீண் செலவுதான் நமது பொருளாதாரத்தில் புறப்பட்டுள்ள புற்றுநோய். ஆனாலும் இது குறித்து யாரும் ஏதும் செய்வதில்லை.


ஓர் ஆரம்பமாக இதில் இருபது சதம் தைரியமாக வெட்டுவதுடன் லஞ்ச ஊழலை வளர்க்கும் பெர்மிட் லைசென்ஸ் முறையை ஒழித்து, கறுப்புப் பணப் பொருளாதாரத்துக்கு உரமிடும் அபரிமித வரிகளைக் குறைத்தால் வறுமை ஓட்டம் பிடிக்கும்.

'பூவிலிருந்து தேனை மலருக்குத் துன்பமின்றி வண்டு எப்படி எடுத்துக் கொள்கிறதோ அப்படி மக்களுக்கு வேதனை இன்றி வரி விதிக்க வேண்டும்' என்றார் ராஜாஜி. கேட்பவர்தான் இல்லை!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்


சரக்கு பயணக் கட்டணங்கள் உயர்வு
489 கோடி


கோரிக்கைகள்
கோரிக்கைகள்
கோரிக்கைகள்


ஆர்.வி கண்டனம்
சால்ஜாப்புகள்
தமிழகம் தொழிலில் பின்னடைந்துள்ளதற்கு ஆர்.வி - தி.மு.க. கண்டனம் தெரிவித்துள்ளனர்-
தி.மு.க. கண்டனம்

'வீடியோ' வரை காத்திரு! 8

கதை: ஜே.எஸ்.ராகவன்
சித்திரம்: செல்லம்





சினிமா, சித்திரத்தொடர் கதையிலெல்லாம் இது சகஜம், ஜூஜு.
அம்மாடி! எனக்கு என்ன ரிலீஃப் தெரியுமா? சுரேஷ்! யூ. ஆர் லைக் ருட் லிஃட் எம். ஜி. ஆர்! அவர்தான் மாறு வேஷம் போட்டுண்டு ஹீரோயினை 17 வது ரீலில் காப்பாத்துவார்.
ஜூஜு! நம்மை எதிரிகள் சிறைப் படுத்திவிட்டார்கள்! கலங்காதே! என்னை ஈன்ற தாயின் மீது ஆணை! வஞ்சகர்களிடமிருந்து உன்னை மீட்பேன்! இது சத்தியம்!!... தாய் மேல் ஆணைய்ய்ய்....
பயங்கரமாப் பாடறீங்களே! ...சுரேஷ் தாய்னு சொன்ன உடனே எங்கம்மா ஞாபகம் வருது. இதைப் பத்திக் கேள்விப் பட்டாங்கன்னு ...ஐயோ!
ஜூஜு! நீ வேற எந்த நகை அணியா விட்டாலும் பொறுமை என்கிற நகையை அணிந்து பெருமை கொள்ள வேண்டிய சமயம் இது.
சுரேஷ் எங்கப்பா ஃப்ரெண்டு என்னை ஏன் அடைச்சு வெச்சிருக்காரு? நீ எப்படி, எதுக்கு என்னைத் தொடர்ந்து வந்தே?
அதைப் பத்தி அப்புறம் சொல்றேன். அவங்க வரதுக்கு முன்னாடி மாறு வேஷம் போட்டுக்கணும்....மீசை ஒட்டிக்கிச்சா?
சற்று நேரத்தில் டில்லிபாபுவும் யோகேஷும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருகிறார்கள்.
மன்னர்களே வருக! வருக!! ஹீரோயினைக் கடத்திய மாமன்னர்களே வருக, வருக!!
ஹீ...ஹீ...ஹீரோயினு. என்னடா உளர்றே?
ஆமா ஜூஜு உங்க கண்ணுக்கு ஹீரோயினா தெரியலையா?
தொடரும்

தொடாமலே சுட்ட தீ!

அன்னம்

வேணு நிமிர்ந்து பார்த்தான்.

எதிரிலிருந்த அறையினுள்ளே பவானி தன் இருக்கையினின்று எழுந்து நின்று, வலது கையை நீட்டி ஒருவரை வெளியே போகச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் முகம் ஜிவுஜிவு என்று சிவந்திருந்தது. கண்களில் கோபம் கொந்தளித்தது. அவள் உதடுகள் உருவாக்கிய சொற்கள் தெளிவாகக் காதுகளில் விழாமல் போயினும் அவை வெப்பம் கக்கும் கனல் துண்டங்கள் என்பது வேணுவுக்குப் புரிய வந்தது.

தலையைத் தொங்கப் போட்டபடி வெளியே வந்தவன் சாரதி. வேணுவுக்கு உள்ளே நடந்தது தெரிய வந்து விட்டது என்பதை உணர்ந்தவுடன் அவன் முகம் மேலும் அவமானத்தால் கலங்கியது.

அவன் பின்னாலேயே வெளியே வந்த பவானி "பாருங்கள் ஸார்! இன்னிக்கு சாயங்காலம் சினிமா போகலாம் வருகிறாயா என்று கேட்கிறார். வேலைக்குப் போகும் பெண் என்றால் அப்படி இளப்பமாகப் போய் விட்டதா?... நான் ஒரு கண்ணியமான குடும்பத்தில் பிறந்தவள். ஒரு பெரிய ஆபீஸரின் மனைவி. இரண்டு குழந்தைகளின் தாய்... எனக்கே இப்படி யென்றால்..."

வேணுவின் நிலைமை சங்கடமாக இருந்தது. பொருளில்லாத அசட்டுச் சிரிப்பை உதிர்த்து வைத்தான். இத்தனையும் 'லஞ்ச்' டயத்தில் நடந்ததால் வேறு யாருக்கும் தெரியாமல் போய் விட்டது. இல்லையானால் மானேஜர் காதுவரை எட்டி 'சஸ்பென்ஷனி'ல் வந்து முடிந்திருக்கும்.

வேணுவுக்கு உடலெல்லாம் வியர்த்தது. அவனும் கல்யாணமானவன்தான். குழந்தைக்கும் தந்தை. இருந்தாலும் கூட இந்தப் பவானியைப் பார்க்கும்போது— அவள் சந்தன நிற மேனியை நோக்கும்போது— அவள் பல் வரிசை லேசாகத் தெரியச் சிரிக்கும் போது – அவள் அழகான நடையில் இளமை கொப்பளிக்கும்போது – எத்தனை முறை, எத்தனை கனவுகள் கண்டிருக்கிறான்? தனக்கு ஏன் இப்படி ஒருத்தி வாய்க்கவில்லை என்று ஏங்கியிருக்கிறான்.

நல்ல வேளையாக மனத்தில் எழுந்த சபலத்தை அடக்கியாகி விட்டது. இல்லையென்றும் இப்படி ஏதாவது வாங்கிக் கட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

அன்று மாலை. வேணு வெளியே வந்தான். ஆகாயத்தில் மேகங்கள் இருட்டிக் கொண்டு வந்தன. இரண்டு மூன்று மாதங்களாக மழையே இல்லை. அவன் பஸ் நிலையத்தை அடைவதற்குள் மழை பலக்கவே ஓட்டமாக ஓடி 'பஸ் ஷெல்ட்டரு'க்குள் அடைக்கலம் புகுந்து கொண்டான்.

'படபட'வென்று ஒரு ஆட்டோ ரிக்ஷா வந்து நின்றது. உள்ளே உட்கார்ந்திருந்தது பவானிதான்.

"ஏறிக்கொள்ளுங்கள் ஸார்!... வீட்டில் விட்டுப் போகிறேன்!" என்றாள்.

வேணுவுக்கு உதறல் எடுத்தது. "வேண்டாம்... ரொம்ப ரொம்ப தாங்க்ஸ்... நான் பஸ்ஸிலேயே போய் விடுகிறேன்..."

"பரவா யில்லை ஸார்!.... ஏறிக்கொள்ளுங்கள்... ஒரு அவசரத்துக்கு உதவாவிட்டால் எப்படி?"

அருகில் காத்துக் கொண்டிருந்தவர்கள் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தனர். வேணு ஏறி உட்கார்ந்தான். நத்தைக் கூட்டுக்குள் முடங்குவது போல் ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டான். தவறிப்போய்க் கூட அவள் மேல் படாமல் கவனமாக இருந்தான்.

ஆனால் அவள் விகல்பமில்லாமல் சிரித்துக் கொண்டே வந்தாள். ஒரு முறை ஆட்டோ ஒரு பள்ளத்தில் விழுந்து எழுந்தபோது, பூப்பந்தாக அவன் மேல் சாய்ந்து விட்டாள். அவள் அருகாமை, அந்த மணம், அந்த வனப்பு – ஐயோ... தன் மனத்தைக் கட்டுப்படுத்த வேணுவுக்குப் பெரிய பிரயாசையாக இருந்தது.

ஆட்டோ பவானியின் வீட்டுக்குத்தான் முதலில் போயிற்று. வீட்டு வாசலில் அவள் பிள்ளை – பத்து வயதிருக்கும் – முழங்கையில் முகத்தைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"என்னடா!... டிபன் சாப்பிட்டாயா இல்லையா?" என்று கேட்டாள்.

அவன் தலையையும் கையையும் வேகமாக ஆட்டினான். "எனக்கு ஒண்ணும் வேண்டாம் போ!"

முதல் முதலாக அவள் வீட்டுக்கு வெறுங் கையுடன் போகிறோமே என நெளிந்தான் வேணு.

"டிபன் வேண்டாம் என்றால் பட்டினி கிட. அதற்காக நீ கேட்டதெல்லாம் வாங்கித் தர முடியுமா?" என அதட்டினாள் பவானி.

வேணுவை முன் அறையில் உட்கார்த்தி வைத்துவிட்டுப் பவானி உள்ளே போனாள். "ஒரு நிமிஷம்... ஹார்லிக்ஸ் கரைத்து வருகிறேன்."

வேணு தன் பார்வையை அறையெங்கும் நெளிய விட்டான். மிகவும் கவனத்துடன் எல்லா சாமான்களும் நேர்த்தியாக வைக்கப் பட்டிருந்தன. 'ஷோ கேஸ்' ஒன்றில் வைக்கப் பட்டுள்ள கலைப் பொருட்கள் பவானியின் ரசனையைக் காட்டியது. அதற்கு அடுத்த நிலைக்கண்ணாடியில்....

உள்ளே பவானி தன் உடையை மாற்றுவது துல்லியமாகத் தெரிந்தது. அப்பப்பா! என்ன உடற்கட்டு! யானைத் தந்தம் போல் மின்னிய அந்த அழகு... வேணு வைத்த பார்வையை நகர்த்தவில்லை.

அவள் கொண்டு வந்த ஹார்லிக்ஸைப் பருகியபடி வேணு கேட்டான்: "குழந்தைக்கு என்ன வேண்டுமாம்?"





அருள்வாக்கு

● கானம் பண்ணுவது, நடனம், நாடகம் மூன்றும் சேர்ந்து காந்தர்வ வேதம். இதனுல் நமக்குப் பணம் வராது. வயிறு ரொம்பாது. இவற்றைக் கச்சேரி, ஸதிர் என்று பண்ணுகிறவர்களுக்கு, நடிக்கிறவர்களுக்கு, நடத்துகிறவர்களுக்குத்தான் வயிறு ரொம்புகிறது. பர்ஸ் ரொம்புகிறது. பார்க்கப் போகிற நாம் நம் வயிற்றுக்காக வைத்துக் கொண்டிருப்பதை அங்கே கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருகிறோம். 'யுடிலிடி' என்ற பாயிண்டில் இப்படி நஷ்டப்பட்டாலும் மனஸுக்கு மகிழ்ச்சி உல்லாஸம், உத்ஸாகம், பொழுது போக்கு என்ற லாபம் கிடைப்பதால் இப்படிச் செய்கிறோம். இது மட்டும் 'யுடிலிடி' இல்லையா? கொத்தவரங்காய் வாங்கினுல் சாப்பிடலாம். அதே காசுக்குப் பூ வாங்கி Flower vase ல் வைத்தால் சாப்பிட முடியாதுதான். இருந்தாலும் இதைப் பார்த்தால் நேத்ரானந்தமாய் இருக்கிறது. மனம் குளிர்கிறது என்று, கொத்தவரங்காய் வேண்டாமென்று இந்த 'பொக்கே'யை வாங்குகிறுன் என்றுல்இதற்கு 'யுடிலிடி' இல்லே என்று எப்படிச் சொல்வது??

அன்றாட அலுவல்களில், பொறுப்புக்களில், அனுஷ்டானங்களில் அலுத்துக் களைத்துப் போகாமல் மனஸுக்கு உத்ஸாகம் தரவேண்டியதுதான் என்றே பெரியவர்கள் 'காந்தர்வ வேதம்' என்றுஉபயோகமில்லாததாகத்தோன்றுகிற பாட்டையும், கூத்தையும் வைத்திருக்கிறுர்கள். மற்றவற்றின் உபயோகத்தை நாம் உணர்வதற்கான உத்ஸாகத்தைத் தரும் பெரிய உபயோகம் இவற்றுக்குத்தான் இருக்கின்றன. வாழ்க்கைப் போராட்டத்தில் நமக்கு ஏற்படுகிற பாரத்தை மறந்து கொஞ்ச நேரமாவது இறக்கி வைப்பது 'காந்தர்வ வேதம்' செய்யும் பெரிய உபகாரம்.

-ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

அவன் சிரித்தான். ''ரொம்ப சின்ன விஷயம்.... ஒரு டீ.வி. வேண்டுமாம்!''

''சரியாகத்தான் கேட்டிருக்கிறுன். எவ்வளவு அழகாக அறையை வைத்திருக்கிறீர்கள் டீ. வி. இல்லாதது பெரிய குறைதான்.''

''எனக்கும் ஆசைதான்... திடீரென்று ஐயாயிரத்துக்கு எங்கே போவது?... ஆறு மாதம் போனுல் பார்க்கலாம்.. எனக்கு மட்டும் ஆசை இல்லேயா?''

ஆட்டோவில் ஏறும்போது என்ன சொன்னுன்? 'ஒரு அவசரத்துக்கு உதவாவிட்டால் எப்படி?' வேணுவுக்குக் கையில் கொஞ்சம் பணம் வந்திருந்தது. அது பவானிக்கும் தெரியும். எப்போதோ வரவேண்டியது. மொத்தமாக ஆறுயிரம் கிடைத்திருந்தது.

''இவ்வளவுதானே?... நீங்கள் டீ.வி. வாங்குங்கள்... நான் பணம் தருகிறேன்.... ஆறு மாதத்தில் பணம் வரும்போது திருப்பிக் கொடுங்கள்....''

''வேண்டாம் ஸார்!... எனக்கு ஆசை காட்டாதீர்கள்... அவர் வெளியே கடன் வாங்கி அப்படி என்ன டீ. வி.?'' என்று ரொம்பக் கோபிப்பார்.''

''அப்படி அவரிடம் சொல்வானேன்? ஆபீஸில் 'லோன்' போட்டுத் தவணை முறையில் வாங்கியதாகச் சொல்லுங்கள்!''

''நான் ரொம்பவும் திடமாக இருந்தேன். நீங்கள்தான் எனக்கு இப்போது ஒரு ஆசையை உண்டாக்கி விட்டீர்கள்.''

அவன் சாப்பிட்ட கோப்பையை எடுக்க அவள் குனிந்தபோது அவள் சேலே முந்தானே நழுவியது. அதை அவள் எடுத்துச் சரிசெய்த அந்தச் சில கணங்களில் வேணுவின் நயனங்கள் அவள் விழிகளில் உறவாடின.

பவானியும் ஒன்றும் அசைக்க முடியாத பாறை இல்லே... இவனுக்கும் ஒரு வலே இருக்கிறது. காலா காலத்தில் இந்தக் கனியையும் பழுக்க வைக்கலாம்.

அடுத்த வாரம் பவானியின் வீட்டுக்கு டீ. வி. வந்து விட்டது. வேணுவும் உடன் இருந்து ரசித்தான். ரூபவாஹினியில் காட்டப்பட்ட ஆங்கிலப் படத்தில் கும்மாளமிட்ட ஜோடியைத் தானும் பவானியுமாக எண்ணிக் கொண்டான்.

''நம் ரமாவுக்கு வயதாகிக் கொண்டே போகிறது. ஏதாவது நகை நட்டு வாங்க வேண்டாமா?... ஆபீஸில் ஏதோ பணம் வரும் என்றீர்கள்... என்ன ஆயிற்று?'' என்று கேட்டாள் அவன் மனேவி ராதா.

''அதெல்லாம் ஒன்றும் கிடையாது என்று சொல்லி விட்டார்கள்'' என்று அந்த விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

பவானி கூப்பிட்டோ கூப்பிடாமலோ வேணு அடிக்கடி அவள் வீட்டுக்குப் போனுன். பவானியின் கணவன் உற்சாகமாக வரவேற்றுன். பழகினுன்.

மாதங்கள் கரைந்தன. வேணு எண்ணியபடி ஒன்றும் நடக்கவில்லே. அவள் ரொம்பவும் எச்சரிக்கையாக இருந்தாள். வேணு வரும்போது எல்லாம் புன்சிரிப்போடு வரவேற்றுள். ஹார்லிக்ஸ் கொடுத்தாள். டீ. வி. பார்க்க அனுமதித்தாள். ஆனுல்

Choose MELTRON Super Acoustic Cassettes

—Super-sensitive, strong tape that will not snap or tear. Guarantees superb sound.
—Precise mechanism and perfectly balanced rollers for smooth tape running.
—A choice of running lengths — C-60, C-90 in cassettes.
—Competitively priced —and freely available.

MELTRON

Maharashtra Electronics Corporation Limited

- Plot No. 214, Backbay Reclamation, Raheja Centre, 13th Floor, Nariman Point, Bombay 400 021. Phone: 240538 Telex: 011-6817 ME Cable: MELTRON
- 7 A, Hansalaya, 15 Barakhamba Road, New Delhi 110 001. Phone: 40641 Telex: 031-2815 MELN
- 55, Rama Nivas, 10th Cross, West of Chord Road, II Stage, Bangalore 560 010. Phone: 80772

SOUND VALUE
SOUND QUALITY
SOUND REPRODUCTION



CHAITRA-ME-197

துணைக்குப் பக்கத்தில் தன் பையனை இருத்திக்கொண்டான். இல்லாவிட்டால் தன் இரண்டு வயதுப் பெண்ணைத் தன் தோளில் போட்டபடி உலாவினுன். நடை பழகினுன்.

இப்போது இன்னும் மோசம். இவன் போகும்போது அவன் பிள்ளை ''அம்மா இல்லை'' என வாசலிலேயே சொல்லிவிடுகிறுன். அவள் கணவன் வெளியில் பார்த்தால் தெரிந்ததாகக் காண்பித்துக்கொள்வது கூட இல்லை.

வேணு ஒரு முடிவுக்கு வந்தான். இனி மேலும் பணத்தை விட்டு வைத்திருப்பது பைத்தியக்காரத்தனம். பவானி மாத்திரம் உள்ளே வேலை செய்து கொண்டிருந்தாள்.

அவள் அருகில் போய் நின்றுன். ''எனக்குக் கொஞ்சம் பண முடை... டெலிவிஷன் வாங்கிய பணத்தைத் திருப்பித் தர முடியுமானுல்....''

அவள் முடிக்கவில்லை. அவள் எழுந்து விட்டாள். ''என்ன வார்த்தை கேட்டு விட்டீர்கள்?... வயதுக்கு மரியாதை கொடுத்துப் பேசினுல் மூன் லைட் டின்னருக்குக் கூப்பிடுகிறீர்களா?... நான் கண்ணியமான குடும்பத்தில் பிறந்தவள். ஒரு ஆபீசரின் மனைவி... இரண்டு குழந்தைகளுக்குத் தாய்... என்னைப் போய்...''

அவள் கை அவனுக்கு அறைக் கதவைச் சுட்டிக் காட்டியது.

அவன் பார்த்தான். அங்கே உதவி மானேஜர் பர்சுராமன் நின்றிருந்தார்.

வேணு வெட்கித் தலை குனிந்தான். ஏதோ சொல்ல வாயெடுத்தவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். என்ன சொன்னுலும் யாரும் நம்பப் போவதில்லை.

ஆமாம்... பவானி ஒரு நெருப்பு — அப்படித்தான் எல்லோரும் சொல்வார்கள்.

உண்மைதான்.... தொடாமலே சுடும் நெருப்பு... சாரதியைச் சுட்டது ஒரு மிக்ஸிக்காக... வேணுவைத் தகித்தது டி.விக்காக...

பரசுராமனுக்கு.... போகப் போகத் தெரியும்!



ஒரு புல்லாங்குழல் அடுப்பு ஊதுகிறது

ஆரம்பத்தில் நான்கு கழுதைகளைக் காட்டி, அவற்றையே நான்கு கதாநாயகர்களாக மாற்றி அவர்களிடமுள்ள கழுதைக் குணங்களை விமர்சிக்கும்போது 'மௌலி' எதையோ வித்தியாசமாகச் சொல்லப் போகிறுர் என நினைக்கிறேம்.

ஆனுல் வரவர மாமியார் கழுதை போல ஆனமாதிரி போகப் போக மௌலி தம்மைக் கொச்சைப்படுத்திக் கொண்டு விட்டார்,— சில காட்சிகளில்!

நான்கு பிரம்மச்சாரிகளின் கதை. (போன வாரம்தானே பார்த்தோம்!) கல்யாணம் செய்துகொள்ளாமல் அடம்பிடிக்கும் இவர்களைக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைக்க ஆந்திராவிலிருந்து ஓர் இளம் பெண்ணை அழைத்து வருகிறுர் புரோக்கர் ஆல்ரவுண்ட். அவளை இவர்கள் வசிக்கும் வீட்டில் வேலைக்குச் சேர்த்து, அவளது கற்பை இவர்கள் களங்கப்படுத்தி விட்டதாகக் கதை கட்டிவிட்டு ஒவ்வொருவரையும் தன்னைத் தானே சந்தேகப்படும்படி செய்து பயமுறுத்தி அவரவர்கள் காதலியைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதிக்க வைக்கிறுர்.

சேகர், பாஸ்கர், ராக்கெட் ராமனுதன், ஜெயகோபி நால்வரும் கூட்டுப் பெருங்காயம் மாதிரி படம் முழுக்க நடிப்பில் மணக்கிறுர்கள்!

ஆந்திரப் பெண்ணுக வருகிறுர் பூர்ணிமா ராவ். இவரது அப்பா இவரை 'அம்போ' என மௌலியுடன் அனுப்பி வைப்பதும், நாலு பிரம்மச்சாரிகளைத் திருத்த இவர் விஷப் பரீட்சைக்குச் சம்மதிப்பதும் கடப்பாறையைக் கொண்டு காது குத்துகிற மாதிரி இருந்தாலும் நடிப்பைப் பொறுத்த வரை கச்சிதமாகச் செய்துள்ளார்.


ஆல்ரவுண்ட் பரோபகாரியாகத் தோன்றி நடிக்கும் மௌலி சிந்திக்க விடாமல் சிரிக்க வைப்பது உண்மைதான். அதற்காக இப்படியா சரவெடி சேர்ப்பது?

பாஸ்கரை நின்ற நிலையில் சுவரில் 'மூச்சா' போகவைத்து அதிலேயே அவர் தன்பெயரைக் கோலம் போட்டுக் காட்டி விருப்பது எப்படி நகைச்சுவையாகும்? சென்சார் கைட் லைனில் இதுபற்றி ஒன்றுமில்லையோ?

அங்கும் இங்குமாகப் படத்தைப் பார்த்து விட்டுச் சிரிக்க முடிந்தாலும் கடைசியில் ஒரு கேள்வி கேட்காமல் இருக்க முடியவில்லை. அது—

கல்யாணத்தைத் தவிர நாட்டில் வேறு பிரச்னையே இல்லையா? திரும்பத் திரும்ப அதையே ஊதிக்கொண்டிருக்கிறீர்களே! அலுத்துப் போச்சு சார்!

-திரைஞானி


டூ-இன்-ஒன்
போர்ஹென்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத்ப்ரஷ் உங்கள் பற்களை சுத்தம் செய்யும்போதே ஈறுகளையும் தேய்த்துக் கொடுக்கிறது.
பற்களை சுத்தம் செய்யும் உறுதியான நீலக் குச்சங்கள்
ஈறுகளைத் தேய்த்துக் கொடுக்கும் மென்மையான வெள்ளைக் குச்சங்கள்
போர்ஹென்ஸ்
டூ-இன்-ஒன்
டூத்ப்ரஷ்
அடல்ட் மற்றும் ஜூனியர்

அத்தியாயம் 8

அந்த நாளின் முதல் லோடு முதல் மூட்டை அரிசி உள்ளே வந்து விட்டது என்று ஒன்றும் நம்பர் இலக்கத்தை அடித்துக் குறித்துக் கொண்ட சரக்கு வாசற்படியில் சிதறி விழுந்து கிடந்தது. கூட இருந்த கூலிக்காரர்கள் ஏவென்ற கூச்சலுடன் புரண்ட பலகையைத் தாவிப் பிடித்துக் கொண்டார்கள்.

முதலியார் வலி தாளாமல் வலக்கையை உதறிக் கொண்டார். நிதானமாய் எழுந்தார். கௌசல்யா நடுத் தெருவில் குரல் பறக்கக் கத்தினாள்:

''டேய் மொதலி. அன்னை எங் காலைப் போட்டு மிதிக்கல்ல எம்பேரு கௌசல்யா இல்ல. ஒன் பொழப்ப நாறடிக்கல நான் பொம்பளே இல்ல. காட்டிக் குடுக்கிற பேமானி.''

நடை பலகையைச் சரி பார்த்துக் கொண்டிருந்த முதலி திரும்பிக் கௌசல்யாவைப் பார்த்தார். என்ன சொல்கிறாள் என்று யோசித்தார். உதட்டைப் பிதுக்கினார். கீழே கிடந்த மூட்டையில் கொக்கியை மாட்டி இன்னொரு ஆள் துணையுடன் தம் கட்டி முதுகில் ஏற்றிக் கொண்டார். ராவுத்தரை நோக்கி உள்ளே வரட்டா என்பது போல் பார்த்தார்.

ராவுத்தர் எழுந்து முதலியாரைப் பார்த்து விட்டு ''ம்ம். போங்க. கடவுள் சித்தம்'' என்றார்.

இன்றைய பொழுது சரியில்லை என்று அவருக்குத் தெரிந்து விட்டது. கடவுள் விருப்பம். இரண்டாவது மூட்டை. மூன்றாவது மூட்டை.... நான்காவது... மாறி மாறி ஆட்கள் இறக்க ஆரம்பித்தனர்.

தொலைவிலிருந்து கௌசல்யாவைப் பார்த்துக்கொண்டிருந்த செல்லத்தம்பி அவள் அழுகை அடங்கியதும் மெல்ல நெருங்கினான்.

''நீ செஞ்சது தப்பு. இதெல்லாம் இனிமே வேணும். வந்தமா கெடங்கு பெருக்கினமான்னு இரு. பேசிப் பேசியே நாசமாக்கிகிற.''

''டீ குடிக்காத வந்துட்டன்.''

''போ. எனக்கும் வாங்கியா.''

''என் கணக்குல வாங்கியா நட்டா.''

செல்லத்தம்பி சிரித்தான். இவளிடம் எங்கேயோ ஒரு சின்னத் தப்பு இருக்கிறது. பரபரவென்று அந்தத் தப்பை உப்புக் காகிதம் போட்டுத் துடைத்து விட்டால் சரியாகி விடுவாள். என்ன தப்பு என்றுதான் தெரியவில்லை.

● ● ●

நாராயணசுவாமி ஐயருக்கு மாலை போட்டவுடன் மாணவர்கள் பலக்கக் கை தட்டினார்கள். ஆப்பிள் செருகிய பொக்கே கொடுத்தவுடன் மீண்டும் கைதட்டினார்கள். ஒரு பெரிய மாணவன் மேடை மீது ஏறி நின்று ''த்ரீ சியர்ஸ் டு நாணு சார். ஹிப் ஹிப்'' என்று குரல் கொடுக்க 'ஹுர்ரே' என்று கோஷமிட்டார்கள்.

''போறும் போறும். ரொம்ப ஜாஸ்தி பண்ண வேணும். போறும்.'' நாணு சார் முணுமுணுத்தபடி கையமர்த்தினார். வெளியே மூன்று மணி வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. இன்று பள்ளிக்கூடம் இரண்டு மணியோடு சரி. எல்லா வகுப்பு மாணவர்களும் நடு ஹாலில் கூடியிருந்தார்கள். நாணு சாருக்குப் பிரிவுபசாரம் கொடுக்கக் குழுமியிருந்தனர். தலைக்கு இரண்டு ரூபாய் போட்டு இரண்டாயிரத்துச் சொச்ச ரூபாய் கணக்கு எடுத்து நாணு சாருக்கு என்ன வாங்கலாம் என்று அவரையே கேட்டபோது, ''பணமாக் கொடுத்துடுங்கோ'' என்று சொன்னார்.

இன்று பிரிவு உபசார விழா. இன்றோடு நாணு சார் ரிடையர் ஆகிறார். முப்பது வருட வாத்தியார் உத்தியோகத்துக்குஓய்வு. ''இரண்டாயிரத்துச் சொச்சத்துக்கு செக் குடுத்துடட்டுமா'' என்று பவ்யமாக ஹெட்மாஸ்டர் கேட்டபோது, நாணு சார் மறுபடியும் ''பணமாக் குடுத்துடுங்கோ'' என்று தான் சொன்னார்.

பணம் கொடுத்து விட்டார்கள். சின்னத் தோல் பையில் போட்டுக் கொடுத்துவிட்டார்கள். ஹெட்மாஸ்டர் சக ஆசிரியர் இருவர், பள்ளி மாணவர் தலைவன் எல்லாரும் பாராட்டிப் பேசி முடித்து விட்டார்கள்.



இரும்பு குதிரைகள்

பாலகுமாரன்

இப்போது விழாவின் கடைசிக் கட்டம். நாணு சார் நன்றி உரை.

நாணு சார் பேச ஆரம்பித்தார்.

''குழந்தைகளே! இந்தப் பள்ளிக்கூடத்தால முப்பது வருஷமா நிறையப் பேசியிருக்கேன். இன்னிக்கு ஒண்ணும் புதுசாப் பேசப் போறதில்லே. வழக்கம் போல ஒரு சின்னக் கதை. நீங்க எல்லோரும் இந்தப் பள்ளிக்கூடத்தைப் போல ரொம்ப நாள் நன்னா இருக்கணும்னு ஒரு பிரார்த்தனை. இது தான் சொல்லப் போறேன். ஆனா ஒரு சின்ன வித்தியாசம். இங்க இதுதான் கடைசிப் பேச்சு. இதுக்கப்புறம் இங்க பேச எனக்கு சான்ஸ் கிடைக்காது. அதனால மனசு நெனச்சதை நேரா வெளிப்படையா சொல்லிடப் போறேன்.

''குழந்தைகளெல்லாம் சேர்ந்து ஆளுக்குக் கொஞ்சம் காசு போட்டு எனக்குப் பண முடிப்புக் கொடுத்திருக்கா. ரொம்ப நன்றி. இந்தப் பள்ளிக்கூடத்தில யார் ரிடையரானுலும் இப்படிக் குடுக்கிறது வழக்கமாப் போயிடுத்து. நாலணா எட்டணா போட்டு மூட்டையாக் கட்டி அனுப்பறது வழக்கமாப் போயிடுத்து. ஆனா ரொம்பப் பாவமிது. படிக்கிற குழந்தைகள் கிட்ட காசு கேட்டு வாங்கி வாத்தியார் தன் வீட்டுக்கு எடுத்துண்டு போறது மகா கேவலம். இதுக்குப் பதிலாகப் படிக்கிற பையன் கிட்ட பேசாமக் கட்டை விரலைக் குடுன்னு கேட்டுடலாம். சிரிக்க வேண்டாம். எனக்குத் தெரியும். இங்க நெறையப் பசங்களுக்கு ரெண்டு ரூபாயை விடத் தன் கட்டை விரலைக் குடுக்கிறது ரொம்ப சுலபம்னு தெரியும்.

''வாத்தியாரை அவமானப்படுத்த ஏக்கமா எல்லோரும் சொல்ற கதை இந்தக் கட்டை விரல் கதை. துரோணர் ஏகலைவன் கதை. வாத்தியார் மகா மட்டமான பிறவின்னு குத்திக்காட்ட இந்தக் கதையைச் சொல்றது வழக்கம். நேரே நின்னு பாடம் கேக்காதவன் கிட்டயே தட்சணையா கட்டை விரல் கேட்டவர் துரோணர்னு இடிச்சுக் காமிக்கிறது உண்டு.

கொஞ்சம் யோசனை பண்ணிப் பார்க்கணும். துரோணரா கட்டை விரலைக் கேட்டார். சூழ்நிலை அவரைக் கேக்க வச்சுது. வேற வழியில்லாம துரோணர் கேக்க நேர்ந்தது. சொல்லிக் குடுக்கிறதுல இருக்கிற சந்தோஷம் தட்சணை வாங்கறச்சே நிச்சயமா வராது. எல்லா நல்ல வாத்தியாரும் தட்சணையை மனசு நோகத்தான் வாங்கிப்பான். துரோணர் கிட்ட கட்டை விரலை வெட்டி ஏகலைவன் குடுத்ததும் பூரிச்சுப் போயிருக்கவா முடியும்? அத வச்சுண்டு என்ன பண்ண முடியும்? நாக்கு வழிக்கவா? சிரிக்க வேண்டாம். நன்னா யோசனை பண்ணிப் பாருங்கோ. இந்த ரெண்டாயிரம் ரூபா காசை வச்சுண்டு நான் என்ன பண்ணுவேன்? முந்தின வருஷம் ஒரு வாத்தியாருக்குக் குடுத்தோம். போன



வருஷம் ஒரு வாத்தியாருக்குக் குடுத்தோம். இப்ப இந்த வருஷம் நாராயணசாமிக்குக் குடுக்கிறோம்னு ஹெட்மாஸ்டர் சொன்னார். இந்த ரெண்டாயிரம் ரூபா காசை வச்சுண்டு மீதி காலத்துக்கு இந்த நாராயணசுவாமி என்ன பண்ணுவான்? இந்த மன்னார்குடில ஒரு வீடு வாங்கிப் போடுவானா, நிலம் நீச்சு புடிச்சுப் போடுவானா, தங்கமா வாங்கிப் பூட்டிப்பானா, உடுத்திப்பானா, திம்பானா ஒண்ணுமில்லே. வாசப்படி தாண்டியதும் கடன்காரா அத்தனை பேரும் சூழ்ந்து வளைச்சு எடுத்துண்டு போயிடுவா. எனக்குன்னு ஒரு இருபது ரூபா மிஞ்சினா அதிர்ஷ்டம். அதுவும் எவனோ ஒரு கடன்காரன் வரலேன்னு அர்த்தம். இந்த ரெண்டாயிரம் காசும் வெட்டி வச்ச கட்டை விரல்தான். காக்கா நாய் நரிதான் எடுத்துண்டு போகும். எனக்கு உதவாது. துரோணரை ஏதோ ஒரு சூழ்நிலே கட்டை விரலே ஏத்துக்க வச்சுது. என்னையும் ஒரு சூழ்நிலே இந்த ரெண்டாயிரத்தை வாங்கிக்கச் செய்யறது.

''சாமி என் கட்டை விரல் உங்களுக்கு எதுக்கு? சாப்பாட்டுக்கு வழியில்லேன்னு தானே பாண்டவர் கிட்டப் போனீங்க. நான் சோறு போடறேன், வாங்க''ன்னு துரோணர் கிட்ட அந்த ஏகலைவன் கேட்கப்படாதா? கேக்கலே. கேக்கத் தோணலே. கேட்டிருந்தா துரோணர் சரின்னு சொல்லியிருந்தாலும் சொல்லியிருக்கலாம்.

வறுமை. வறுமை காரணமாத்தான் துரோணர் பாண்டவர்களிடம் சேர்ந்தார். ஏகலைவன் கட்டை விரலை மனம் நொந்து தட்சணையாகவும் கேட்டார். நானும் வறுமை காரணமாகவே இந்த ரெண்டாயிரம் ரூபா காசை வேதனையுடன் ஏற்கிறேன்.

''தொள்ளாயிரத்து அம்பது ரூபா சம்பளம் வேற யாராவது தரட்டும். தூக்கி நடுறால்ல இந்த மூட்டையைப் போட்டுட்டுப் போயிடுவேன். குழந்தைகளிடம் ரிடையர் ஆகிற வாத்தியாருக்குக் காசு கலெக்ட் பண்ணி வீட்டுக்கு அனுப்பறதை விட அடுத்த மாசம் அவன் சம்பாத்தியத்துக்கு ஏதாவது வழி பண்ணினேன்னு ரொம்ப சௌகர்யமா இருக்கும். யாருக்கும் அப்படித் தோணாது. இதுவரைக்கும் அப்படித் தோணினது இல்லே.

இரண்டு ரூபாயோடு போகட்டும், சீடைன்னுதான் தோணும். வேற வழியில்லே. என்னடா கடைசி நாளன்னிக்குப் பேசறச்சையும் இப்படிக்கத்திட்டுப்போறானே இந்த நாராயணசுவாமின்னு தோணும். இவன் பிறவி முசுடு. இவனுக்குக் காசு மூட்டை குடுத்ததே தப்புன்னு தோணும். துஷ்டன்னு படும். இது நான் பேசலே. என் வயிறு பேசறது. இருட்டா இருக்கிற என் எதிர்காலக் கவலே பேசறது. பென்ஷன் வரும். பிசாத்து முந்நூறு ரூபா. என்ன பண்றது அத வச்சுண்டு? தொள்ளாயிரத் தம்பது வந்த எடத்தில முந்நூறு ரூபா காசு எந்த மூலேக்குக் காணும்.

''சரி, இது என் கஷ்டம். என் வேதனே. இதை ஆத்திக்கிறதுக்குச் சொல்லலே. உங்களுக்கு நெஜம் தெரியணும்னுதான் சொல்றேன். மத்தபடி என் அவல நிலே இங்க யாருக்கும் எவருக்கும் எந்தக் காலமும் வரவேணும். வரவே கூடாது என்று பிரார்த்தனை செய்து கொண்டு இப் பள்ளிக்கூடம் போல நீங்கள் வெகு நாள் புகழோடு, வளமோடு வாழ வாழ்த்துகிறேன். நன்றி. ரொம்ப நன்றி'' என்று கூறி இரண்டு கைகளையும் விரித்து அடித்து வானம் பார்த்துக் கை கூப்பினார்.

சில பையன்கள் அழுதார்கள். சிலர் உதட்டைக் கடித்து விசும்பினார்கள். சிலர் காலில் விழுந்து கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். நாணு சார் சலனமில்லாமல் நின்றிருந்தார். இனி வேலையில்லே என்ற இடியைத் தாங்கிக் கொள்ளத் தமக்குள்ளே தம்மை ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தார்.

மன்னார்குடி முழுக்க நாணு சார் பேசினதைப்பற்றி விவாதித்தார்கள். காரசாரமாய்க் கட்சி பிரிந்துச் சண்டை யிட்டார்கள். பாராட்டினார்கள், தூற்றினார்கள்.

''பெருமதிப்புக்குரிய நாணு சாருக்கு வணக்கம் பல. பள்ளிக்கூடப் பிரிவு உபசார விழாவில் தாங்கள் பேசினதைக் கேள்விப்பட்டேன். வருந்தினேன். தங்கள் ஆசியால் நலமுடன் தற்போது சென்னையில் தனி கம்பெனி வைத்து நடத்திக் கொண்டிருக்கிறேன். எனக்கு நிர்வாகம் செய்ய ஆள் தேவைப்படுகிறது. தாங்கள் சென்னைக்கு வந்தால் என் கம்பெனியில் மேனேஜர் வேலை போட்டுத் தருகிறேன். முதலில் ஐநூறு ரூபாய் என்றால் தர முடியும். உங்கள் பென்ஷன் பணமும் இந்த ஐநூறும் உங்களுக்கு உதவியாக இருக்கும் என்று நினைக்கிறேன். தங்களுக்கு விருப்பமிருந்தால் மேற்கண்ட விலாசத்தில் என்னைச் சந்தியுங்கள். வேணும் ஆசீர்வாதம்.

உங்கள் பழைய மாணவன்
கே. ஆர். வடிவேல்.

கே. ஆர். வடிவேல் கடிதத்தை ஒரு பள்ளிக்கூடப் பையனிடம் கொடுத்து வாத்தியாரிடம் சேர்ப்பிக்கச் சொன்னான். இரவு பஸ்ஸில் சென்னைக்குப் போய் விட்டான்.

''மிட்டாய், சாக்லெட், பலப்பம் இவற்றுடன் தயாரிப்பாளர் எங்கே அவசரமாகப் போறார்?''

''குழந்தை நட்சத்திரத்திடம் 'கால் ஷீட்' வாங்கத்தான்!''

—லலிதா செல்லப்பா



கேசத்துக்கு மென்மையும் பட்டுத்தன்மையும் தரும் இயற்கையான பராமரிப்பு

ஸ்வஸ்திக் சீக்காய் சோப்பில் சுத்தமான சீக்காயின் இயற்கையின் எல்லா நற்குணங்களும் நிரம்பியுள்ளன. உபயோகிப்பது மிகவும் சௌகரியமானது. திரவ ஷாம்பூவைவிட மிகவும் சிக்கனமானது.

வளமான நறுமணமிக்க நுரை உங்கள் கேசத்திற்கு மணமூட்டுகிறது, மென்மையுடன் கேசம் முழுவதையும் சுத்தமாக்குகிறது. உங்கள் கேசம் ஆரோக்கியமுடன் பளபளக்கிறது, புதுமையான மணம் வீசுகிறது.



ஸ்ரீஸ்வஸ்திக் சீக்காய் சோப்

சீக்காய் அடங்கியது—இந்தியப் பெண்மணிகளின் எழிலோங்கும் கேசத்தின் பரம்பரை ரகசியம்!

shilpi dm 25/79 tam.

அவனுக்கு மன்னையில் கையகல நிலம் இருந்தது. அதை விற்று ரொக்கமாக்கி இடுப்பு பெல்டில் செருகிக் கொண்டு போய்விட்டான். கடைசி சொத்தையும் விற்று மன்னார்குடி பந்தம் முற்றிலும் அறுபட்டுப் போகும் துக்கம் அவனைப் பகல் முழுதும் வாட்டியது. நாணு சார் பேச்சு பற்றிக் கேள்விப்பட்ட போது இரண்டு பேர் துக்கமும் ஒரே மாதிரி என்பதாய்ப் பட்டது. கடிதம் எழுத வைத்தது.

கூடவே வீடு வரை வருகிறேம் என்கிற பையன்களை நாணு சார் தடுத்து விட்டார்.

''நான் என்னடா காட்டுக்கா போறேன். கடைசிவரை வரத்துக்கு. இங்கதானே. வந்து போய்ட்டிருப்பேன். பள்ளிக்கூட வாசல் வரைக்கும் வந்தாப் போறும்.''

பள்ளிக்கூடத் தெருவில் தனியே திரும்பி நடந்து வந்தார். மளிகைக் கடை, துணிக் கடை என்று ஏறிக் கணக்குத் தீர்த்தார். முதலாம் தெருவில் காயத்ரி எதிர்ப்பட்டாள். காயத்ரி அவருடைய இரண்டாவது பெண். பி.எஸ்.ஸி கணிதம் முதல் வகுப்பில் தேறிவிட்டு மன்னார்குடி டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். நூறு ரூபாய் சம்பளம் வந்தது. மூத்தவளுக்குப் படிப்பு வரவில்லை. நன்றாய்ச் சமைக்கக் கற்றுக் கொண்டாள். இளையவள் பி. காம். கடைசி வருஷம். மூன்று பெண்களும் மூன்று ரத்தினங்கள். குடும்ப சூழ்நிலை புரிந்தவர்கள். வறுமையை எதிர்த்துச் சிரிக்கும் வாளிப்போடு பிறந்தவர்கள். வாரப் பத்திரிகை ஒன்று தவறாமல் படிக்கிறவர்கள். மன்னார்குடி டவுன் புழுக்கத்தில் மேற்கொண்டு மலர முடியாமல் தவிக்கிறவர்கள்.

''என்னப்பா ரொம்ப டல்லா வரே. மனசுக்குக் கஷ்டமாயிடுத்தா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லேங்கறேன்.''

''அப்பா கோவிலுக்குப் போலாமா?''

''கடைத்தெருப்பக்கமாத்தான் போயிட்டு வரேன்.''

''வாயேன், போலாம்.''

''சரி, போலாம்.''

''உனக்கு யார் மேலே கோபம்?''

''கோவமா? ஒண்ணுமில்லே.''

''நடு ஹால்லே சவுக்கு வச்சுண்டு சொடேர் சொடேர்னு சொடுக்கினே. அதுக்குப் பேர் கோபமில்லாம என்ன?''

''கேட்டியா?''

''ஓரமா, ஒங்கண்ணுக்குப் படாம நின்னு கேட்டேன்.''

நாராயணசாமி சிரித்தார்.

''உனக்கு யார் மேலே கோவம். ரெண்டு ரூபா கொடுத்தவன் பேர்லியா, இரண்டு ரூபா கலெக்ட் பண்ணவன் பேர்லயா, பள்ளிக்கூடத்து மேலேயா, கவர்மெண்ட் மேலயா. இல்லே இந்த சோஷியல் ஸெட்டப் மேலேயே கோபமா? ரெண்டு ரூபா குடுத்த பையன் இது புண்ணியம்னு நினைச்சுக் குடுத்திருப்பான். உனக்காக அதக் கலெக்ட் பண்ணின வாத்தியார் நாளைக்கு நமக்கும் இது மாதிரி நடக்கணுமேன்னு செய்திருப்பார். தள்ளிக்கூடம் நீ வேலை செஞ்சதுக்கு மாசம் பவுமை தாவா சொல்லாம காசு குடுத்திருக்கு. கவர்ண்மெண்ட் மேலே கோச்சுக்கிறதும் தப்பு. முந்நூறு ரூபா பென்ஷன் வேலை செய்யாமல் இருக்கிற நாளுக்கும் கவர்மெண்ட் குடுக்கறது. இந்தச் சமூக அமைப்பு மேலே கோவம்னு ஒத்துக்கறேன். மூணு பொண்ணுக்குக் கல்யாணம் வரதட்சிணை, சீர் செனத்தின்னு வாத்தியார் வேலைல முடியாதுதான். ஆனா இந்தக் காரியத்துக்குப் பொறுப்பு நீ நான் நம்ம மாதிரி தனி மனுஷாதான். நாம ஒண்ணாச் சேர்ந்ததுதான் சமூகம்.'' கோவில் வாசல் தாண்டி பிரதட்சிணம் வந்து வசந்த மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''மூணு பொண்ணு பெத்துண்டது தப்பு. பெத்துண்ட பிறகு சேர்த்து வைக்காதது தப்பு. ஏகலைவன் 'சோறு போடறேன்னுப் போயிருப்பாரா துரோணர்? எனக்குத் தோணலே. அவருக்குப் பிராமண வாழ்க்கை தாங்க முடியலே. லக்ஸரி வேணும்னு தோணிடுத்து. தன் பிள்ளைக்குப் பால் பழம் பட்டுன்னு கொண்டு வந்து கொடுக்க ஆசை வந்துடுத்து. அதனலதான் ராஜா வீட்டுக்குச் சேவகம் பண்ண வந்துட்டார். நீ ஏகலைவன் மாதிரி இருக்கிற ஏழைக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் குடுக்கறதுக்கு வந்துட்டு ரெண்டாயிரமா குடுக்கற ரெண்டாயிரம்னு சத்தம் போட்டா எப்படி?''

நாராயணசவாம் மறுபடிசிரித்தார். ''என்னவோ ஒட்டு மொத்தமா எல்லார் மேலேயும் ஒரு கோவம். சீசீ போடான்னு ஒரு வெறுப்பு.''

''அப்பா நீ ரெண்டு விஷயம் உடனடியா செய்யணும்.''

''சொல்லு தாயே.''

காயத்ரி அவர் கைகளைப் பற்றிக்கொண்டாள்.

(தொடரும்)



''என்னங்க ஒரு மாதிரியா இருக்கீங்க?''

''வாழ்க்கையே வெறுத்துப் போச்சுங்க.''

''எதுக்கோ?''

''பின்னே என்னங்க... இருக்கிற கட்சிகெல்லாம் மாறியாச்சு... இனிமேல் போறதுக்குக் கட்சியே இல்லே... அந்தக் கவலைதான்!''

—எஸ். ஆர். நாதன்



ஆண் - பெண் நல்வாழ்வு வாழ அழைக்கிறோம்

பிரபல பழனி வைத்திய திலகம், வைத்யராஜ்

டாக்டர் எஸ். காளிமுத்து, R.M.P. (IND). V.V.C. A.M.I.H.,

அவர்களிடம் சிகிச்சை பெற்று குணமும், மகிழ்ச்சியும் அடையுங்கள்

சித்த வைத்தியத்தில் இந்தியாவின் சுற்றுப் பயணத்தில் தனிச் சிறப்புப் பெற்றவர், சித்த வைத்திய மாமன்னன், சித்த வைத்தியச் செம்மல், சித்த வைத்தியக் கலைவேந்தன், வைத்தியத் திலகம், வைத்யராஜ், பல பாராட்டுப் பட்டங்களும், மெடல்களும், பதக்கங்களும் பெற்றவர். பல தலைமுறைகளாக வைத்தியக் குடும்பத்தின் ஏரே வாரிசாகத் திகழ்பவர், முன்னாள் சென்னை, நாட்டு வைத்தியக் கல்லூரியில் வி.வி. கோர்ஸ். சித்த வைத்தியமும் ஆங்கில வைத்தியமும் பயின்றவர். ஹோமியோபதியிலும், ஆயுர்வேதத்திலும் அரசாங்கத் தாராம் பதிவு பெற்றவர். முதன் முதலாக டெல்லி, பூனா, பம்பாய், பெங்களூர் மற்றும் தமிழகம் எங்கும் சுற்றுப் பயணம் செய்து, பல்லாயிரக் கணக்கான வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தி நற்சாட்சிகளும் பெற்றவர். உலகப் புகழ் பெற்ற சிட்டுக்குருவி லேகியம், தங்கபஸ்பம் போன்ற ஏராளமான மருந்துகள் தயாரித்து தனிப் பெயர் பெற்றவர் இவரே.

கீழ்க்கண்ட தொந்தரவுகள் இருந்தால் அலட்சியம் செய்யாதீர்கள்

தளர்ச்சி, குழந்தை பாக்கியம் இல்லாத பிரச்னை, உடல் பலவீனம், இல்வாழ்க்கையில் மகிழ்ச்சிக் குறைவு, உடலே பலவீனம், ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, தேக வலி, நித்திரைக் குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு, உறுப்புக்கள் தளர்வு, அடிக்கடி சிறுநீர், சரும நோய்கள், வயிற்றுவலி, ஆ. இருமல், இளைப்பு, தும்மல், நவமூல வியாதிகள், வாய்வு, மற்றும் இதில் குறிப்பிடாத வியாதியஸ்தர்களுக்கு எமது 85 வருட அனுபவ மருந்துகளால் சுகவாழ்வு வாழலாம். ஆர்டருடன் மருந்து விவரங்களைக் குறிப்பிட்டு வி.பி.பி. தபால் பார்சலில் பெறலாம். வி. பி. பி. தபால் செலவு இலவசம். கேம்பிலும், நேரிலும் டாக்டரிடம் மருந்துகள் பெறலாம்.

(பழனி சித்தர் மருந்துகளே பாரில் சிறந்தவை என்பது உலகம் அறிந்ததே)

ஒரு மாத சிகிச்சை மருந்துகள்

தங்கபஸ்பம், ஸ்பெஷல் செட் ரூ. 330, தங்கபஸ்பம் சிட்டுக்குருவி லேகியம் 30 வேளை ரூ. 60, 60 வேளை ரூ. 120, 90 வேளை ரூ. 180

ஸ்பெஷல் லேகியம், ஸ்பெஷல் பஸ்பம் *(மிக உயர்தரம்)* **ரூ. 90**

ஆ. இருமல் செட் ரூ. 124, சரும நோய் செட் ரூ. 140, 260, வயிற்று வலி செட் ரூ. 92

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி, விலாசங்கள் கவனிக்கவும் :

1-ந் தேதி திருநெல்வேலி, நெல்லை வாட்டு, ஜங்ஷன் ரோடு, போன் 147, காலை 8 மணி முதல் 12 மணிவரை
1-ந் தேதி நாகர்கோவில், பகல் 2 மணி முதல் 4 மணிவரை, ஸ்ரீ உடுப்பி கிருஷ்ண பவன், தபாலாபீஸ் சந்திப்பு
2-ந் தேதி மதுரை மணீஸ்கபே, டவுன்ஹால் ரோடு, போன்: 22019 காலை 8 முதல் பகல் 12 மணி வரை
2-ந் தேதி புதுக்கோட்டை, மாலை மணி 4 முதல் 5-30 மணி வரை, சாந்தி லாட்ஜ் (வசந்தா லாட்ஜ்) போன்: 46
3-ந் தேதி காரைக்குடி, காலை 9 மணி முதல் 11 மணி வரை, எ.வி.எம்.பி.எல். ரெஸ்ட் ஹவுஸ், போன்: 309
3-ந் தேதி பட்டுக்கோட்டை, பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை, ஹோட்டல் அலங்கார், மணிக்கூண்டு சமீபம்
3-ந் தேதி மன்னார்குடி, மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை, மன்னை லாட்ஜ், ஸ்டேட் பாங்க் அருகில்
4-ந் தேதி திருச்சி, ஹோட்டல் அஜந்தா, ஜங்ஷன் ரோடு, காலை 8 மணி முதல் பகல் 2 மணி வரை, போன்: 4501
4-ந் தேதி கரூர், மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை, பெரியார் லாட்ஜ், ஜவஹர் பஜார்
5-ந் தேதி தஞ்சாவூர், காலை 8 மணி முதல் 12 மணி வரை, ராஜா ரெஸ்ட் ஹவுஸ், போன்: -57
5-ந் தேதி திருவாரூர், மாலை 2 மணி முதல் 4 மணி வரை, அபூபக்கர் பில்டிங், நாகை ரோடு, விஜயபுரம்
5-ந் தேதி நாகப்பட்டினம், இளங்கர் விலாஸ், ரயில்வே ஸ்டேஷன் எதிர், மாலை 5 மணி முதல் 6 மணி வரை
6-ந் தேதி காரைக்கால், அசோக் லாட்ஜ், பஸ் ஸ்டாண்டு எதிர், காலை 8 மணி முதல் 10 மணி வரை
6-ந் தேதி கும்பகோணம், காலை 12 மணி முதல் 2 மணி வரை, தாஜ்மஹால் லாட்ஜ், பொற்றாமரைக்குளம்
6-ந் தேதி மாயவரம், மாலை 3 மணி முதல் 4-30 மணி வரை, காளியாகுடி லாட்ஜ், பெரியகடை வீதி, போன் 460
6-ந் தேதி சிதம்பரம், மாலை 5-30 மணி முதல் 7 மணிவரை, ஜெயராம் லாட்ஜ்
7-ந் தேதி பாண்டிச்சேரி, காலை 8 மணி முதல் 9-30 மணி வரை, (அருணா லாட்ஜ்) பாரிஸ் லாட்ஜ், ஜவஹர்லால் [நேரு வீதி, போன்: 352
7-ந் தேதி திருவண்ணாமலை, காலை 10 மணி முதல் 12 மணி வரை, மாடர்ன் கபே.
7-ந் தேதி செங்கல்பட்டு, மாலை 4 மணி முதல் 6 மணி வரை கணேஷ் லாட்ஜ்
7-ந் தேதி கடலூர் என்.டி. காலை 10-30 மணி முதல் 12 மணி வரை, ஹோட்டல் பிருந்தாவனம்
10, 11-ந் தேதி சென்னை, காலை 9 மணி முதல் 12 மணி வரை, 3 முதல் 5 மணி வரை நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டல்
12-ந் தேதி காஞ்சீபுரம், ஸ்ரீராமா லாட்ஜ், நெல்லுக்காரத் தெரு, காலை 10 மணி முதல் 12 மணி வரை
12-ந் தேதி ஆரணி பகல் 3 மணி முதல் 5 மணி வரை கிரிஜா லாட்ஜ், காந்தி சிலை எதிரில், போன்: 83111
13-ந் தேதி வேலூர், என், ஏ, காலை 10 மணி முதல் 12 மணி வரை, அஜீஸ் மென்ஷன்ஸ், போன்: 123
13-ந் தேதி குடியாத்தம், பகல் 3 மணி முதல் 5 மணி வரை, அலங்கார் லாட்ஜ்
13-ந் தேதி திருவண்ணாமலை, காலை 9 மணி முதல் 10 மணி வரை, ஸ்ரீராம் லாட்ஜ், போன்: 129
13-ந் தேதி தர்மபுரி, பகல் 12 மணி முதல் 1 மணி வரை, சீனிவாஸா லாட்ஜ்
13-ந் தேதி சேலம், பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை, லட்சுமி ராஜ்பவன், போன்: 2301
14-ந் தேதி மதுரை காலை 9 மணி முதல் 12 மணி, மாலை 2 மணி முதல் 4 வரை, சந்தானம் லாட்ஜ்
15-ந் தேதி ஈரோடு, காலை 10 மணி முதல் 12 மணி வரை, நவபவனம் லாட்ஜ், போன்: 907
15-ந் தேதி திருப்பூர், பகல் 2 மணி முதல் 4 மணி வரை, ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜ், போன்: 186
16-ந் தேதி கோவை காலை 9 மணி முதல் 12 மணி வரை, விஜயா லாட்ஜ், போன்: 22669
17, 18, 19-ந் தேதி சென்னை நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டல் காலை 10 முதல் 12 மணி வரை, மாலை 3 முதல் 5 வரை [போன்: 83111
22-ந் தேதி கோவை, காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரை ஹோட்டல் குரு
22-ந் தேதி பொள்ளாச்சி, மாலை 2 மணி முதல் 4 மணி வரை, கோபால் பில்டிங், போன்: 666
23-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை பழனி தலைமை வைத்தியசாலை.

எமது மருந்துகள் கிடைக்கும் இடம் : **கவிதா எண்டர்பிரைசஸ்,**

26, வாலர்ஸ் ரோடு, *(மவுண்ட் ரோடு, பி. ஆர். & சன்ஸ் அருகில்)* **சென்னை-600 002**

GOVT. REGD. T.M. No. 204841 REGD. 15443 MFG. LIC. No. 5

போன் : 316, 316-A, 420 தந்தி : சித்தர்

பழனி சித்தர் வைத்தியசாலை, பழனி-624 601

(பழைய தாராபுரம் ரோடு, (இந்தியாவின் மாபெரும் வைத்திய ஸ்தாபனம்)



இது ராசியான வண்டி!

வேதா கோபாலன்

கார் ஷெட்டின் கதகதப்பிலும் கூட, சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துப் புகையை அனுபவித்து இழுத்தான் பாஸ்கர். சட்டையின் மேல் ஒட்டிக் கொண்டிருந்த துக்குணியூண்டு எறும்பைச் சுண்டு விரலால் தட்டி விட்டபோதுதான் கவனித்தான், சட்டை கிழிந்திருக்கிறது. ஒரு ரூபாய் சுலபமாக நுழையக்கூடிய அளவு ஓட்டை. நாளைக்கு அம்மாவைத் தைக்கச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

''உன் முதலாளிதான் முழுசாய்ப் போண்டி ஆயிட்டாராமே! இன்னும் எதுக்கு அவருக்குக் காரும் டிரைவரும்!'' என்று காலையில் அம்மா கேட்டது அவனுக்கு நினைவு வந்தது. அம்மாவை நோக்கி ஆத்திரத்துடன் ஒரு முறை முறைத்தான். தன் முதலாளியைப் பற்றி யாராவது குற்றம் சொன்னாலே அவன் ராட்சதனாகிவிடுவான்.

ஒரு காலத்தில் அவர் 'ஓஹோ' என்று வாழ்ந்ததென்னவோ உண்மைதான். தன் மகள் பேரில் அங்கங்கே ஒரு பிஸினஸுக்கு ஸாட்டின் ரிப்பன் வெட்டியதும் நிஜம்தான். ஆனாலும் மகள் வினுதாவின் பெயர் ராசி நிமேரென்று விடை பெற்றுக் கொண்டதோ, அல்லது முதலாளிக்கே ராசி 'அம்பேல்' ஆகி விட்டதோ தெரியவில்லை. முதல் முதலில் அவரின் பிரபல துணிக் கடையில் இரவு ஷார்ட் சர்க்யூட் ஆகி, மாபெரும் தீவிபத்து ஏற்பட்டு அத்தனை லட்ச ரூபாய் மதிப்பும் நொடியில் சாம்பலானதைத் தொடர்ந்துதான் போதாத காலம் அவர் நிழலுடன் ஒட்டிக் கொண்டது போலும்.

அந்த முதல் நிகழ்ச்சியிலேயே பாதி இடிந்து போய்விட்ட நித்யானந்தம் அடுத்தடுத்து ஷேர் மார்க்கெட் சரிந்தபோதும் ஜுவல்லரி கொள்ளையடிக்கப்பட்டபோதும்

நொறுங்கிப் போய்ப் பொடிப் பொடியாகத் தான் போய் விட்டார். கொடுமையிலும் கொடுமை.

ரேஸ் கோர்ஸ் குதிரைகள் மாதிரி வீட்டின் ஷெட் பகுதியில் அணி வகுத்து நிற்கும் வகை வகையான கார்கள் ஒவ்வொன்றாய்க் காசாக்கப்பட்டன. நான்கு டிரைவர்களின் சீட்டுகள் ஒன்றன் பின் ஒன்றாய்க் கிழிக்கப் பட்டன. பங்களாவை விற்றுவிட்டு நித்யானந்தமும் அவரின் மனைவியும் மகளும் அவுட் ஹவுசுக்குக் குடிவந்து கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகிவிட்டது!

இருந்தும்....

இவன் ஒருவன் கையாளும் அம்பாஸிடர் மட்டும் இன்னும் விற்கப்படாமல், இவன் ஒருவனின் வேலை மட்டும் இன்னும் உலை வைக்கப்படாமல் இருக்கிறது என்றால் அதன் பின்னணியில் மிக பலமான காரணம் ஏதோ இருக்கிறது என்றுதானே அர்த்தம்?

''பாஸு... பாட்டரி கெட்டுப் போயிடப் போறது... இப்படி சும்மா ஒரு ரவுண்டு வண்டியை எடுத்துக்கிட்டுப் போயிட்டு வந்துருப்பா!'' என்பார்.

இது ஒன்றுதான் அவன் உருப்படியாய்த் தினமும் செய்யும் வேலை. இது தவிர வண்டியைத் துடைத்து வைக்கிறான். இதற்காக ஒரு மனிதர் பெட்ரோலுக்கும் ஆயிலுக்கும் செலவழிப்பாரோ! இதற்கு ஒரு டிரைவர் வேண்டுமா? டிரைவருக்கு முந்நூறு ரூபாய் செலவழிக்க வேண்டுமா?

மீனம்பாக்கம் மைதானத்தில் வினுதாவுக்குக் கார் ஓட்டக் கற்றுக் கொடுத்த இனிமையான பொழுதுகள் நினைவு வந்தன.

ஸ்டியரிங் வீலை அவள் ஒடிக்கத் தெரியாமல் திண்டாடி விழித்த இடத்தில் தான் பாய்ந்து திசை திருப்பி விட்ட அதிர்ச்சியில் அவள் அவன் மடியில் சாய்ந்தபோதும் சரி. பிரேக்தானுக்கும் என்று நினைத்து ஆக்ஸிலேட்டரில் காலை வைத்து அழுத்தி அடுத்த நிமிடமே தன் தவற்றை உணர்ந்து பிரேக் பெடலுக்கு மாற, அதற்குள் அவன் விரைந்து அவள் மென்மையான காலின் மேல் தன் காலை வைத்து அழுத்தியபோதும் சரி, கதவைச் சாத்தும்போது மாட்டிக்கொண்டு விடக் கூடாதே என்று அவள் புடவைத் தலைப்பின் வழுவழுப்பை லேசாக எடுத்து நகர்த்தி விட்டபோதும் சரி— அவன் மட்டும் சிறிது உணர்ச்சி வசப்பட்டானே தவிர அவள் 'ஸாரி' என்ற ஒரே வார்த்தையில் கவனத்தைத் திருப்பிக் கொண்டு கருமமே கண்ணானாள்.

அத்தனை உன்னிப்புடனும் ஆர்வத்துடனும் கார் ஓட்டக் கற்றுக் கொண்டதனால் தானோ என்னவோ அவன் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மிக மிகச் சீக்கிரம் அவள் லாகவமாய் ஓட்டக் கற்றுக் கொண்டுவிட்டாள்.

அப்படிப்பட்ட எக்ஸ்பர்ட் இருக்கும் வீட்டில் டிரைவர் எதற்கு?... தான் முதலாளிக்குப் பாரமா இருக்க வேணுமா?

"மொ...மொதலாளி...நானுவேலையை விட்டு நின்னுக்கிறேனுங்க...''

''ஏண்டா... வேற எங்கயாவது வேலை தேடிக்கிட்டியா என்ன? இந்த ஓட்டாண்டி இனிமே நமக்கு ஒத்து வரமாட்டான்னு முடிவு பண்ணிட்டியா?''

''அய்யய்யோ... அப்பிடியெல்லாம் இல்லீங்க... உங்களுக்கே இப்போ சிரமதசை... வண்டியையும் அடிக்கடி எடுக்கிறதில்லே, நான் அநாவசியமாய் உங்க கிட்டே கைநீட்டிச் சம்பளம் வாங்கிக்கிட்டுச் சும்மா உட்கார்ந்துக் கிட்டு இருக்க மனசாட்சி குத்துது...''

''ஏண்டா...இத்தனை பேரையும் வேலையை விட்டு நின்னுக்கச் சொன்னவன் உன்னை மட்டும் அனுப்பல்லேன்னா அதுல ஏதோ ஒரு காரணம் இருக்குன்னு நினைச்சுக்கிட்டுச் சும்மா இருக்க வேண்டியதுதானே...''

''.....''

''எனக்கு ஒரு உதவி பண்ணறியா பாஸ்கர் ப்ளீஸ்...'' அத்தனை நேரம் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்த குரல் இப்போது குழைந்து சிலிர்த்தது.

நகை திருடிய நங்கை

டில்லியிலே பெரிய நகைக் கடை. வாசலில் விலை உயர்ந்த கார் வந்து நின்றது. அதிலிருந்து ஓர் ஆடம்பர நங்கை இறங்கினாள். அவள் தோளில் ஒரு குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. பலவித நகைகளைப் பார்வையிட்டாள். கடைசியில் ஒரு வைர நெக்லஸ் தேர்ந்தெடுத்தாள்.

தோளில் கிடத்தி யிருந்த குழந்தையை லாகவமாக நாற்காலி ஒன்றில் கிடத்தியவள்சூரிய ஒளியில்நகையைப் பார்க்க எண்ணி வெளியே சென்றாள். அவள் காரில் ஏறவும் இமைக்கும் நேரத்தில் கார் பறந்துவிட்டது!

''குழந்தையைப் போட்டு விட்டுப் போயிருக்கிறாள்! எப்படியும் வருவாள்'' எனச் சற்று நிம்மதி கடைக்காரருக்கு. ஆனால் சற்று நேரம் சென்று அக் குழந்தையை அணுகிப் போர்த்தியிருந்த துண்டை விலக்கிப் பார்த்தால்...

மெழுகுப் பொம்மை!

—சுரால்பாகோ



''சொல்லுங்க முதலாளி...''

''என்னை இனிமே முதலாளின்னு கூப்பிடாமல் மாமான்னு கூப்பிடணும்... இது தான் நீ எனக்குச் செய்யப் போற பெரிய உதவி!''

முதலில் புரியவில்லை. பக்கத்தில் தலை குனிந்து நின்ற வினுதாவைப் பார்த்ததும் தான் புரிந்தது அவர் என்ன சொல்கிறார் என்று.

''அய்யய்யோ... சார்... விளையாடறீங்களா? இன்னிக்கு வேணு உங்க கை கொஞ்சம் தாழ்ந்திருக்கலாம்... நாளைக்கே மறுபடி ஓகோன்னு ஆகப் போறீங்க... அப்போ சின்னம்மா கல்யாணத்து ஜானவாசக் காரை நானே ஓட்டறேன்...'' மெய் பதறச் சொன்னான் பாஸ்கர்.

பளீரென்று சிரித்தார் நித்யானந்தம்.

''யெஸ்! இந்தக் கார் ரொம்ப ராசியான கார். இதுதான் என் பொண்ணோட ஜானவாசக் கார்! அதில் உட்காரப் போறது நீதான்! டிரைவிங் சீட்டில் இல்லே! மாப்பிள்ளை சீட்டில்!''

''இது... இது எனக்குத் தகுதியான...''

''பாஸ்கர்... என் நிலைமை தாழ்ந்திருக்கறதாலதான் இந்த யாசகத்தைக் கேட்டேன்னு நினைச்சியா? முன்னே பங்களாவும் பணமுமாய்க் கொழிச்சிக்கிட்டிருந்தபோதே என் மகள் என்கிட்ட இந்த அப்ளிகேஷன் போட்டுட்டா. உன் கிட்ட கார் டிரைவிங் கத்துக்கிட்ட சமயத்துல அவளுக்கு இந்த ஆசை வந்துடுத்தாம். அப்பவே உன்னைக் கூப்பிட்டுச் சொல்ல நினைச்சேன். அதுக்குள்ள ஆயிரத்தெட்டு நிகழ்ச்சிகள் நடந்துடுத்தே... அதனாலதான் உன்னை மட்டும் வேலையிலிருந்து நிறுத்தலே...'' கண்ணாடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''வினு... பாஸ்கர் பக்கத்திலே போய் நில்லும்மா...'' அதற்கு மேல் எதுவும் பேசத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த பாஸ்கரின் பக்கத்தில் சென்று தலை குனிந்து நின்றாள் வினுதா.

மகளைக் கண் கலங்க நிமிர்ந்து பார்த்தார். மனத்துக்குள் நினைப்பு ஓடியது. 'மன்னிச்சுக்கோம்மா வினு. உன்னை உடனே ஒரு ஜோடியோட பார்க்காட்டா என் நெஞ்சு வலி என்னைச் சும்மா விடாது போலிருந்தது. அதனாலதான் இப்படி ஒரு பொய்யைச் சொல்லிட்டேன். இதைவிட நல்ல மாப்பிள்ளை இந்த நிலையில் நம் வீட்டுக்கு எப்படிக் கிடைப்பான்' என்று மானசிகமாய் மன்னிப்புக் கேட்டார் மகளிடம்.

'கார் ஓட்டக்கற்றுக் கொண்டபோது இவர் மீது எனக்குக் காதல் பிறந்தது உண்மைதான்! அதை நான் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் மனத்தில் போட்டுப் புதைத்துக் கொண்டிருந்தேன். எல்லாம் நீங்கள் என்ன சொல்லுவீர்களோ என்ற பயத்தால்தான். நன்றியப்பா நன்றி!' என்று மனசுக்குள் சிலிர்த்துக்கொண்டாள் வினுதா பக்கத்தில் கம்பீரமாக நின்று கொண்டிருந்த பாஸ்கரன் மேல் மென்மையாக உரசியவாறு!

6

லைப்ரரியின் வாசலின் முன் வட்டமாகப் பச்சைப் பசேல் என்ற புல் வெளியைச் சுற்றி ஃபிளாக்ஸும் ஜீனியாவும் பளீரென்று சிரித்தன. நிமிர்ந்து நின்ற ளொடியோலியும் ஆன்ட்ரினமும் பருவம் நன்றாக இருக்கும் போது முழுதும் அனுபவித்து விடுகிறோம் என்கிற உல்லாசத்துடன் அசைந்தன.

உலகம் மிக ரம்மியமாகத் தோன்றிற்று கார்த்திக்குக்கு. வெய்யில் மிதமாக இருந்தது. இரண்டு மூன்று மாணவர்கள் தடித்த கண்ணாடியும் நிதான நடையுமாக வந்தனர். லைப்ரரி இன்னும் திறக்கவில்லை என்கிற அலுப்பு முகத்தில் தெரிய வராந்தாவில் நின்றார்கள்.

சௌக்கிதார் பின்னால் வர லைப்ரேரியன் மித்ரா அவசரமாக வந்தார்.

''ஸாரி ஜென்டில்மென்! உடம்பு சரியாயில்லை. டாக்டரிடம் போக வேண்டியிருந்தது.''

கதவு திறந்த பின்னும் உடனடியாக உள்ளே செல்லாமல் கார்த்திக் சற்று நேரம் வெளியில் நின்றான்.

''வெய்டிங் ஃபார் ஸம் ஒன்?'' என்றபடி இரண்டு பேர்கள் உள்ளே போனார்கள்.

அவனுக்கு லேசாக மார்பு படபடத்தது. ஏதோ கள்ளத்தனம் புகுந்து விட்டது போல.

இன்றைக்கு வருவாளா மாட்டாளா? இத்தனை சீக்கிரம் வந்து நிற்பாளா வேலை மெனக்கெட்டு?

'ஊர் சுற்றுவதைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு படியேன்!'

புத்தகத்தை இன்றாவது படித்து முடித்திருப்பாளா? லைப்ரரியின் விதிகளையும் லைப்ரேரியனின் வார்த்தைகளையும் தீவிரமாக எடுத்துக் கொள்ளும் பழக்கம் அவளுக்கு இருக்கும் என்று தோன்றவில்லை.

''ஓ.கே. 28ம் தேதி!''

எத்தனை நிச்சயமாகச் சொன்னாள். மோகனமாகச் சிரித்துக் கொண்டு!

உண்மையைச் சொல்லி யிருந்தால் அப்படிச் சிரித்திருக்க மாட்டாள் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

சே, என்ன பெண் இவள். அனாவசியமாய் மற்றவர்களைக் காக்க வைத்துக்கொண்டு! சட்டென்று

ஒரு சங்கமத்தைத் தேடி

வாஸந்தி



தன் எண்ண ஓட்டத்தின் அசம்பாவிதம் நினைவுக்கு வந்து சிரிப்பு வந்தது.

'எனக்கு என்ன ஆகிவிட்டது?' என்கிற ஆத்மார்த்த கவலையோடு அவன் உள்ளே நுழைந்து தனக்கு வேண்டிய புத்தகத்தை எடுத்துக் கொண்டு வட்டமேஜையின் முன் அமர்ந்தான். புத்தகத்தைத் தொட்ட மாத்திரத்தில் அதில் ஒன்றிவிடும் மனசு இன்று அதில் பதியாமல் வாசலையே வட்டமிட்டது. தனக்கும் அவனுக்கும் எவ்வளவு வித்தியாசம் என்று நினைத்து ஆச்சரியம் ஏற்பட்டது. அவன் சாதாரணமாகக் கொடுக்க வேண்டிய தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே புத்தகங்களைத் திருப்பி விடுவான்...

அவன் திடீரென்று சந்தேகம் எழுந்து பக்கத்தில் அமர்ந்திருந்தவனைப் பார்த்துக் கேட்டான்:

''இன்றைக்கு என்ன தேதி?''

''இருபத்தி எட்டு!''

நேரம் நகர்ந்து கொண்டே இருந்தது. ஒரு மெல்லிய ஏமாற்ற உணர்வு எல்லாப் புலன்களையும் வியாபிக்க அவன் மெல்ல மெல்லப் புத்தகத்தில் ஆழ்ந்து போனான்.

ஒரு சின்னப் புயல் வீசிற்று. மனோகரமான சுகந்தத்துடன் நாசியைத் தாக்கிற்று. அவன் கவனம் உலுக்கப்பெற்று நிமிர்ந்தான். ஒரு வினாடி பார்வை அசைவற்று நின்றது. தாரா அவனுக்குச் சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்தாள் — பெரிய ஆரவாரத்துடன் தடிமனான புத்தகங்களை மேஜை மேல் பரத்தியபடி— அவனைப் பார்த்துப் புருவங்களை உயர்த்திக் கண்களை மலர்த்தி ''ஹாய்!'' என்று உதடுகளைக் குவித்துப் புன்னகை புரிந்தாள்.

அவன் மேல் புஷ்ப மாரி பொழிந்தது. பன்னீர் மழை விழுந்தது. அதில் திக்குமுக்காடித் தன் கம்பீரத்தை இழக்காத புன்னகையுடன் 'ஹாய்!' என்றான் ரகசியக் குரலில். லைப்ரரியின் கனமான மௌனத்தில் அவளது அசைவுகளும், பக்கங்களைப் புரட்டும் வேகமும் பேனாவினால் நோட்புக்கில் எழுதும் ஓசையும் துல்லியமாகத் தனியாகத் தெரிந்தன. முழுவதும் கவனம் கலைந்து போன நிலையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது. இவள் மகா குறும்புக்காரியாக இருக்க வேண்டும் என்று தோன்றிற்று. அந்த அசட்டு லைப்ரேரியனின் கவனத்தைத் திருப்ப இவள் போடும் நாடகமாக இருக்க வேண்டும் இது....

புத்தகத்தின்மேல் பார்வை பதியாமல் கண்கள் அடிக்கடி அவளை ஆராய்வதைத் தடுக்க முடியாத ஒரு கையாலாகாத் தனத்திகைப்போடு அவன் உட்கார்ந்திருந்தான். மேஜை மேல் விரித்திருந்த புத்தகத்



தின் முன் அவள் தன் இரண்டு கைகளையும் குறுக்காக மடித்தபடி படித்துக் கொண்டிருந்தாள். இன்றும் வெளிர் நிறத்தில் மெல்லிய டீ ஷர்ட்டும் ஜீன்ஸும் அணிந்திருந்தாள். அவன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து அவளது முதுகும் கைமுட்டிகளின் மேல் மெத்தென்ற மார்ந்திருந்த மார்பின் பரிணாமமும் துல்லியமாகத் தெரிந்தன. சலனப்படுத்தின. இத்தனை கச்சிதமான உடம்பும் முக லாவண்யமும்சேர்ந்தாற்போல் யாகிடமும் பார்த்ததாக அவனுக்கு நினைவில்லை.

அவள் தலையை உயர்த்திச் சுற்றிலும் பார்த்தாள். அவன் சரேலென்று பார்வையைப் புத்தகத்துக்குத் திருப்பினான். அவசரமாகக் குறிப்பெழுத முனைந்தான். அவள் சற்றுப் பொறுத்துப் பெரிய ஆரவாரத்துடன் தான் மேஜைக்குக் கொண்டு வந்திருந்த கனமான புத்தகங்களை மூடினாள். அவற்றைத் திருப்பி வைக்க அலமாரிக்குச் சென்றாள். குதிகால் ஷூ குதிரைக் குளம்பு போல் ஒலிக்க.

அவனுக்கு அப்பொழுதுதான் தன்னுடைய வேலையும் முடிந்து போனது நினைவுக்கு வந்தது. அவசரமாக எழுந்து புத்தகத்தைத் திருப்பி வைத்துக் கிளம்பி, யாருக்கோ காத்து நிற்பது போல் வெளி வராந்தாவில் நின்றான்.

''ஹாய்!'' பின்னாலிருந்து அவளது உற்சாகமான குரல் கேட்டது.

எதேச்சையாகத் திரும்பிப் பார்க்கிறமாதிரி பார்த்து அவன் பதிலுக்கு 'ஹாய்' என்று நகைத்தான்.

புதையல்!

வீட்டுப் பெரியவர்
பகவத்கீதை
வாசிக்கச் சொன்னார்
என்ன கிடைக்கும்
என்றான் பையன்
படித்து முடித்தால்
சொல்வேன் என்றார்.
படித்து முடித்த
பையன் அவரிடம்
கிடைப்பது என்னவென்று
கேட்கவேயில்லை!

—இராகுல்ஜி



''புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்தாகி விட்டதா?''

அவள் வியப்புடன் அவனைப் பார்த்துப் பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டாற் போல் சிரித்தாள்.

''ஓ கொடுத்து விட்டேன் ஒரு வழியாய்! இல்லாவிட்டால் அந்தச் சிடுமூஞ்சி மித்ரா என் பெயரை ரிஜிஸ்தரிலிருந்து அடித்திருப்பார். அல்லது கோபத்தில் என் மேல் பாய்ந்திருப்பார்!''

அவள் சிரிக்கும்போது பற்கள் வெளேரென்று வரிசையாய் மின்னின. கன்னங்கள் வெளிர் ரோஜா இதழ்கள் போல் மழமழவென்று பளபளத்தன. பேசிக் கொண்டே வேகமாக நடக்கையில் அலை அலையாக மிதந்த கூந்தலிலிருந்து லேசான நறுமணம் வந்தது.

நடையின் வேகத்தைக் குறைக்காமல் அவள் சொன்னாள்:

''எக்ஸ்க்யூஸ் மீ. நீங்கள் யாரென்று தெரியவில்லை எனக்கு.''

''என் பெயர் கார்த்திக். இன்ஜினீயரிங்—ஃபைனல்! உங்கள் பெயர் எனக்குத் தெரியும்!''

''எப்படி?''

''அழகும் வாய்த் துடுக்கும் உள்ள பெண்ணை யாருக்காவது தெரியாமல் இருக்குமா?''

அவள் மறுபடியும் சிரித்தாள்.

''இதுவரை நான் உங்களிடம் என்ன துடுக்காகப் பேசினேன்?''

''ஸாரி. என்னிடம் பேசவில்லை. உங்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன்.''

''போலிகளும் கோழைகளும்தான் நான் துடுக்கு என்பார்கள்!''

''மற்றவர்கள்?''

''உண்மையைப் பேசுபவள் என்பார்கள்!''

''நீங்கள் இன்று சொன்ன தேதிக்குப் புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்க வந்ததிலிருந்து தெரிகிறது!''

அவள் ஒரு விநாடி அவனை ஏற இறங்கப் பார்த்தாள். சிரித்துக் கொண்டே கேட்டாள்:

''எப்பொழுது பரீட்சை?''

''பத்தாம் தேதி ஆரம்பிக்கிறது.''

''இன்னும் பன்னிரண்டு நாட்கள்தான். படிப்பில் கவனம் செலுத்துங்கள். துடுக்குக்காரப் பெண்ணைக் கவனிக்க உட்கார்ந்திர்களானால் ஆபத்து!''

அவனுடைய பதிலுக்குக் காத்திராமல் சற்றுத் தள்ளி நிறுத்தியிருந்த ஒரு கறுப்பு ஃபியட்டைத் திறந்து வெகு லாகவமாகக் கிளப்பி அவனைக் கடந்து செல்லும்போது உல்லாசமாகச் சிரித்துக் கையை அசைத்து ''பை பை! பெஸ்ட் ஆஃப் லக்!'' என்றாள்.

சுரீலென்று ஓர் அவமான உணர்வு அவனுள் வியாபித்தது. எத்தனை அலட்சியமாகப் போகிறாள் என்று கோபம் வந்தது. தன் அழகைப் பற்றி நிறையக் கர்வம் இருக்க வேண்டும் அவளுக்கு. அதுதான் அந்தத் துணிச்சலுக்குக் காரணம் — அகம் பாவத் துணிச்சல்...

விஜய் அன்று அவளைப் பித்தலாட்டக்காரி என்று சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. நுனி நாக்கு மார்க்ஸிஸம் பேசுபவள் என்று சொன்னது நினைவுக்கு வந்தது. 'தெரிகிறதே' என்று அவன் தனக்குள் கறுவிக்கொண்டான். 'எங்கேயாவது இறக்கி விடட்டுமா?' என்று கூடக் கேட்கத் தோன்றாமல் தன்னிடம் தான் கார் இருக்கிறது என்ற கர்வத்தில் அவன் அதைக் கிளப்பிக் கொண்டு போன வேகத்தில் இருந்து தெரிகிறது.'

'முட்டாள்' என்று தன்னையே திட்டிக் கொண்டான். 'என்ன பசிக இருக்கிறது உனக்கு அவளைப் போய்ச் சிநேகம் செய்து கொள்ள?'

'எத்தனை பைத்தியக்காரன் நீ! மாணவப் பருவத்தில் காரை ஓட்டிக் கொண்டு சுற்றும் உயர் வகுப்பைச் சேர்ந்தவன் அவன். உனக்கும் அவனுக்கும் இடையே சுவாமி மலைக்கும் டில்லிக்கும் இருக்கும் தூரம்! அவன் ஏன் உன் மூக்கை உடைக்க மாட்டான்?'

அவன் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட வைராக்கியத்துடன் இனிமேல் அந்த அகம்பாவக்காரியைப் பற்றின நினைப்பே ஏற்படக் கூடாது என்ற தீர்மானத்துடன் விறுவிறுவென்று பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தான்.

'படிப்பில் கவனம் செலுத்துங்கள்!'

அஹ்! அவள் எனக்குச் சொல்ல வந்து விட்டாள்! ஒரு லைப்ரரி புத்தகத்தை ஒழுங்காகத் திருப்ப வேண்டிய நாளில் திருப்பத் தெரியாத இவள்!

அவன் ஆத்திரத்துடன் காலில் பட்ட எதையோ எட்டி உதைத்தபடி நடந்தான். பஸ் ஏறி வீட்டிற்கு அருகில் இறங்கி நடக்கும் போது மனசு ஒரு சமாதானத்துக்கு வந்திருந்தது. தன்னுடைய பைத்தியக்காரத்தனத்தை நினைத்துச் சிரிப்புக்கூட வந்தது. 'இனி மேல் படிப்பைத் தவிர வேறு எந்தத் திசையிலும் புத்தி போகக் கூடாது.'

போகவில்லை — அதற்கடுத்து உருண்ட நாட்களில். படித்து முடிக்க வேண்டிய பகுதிகளைப் பற்றிய பயமும் எதிர்காலத்தின் மிகப் பெரிய கேள்விக் குறியும் பிரும்மாண்டமாக எதிரில் நின்று வேறு சிந்தனையையே அண்ட விடாமல் தடுத்தது.

அத்தை ஊரிலிருந்து வந்து விட்டாள். சொன்ன வாக்கு தவறாமல்.

பரீட்சைக்குக் கிளம்பு முன் அவளுக்கு சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்துவிட்டுக் கிளம்புவது உண்மையிலேயே ஏதோ பலத்தைக் கொடுக்கிற மாதிரி இருந்தது.

''நன்றாப் பண்ணுடா குழந்தை! நீ நன்னா பாஸ் பண்ணினயானா நான் ஜெயிச்ச மாதிரி!''

சில சமயங்களில் அவளுடைய பரிவும் நெருக்கமும் அவன் கண்களில் நீரை வர வழைத்தன. உத்வேகத்துடன் ஆரம்பித்த பரீட்சைகளுக்கு நடுவில் ஆன்மீக பலத்தைக் கொடுத்தன.

அன்றைக்குக் கடைசி நாள். எல்லாப் பரீட்சைகளையும் ஒட்டு மொத்தமாக நன்றாகவே செய்திருப்பதாகத் தோன்றினாலும் மனத்தின் மூலையில் ஒரு சின்னப் பயம் இருந்து கொண்டிருந்தது. ஒரு வெறுமை உணர்வு.

அநேகமாக எல்லாரும் பாரம் இறங்கி விட்ட நிம்மதியுடன் பலக்கப் பேசினார்கள். பலக்கச் சிரித்தார்கள். கையில் காசை வைத்துக் கொண்டு. ''கமான் 'யார்' காஃபி ஹௌஸுக்குப் போகலாம்'' என்றார்கள்.

அவன் எதிலுமே பட்டுக் கொள்ளாமல் தன் போக்கில் நடந்தான். இரண்டு நாட்களுக்குச் சேர்ந்தாற்போல் தூங்க வேண்டும் போல் இருந்தது....

''ஹாய் கார்த்திக்!''

அவன் தூக்கி வாரிப் போட்டுத் திரும்பிப் பார்த்தான்.

கறுப்பு ஃபியட்டின் ஸ்டியரிங்கைப் பிடித்தபடி தாரா உட்கார்ந்திருந்தாள்.

மோகனமாகச் சிரித்தபடி. ''பரீட்சையெல்லாம் எப்படிப் பண்ணினே?'' என்று கேட்டாள் தமிழில். (தொடரும்)

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. *Place of Publication*: Madras
2. *Periodicity of publication*: Weekly
3. *Name of Printer*: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony
   Anna Nagar
   Madras-600 040
4. *Name of Publisher*: V. Vaidyanathan
   Nationality: Indian
   Address: 6-A, Warren Road,
   Madras-600 004
5. *Name of Editor*: K. Rajendran
   Nationality: Indian
   Address: 1, Purushothama Mudaliar Rd.
   Lake Area
   Nungambakkam
   Madras-600 034
6. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital*
   Bharathan Publications Private Limited
   84/1-C, Race Course Road, Guindy,
   Madras-600032

V. Vaidyanathan
Publisher

1-3-1983

துணுக்குத்



மூன்று முகம் படத்தின் 125-வது நாள் வெற்றி விழா அண்மையில் மதுரையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட நடிகர் செந்தாமரை பேசும் போது, ''சதாரணமாக நடிகருக்கு அதிகாரமான, அருமையான நல்ல வசனங்கள் இருந்தால் அதை வெட்டி விட்டுச் சொல்லச் சொல்லும் உலகம் இன்றைய திரைப்பட உலகம். ஆனால் ரஜினிகாந்த் அப்படியெல்லாம் இல்லாமல் பெருந் தன்மையோடு நடந்து கொண்டார். அதற்காக ரஜினிக்கு என் உயிர் உள்ளவரை நன்றி சொல்லிக் கொண்டே இருப்பேன்'' என்றார்.

—இசை முத்து

''உன்னிடமிருந்து பேப்பரை இரவல் வாங்கிப் போவதற்கு முன் உறுதிமொழி கேட்கிறாயே திருப்பித் தரமாட்டேன் என்று உனக்குச் சந்தேகமா?''

''அதல்லடா! 'இன்றைய செய்தித் தாளில் என் மனைவி மாவு சலிக்க மாட்டாள்' என்று சத்தியம் பண்ணணும்.''





தீவிபத்து!

இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு ரூ500கோடி பெறுமானமுள்ள சொத்து தீயால் அழிகிறது!

ஆதாரம்: ஆ.இ.ரே. செய்தி

அனுப்பியவர்: குண்டன்

'ஜீன்ஸ் போட்டுக் கொண்டு ஆபீஸுக்கு வந்தாள்' என்ற காரணத்துக்காக பெங்களூரில் உள்ள ஒரு பிரபல கம்பெனியில் வேலை பார்க்கும் ஒரு பெண் ஸஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறாள்! அந்தக் கம்பெனியின் ஊழியர்களும் மாதர் சங்கங்களும் அந்தப் பெண்ணுக்காகப் போராடுகின்றனர். தொழி அமைச்சர் வரைக்கும் விஷயம் போகப் போகிறதாம்!

(டெக்கான் ஹெரால்டிலிருந்து)

அனிதா ராமச்சந்திரன்



ய்ச்சி மரம்



உதை பந்து. பந்துக்குள் பிளாடர். அதற்குள் காற்று.

டயர். டயருக்குள் ட்யூப். அதற்குள் காற்று.

அதுபோல் உடம்பு. உடம்புக்குள் உயிர். உயிரிலே இறைவன் தங்கியிருக்கிறான்.

பாலில் நெய் மறைந்திருப்பது போல் இறைவன் எங்கும் நிறைந்து மறைந்திருக்கிறான். கடைந்த தயிரில் நெய் திரண்டு உருண்டு வெளிப்பட்டு நிற்பது போல் ஞானிகள் உள்ளத்திலும், இருக்கோணிலும் இறைவன் விளங்கிக் காட்டி அளிக்கிறான்!

கூறியவர்: வாரியார்

கேட்டவர்: சுராஜ்பாபு

''மாமியார் மருமகள்களுக்குள்ளே போட்டி இருக்க வேண்டியதுதான்... அதுக்காக இப்படியா... சே.. சே... கொஞ்சம் கூட உங்க அம்மாவுக்கு விவஸ்தையே கிடையாது!''

''ஏண்டி, என்ன நடந்துச்சு?''

''நான் மசக்கையா இருக்கேன்னு உங்கம்மாகிட்டச் சொன்னேன். இப்ப அவங்களும் மசக்கையா இருக்காங்களாம்!''

—ஆர்.பி. ராஜு



பெங்களூர் சிடி ஸ்டேஷனில் ரொம்ப நாளாக நடந்து கொண்டு வந்த டிக்கட் ஊழல்கள் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. இந்தக் குழுவுக்கு ஒரு பெண் எல். எல். ஏ.தான் தலைவியாம்! அவருக்கு உடந்தையாகப் பல ரயில்வே அதிகாரிகளும் இருந்திருக்கின்றனர். நீண்ட தூர ரயில்களுக்கான டிக்கட்டுகளை இவர்கள் பல நாட்களுக்கு முன்பே 'ப்ளாக்'கில் விற்று வந்தார்கள். ஒரு வருஷத்தில் இவர்களுக்குப் பல லட்சங்கள் லாபம்! இந்த ஊழல் வெட்ட வெளிச்சமான பிறகு பெங்களூர் ஸ்டேஷனில் டிக்கெட்கள் கிடைப்பது அவ்வளவு கஷ்டமாகவில்லை!

'ஹிந்து' நாளிதழிலிருந்து

அனிதா ராமச்சந்திரன்





அவன்: அதோ போகிறானே, அவனுக்கு லேடீஸ் செருப்புகளில் எத்தனை வகைகள் இருக்கிறதோ அத்தனையும் அத்துபடி!

இவன்: செருப்புக் கடைக்காரரின் மகனா?

அவன்: ஊஹூம்! அத்தனை செருப்புகளிலும் பெண்களிடம் அடி வாங்கி இருக்கிறான்!

—ஆர். அரிகோ

"அம்னீஷியான்னு என்ன பாட்டி அர்த்தம்?'' எண்ணெய்க் குளியலுக்குத் தயாராக உடம்பு முழுக்கப் பளபளக்க, பிறந்த மேனியாக நின்ற ஆறு வயது ராம் ஆவலோடு கேட்டான்.

''எனக்குத் தெரியாதுடி கண்ணு!''

''சொல்லு பாட்டி!'' சிணுங்கத் தொடங்கினான்.

''எனக்கு இங்கிலீஷ் தெரியாதுடி தங்கம். உங்கப்பாவைக் கேட்டுப்பாரு.''

''சரி, என்னை நீ குளிப்பாட்டி விடறியா?''

கேட்டு முடிக்கவில்லை அந்தக் குழந்தை. புயல் போல உள்ளே இருந்து வந்த ராதா அவன் முதுகில் பளீரென்று நாலு சாத்துச் சாத்தினாள். ''எண்ணெயைத் தேய்ச்சுண்டு என்ன அரட்டை? வா இப்படி!''

குழந்தை குரலெடுத்துப் பெரிதாக அழத் தொடங்கினான். ''என்னைப் பாட்டிதான் குளிப்பாட்டணும்! உங்கூட வரமாட்டேன்!''



அம்னீஷியா

தேவிபாலா

''வந்து தொலை சனியனே!'' பளபளத்த உடம்பில் கைவிரல்கள் பதிந்தன.

''ஏம்மா அவனை அடிக்கிறே? குழந்தை ஆசைப்பட்டபடியே நான்தான் குளிப்பாட்டி விடறேனே! இதுக்குப் போய் அவனை அழ விடுவானேன்?''

''மூதேவி, வா எங்கூட. கொள்ளிக் கண் உன் உடம்புல பட்டு நாளைக்கு அப்படி இப்படி ஆச்சுன்னு நாந்தான் வாயிலேயும் வயத்திலேயும் அடிச்சுண்டு அழணும். ம்! சீக்கிரம்.''

அதிர்ந்தாள் பாட்டி. ''ஏம்மா, கொள்ளிக் கண்ணுன்னு என்னையா சொல்றே?''

''புரிஞ்சுண்டாச் சரி...'' குழந்தையை இழுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

''அம்னீஷியான்னு என்னம்மா?''

''உன் தலை. சரியா நில்லு பிசாசே!''

பொங்கும் கண்ணீரை அடக்கக் கவிழ்ந்து படுத்துக் கொண்டாள் பாட்டி.

மதியம் வைத்த சாப்பாட்டைத் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை.

இருட்டும் நேரம் வேகமாக உள்ளே நுழைந்தான் வாசு. ட்யூப் விளக்கு அறையைக் குளிப்பாட்ட மெல்லத் தலையை நிமிர்த்தினாள் பாட்டி.

''ஏம்மா இது மாதிரி நடந்துக்கறே?''

''எது மாதிரிப்பா?''

''மத்தியானம் வச்ச சோறு அப்படியே இருக்கு. என்னம்மா நினைச்சுண்டு இருக்கே உன் மனசுல.?''

''நீ தயவுசெஞ்சு இங்கிருந்து போய்டு வாசு.''

''அம்மா....!''

''ஆமா, என் கொள்ளிக் கண்ணு பட்டு, நீ பொசுங்கிப் போக வேண்டாம். என் போனை நான் பொசுக்கினது போதும். நீயாவது என் பார்வைல படாமத் தப்பிச்சுடுப்பா. நானும் நாலு குழந்தைகளைப் பெத்து வளர்த்தவதான். இப்ப என்ன சாம்பலா மிஞ்சியிருக்கு?''

''அம்மா நீ பேசறது ஒண்ணுமே எனக்குப் புரியலே!''

''உங்கம்மா சொல்றது என்னைத்தான். வயசான காலத்தில ஏன் கஷ்டப்படணும்? அடம் பிடிக்கிற ராமுவைச் சமாளிக்க முடியாதேன்னு பரிவு காட்டினா அதுக்கு இவ்வளவு பெரிய பழியா?'' கண்ணைக் கசக்கத் தொடங்கினாள் ராதா.

வாசுவின் நிலை தர்ம சங்கடமாக இருந்தது. இவளை அழ விட்டா வம்பு. இன்னிக்கு ராத்திரி பட்டினியாப் போயிடுமே!

''அதானே! நல்லதுக்குச் சொன்னா நீ ஏன் இப்படிப் புரிஞ்சுக்காம நடந்துக்கறே! சிவனேன்னு இரேன்.''

''உண்மையைப் புரிஞ்சுக்கோடா வாசு!''

''என்ன உண்மை? புரிஞ்சுக்க வேண்டியது நீதான். வயசான நீ ஒரு பக்கம், இரண்டுங்கெட்டான் குழந்தை மறு பக்கம். அவனோட பிரச்னை உனக்கேன் புரிய மாட்டேங்கறது? ஒனக்கென்ன கஷ்டம் இங்க?''

''அப்பா, அம்னிஷியான்னு என்னப்பா?''

''போடா அந்தப் பக்கம். நேரம் தெரியாமக் கழுத்தறுத்துண்டு.''

''அம்மா, முடிவாச் சொல்றேன். கண்டதை நினைச்சுண்டு சாப்பாட்ல வீம்பு பண்ணாதே. நீ படுத்துண்டா ராதாவுக்கு நரகம், புரிஞ்சுக்கோ. ராதா எனக்குப் பசிக்கிறது, சாதம் போடறியா?''

மனைவிக்குப் பின்னால் நடக்கும் மகனைப் பார்த்தபோது, வேதனையாக இருந்தது

'அடப் பாவி, ஒரு கிழவியோட வேதனையைப் புரிஞ்சுக்க மாட்டேங்கறியே!''

கையில் ஒரு கவளம் சோற்றை எடுத்த பாட்டிக்குத் துக்கம் தொண்டையை அடைக்க, அதைத் தட்டிலேயே எறிந்தாள்.

''ஏன் பாட்டி அழறே?''

எதிரே நிற்கும் பேரனைப் பார்த்தபோது இன்னும் கஷ்டமாக இருந்தது.

''எல்லாரும் உன்னைத் திட்டறுளா பாட்டி? நான் உன் பக்கத்திலேயே உட்கார்ந்தா சாப்பிடுவியா பாட்டி?'' மெல்ல அருகில் வந்த குழந்தை அவள் கழுத்தைச் சுற்றிக் கைகளை இறுக்கிக் கொண்டு கன்னத்தை நனைத்தது.

பாட்டியும் மாறி மாறி முத்தமிட்டாள்.

'இதுக்கு இருக்கிற பாசம் உனக்கில்லியேடா வாசு!' மெல்ல முனகினுள். ''நீ போயிடும்மா. அப்புறம் உங்கம்மா அடிக்கப்போறு''

''அப்பாவை நீதான் எண்ணெய் தேய்ச்சுக் குளிப்பாட்டுவியா பாட்டி? அம்மா என்ன சொன்னுலும் அப்பா தலையாட்டற மாதிரி நீயும் ஆட்டிடு பாட்டி. அப்ப சண்டையே வராது.''

''ராம், அங்க என்ன பண்றே?''

''அம்மா கூப்பிடறு, போம்மா.''

''அம்னிஷியான்னு கெட்ட வார்த்தையா பாட்டி? யாரைக் கேட்டாலும் சொல்லியே தரமாட்டேங்கறு. இதோ வந்திட்டேம்மா!''

'என்னுல இனிமே பொறுக்கமுடியாது.''

''ஏன், என்னுச்சு?''

''பின்ன என்ன? உங்கம்மாவுக்கு இன்னும் ரெண்டு பிள்ளைகள் இருக்காளே! அங்கே போய்க் கொஞ்ச நாள் இருக்கிறது.''

''அவா ரெண்டு பேரும் ஊட்டிலே இருக்காம்மா. அம்மாவுக்கு வாத உபத்திரவம் உண்டு. அங்க போய் ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆச்சுன்னு?''

''அதுக்கு நானு பொறுப்பு? அம்மாவைப் பார்க்கற சாக்கிலே உங்க தங்கைவேற செல்லம் கொஞ்ச வந்துடறு. எனக்கெதுக்கு இந்த எழவெல்லாம்...''

''என்னை என்ன பண்ணச் சொல்றே?''

''ஒண்ணு உங்க அம்மா தம்பி வீட்டுக்குப் போகட்டும். இல்லேன்னு நான் எங்காத்துக்குப் போறேன். சாய்ஸ் உங்களுது.''

''பாட்டி, சித்தப்பா ஆத்துக்குப் போயிட்டா யாரு இங்க பாத்திரம் தேய்ப்பா, துணியெல்லாம் அழுக்காவே இருக்குமே?''

குழந்தையின் கழுத்தை நெரிக்கத் தோன்றியது, ராதாவுக்கு. ''சனியனே போய் விளையாடு!''

''போக மாட்டேன்!'' குழந்தை முறைத்தது.

''அம்மா சொல்றதைக் கேளு ராம். இல்லேன்னு அடிப்பேன்.''

''நீ பாட்டி சொல்றதைக் கேளுப்பா.''

ராதா அவனை இழுத்து வைத்துத் தொடையில் நிமிண்டினுள். ''பேசுவியா, வாய் இனிமே நீளுமா?''

குழந்தை பெரிதாக அழ ஆரம்பித்தான்.


''இதுக்குத்தான் சொன்னேன். இவனுக்கு இப்படிப் பேச யாரு சொல்லித் தர்ரு? எல்லாம் உங்கம்மாதான். அவ இங்க இருக்கிற வரைக்கும் குழந்தை உருப்படாது.''

பாட்டி சட்டென வெளிப்பட்டாள். ''வாசு இது அநியாயம். குழந்தை எம் பக்கத்தில வந்தா நான் துரத்திடறேன் தெரியுமா? இது அவளுகப் பேசற பேச்சுத்தான்.''

''அம்மா நிறுத்து!'' வாசு கர்ஜித்தான். ''நானும் பாக்கறேன். இது சரிப்படல. நாளுக்கு நாள் உன்னைப் பத்தி ரிப்போர்ட் அதிகமாயிண்டே போறது.''

''வாசு, கண்ணை முழுக்கத் திறந்து பாருடா. அவ புடவைத் தலைப்பை விட்டு வெளியே வரப் பாருடா. நா உன் அம்மாடா''

''அய்யோ, எனக்குத் தலையைச் சுத்தறது. இதப்பாரு, உனக்கு என்னை விட்டா இன்னும் இரண்டு பிள்ளைகள் இருக்கா, ஆரு ராதாவுக்கு என்னை விட்டா யாரும் இல்லே. நம்பி



சிறப்பான எதிர் காலத்திற்கு
ராயல் பூட்டானின்
லாசர் பம்பர் சிறப்பு பரிசுகள்

முதல் பரிசு
ரூ.

21 லட்சம்

குலுக்கல்
நாள் :
13.3.83

ரூ. 2 லட்சம் வீதம் 3 பரிசுகள்
ரூ. 1 லட்சம் வீதம் 6 பரிசுகள்

**வருமான வரி கழிவு
கிடையாது**

YOUR FORTUNE IS OUR LOOK OUT

ஜித்தேந்திரா
லாட்டரி ஏஜென்சி
107/1, பெரிய தெரு,
சென்னை-600 005. போன் : 845043

டிக்கட் விலை ரூ. 2

வந்த அவனை நான் வதைக்க முடியாது. நீ மூட்டையைக் கட்டு.''

பாட்டி உடம்பு முழுக்கத் தளர்ந்து போக அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

''ஏண்டா திருதிருன்னு முழிக்கிறே?போய் மூஞ்சியை அலம்பிண்டு வா. பாடத்தை எடுத்துப் படி. உருப்படற வழியைப் பாரு.''

''மாட்டேன். அம்னீஷியான்னு என்னன்னு சொல்லு!''

''என்னடி இவன்? எதுக்கு சும்மா இதைக் கேக்கறான்?' ஏண்டா?''

''ஸ்ரீதேவிக்கு சினிமால அம்னீஷியாவாம். அப்படீன்னு என்ன? சொல்லாட்டா படிக்க மாட்டேன்.''

''அது ஒரு வியாதிடா கண்ணு! போ, போய்ச் சமத்தாப் படி.''

''என்ன வியாதி சொல்லு?''

''அட, பெரிய எழவாப் போச்சு இவ னோட.''

''தெரிஞ்சாச் சொல்லித்தான் தொலேங் களேன். தொந்தரவு குறையும்.''

''அது வந்து....அதுவந்து....பழசெல்லாம் முழுக்க முழுக்க மறந்து போயிடுமாம்.''

''எப்படி? எனக்குப் புரியலே.''

''புரியாட்டி நாசமாய்ப் போ!''

''நீ வாடிம்மா நான் சொல்றேன்.'' ராதா அவனை இழுத்து மடியில் இருத்திக்கொண் டாள்.

''ஏதாவது ஒரு ஆக்ஸிடெண்ட் ஏற்பட்டு துன்னு அப்படி ஏற்பட்டவாளுக்கு — சில ருக்குத்தான் — பழசெல்லாம் மறந்து போயிடு மாம், அப்புறமாப் புதுசா உள்ளது மட்டுந் தான் நினைவில் இருக்குமாம். அதுதான் அம் னீஷியா. புரிஞ்சுதா?''

புரிந்தும் புரியாத நிலையில் விழித்த ராம் எழுந்து கொல்லைப்புறம் போனான். போகும் வழியில் நின்றான். பாட்டி அழுது கொண்டிருப்பது தெரிந்தது. எங்கோ வலித் தது. காரணம் புரியவில்லை.

கணவன் (மனைவியிடம்): நான் இன்று காலை என் உயிரை இன்ஷ்யூர் செய்து கொண்டேன்.

மனைவி: தெரியுமே உங்கள் காரியம். எப்பவும் தன்னைப் பற்றியேதான் நினைப்பு உங்களுக்கு. பிறத்தியார் நினைவே கிடையாது.

—எஸ். சுமதி



''ஊருக்குப் போறியா பாட்டி?''

''ஆமாண்டா ராஜா!''

''இனிமே வரவே மாட்டியா பாட்டி?''

பதில் பேசாமல் நின்றாள் பாட்டி.

உள் பக்கத்து அறையில் நின்று கொண் டிருந்த அம்மாவை விரோதமாகப் பார்த் தான். ''நானும் உங்கூட வரட்டுமா பாட்டி? சித்தப்பா ஆத்துல போய்ப் பாத்திரம் தேய் பியா? இங்க மாதிரி அங்க பழைய சாதம் சாப்பிடாதே குளிரும்.''

குழந்தையைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போய்ப் படுக்கையில் எறிந்தாள் ராதா.

பாட்டி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போவது தெரிந்தது. அழத் தோன்றியது. அப்படியே தூங்கிப் போனான். தூக்கத்தில் அம்மா தலையை விரித்துப் போட் டுக்கொண்டு வந்தாள். ''பழசை மறந்து. புதுச மட்டும் நினைவில இருக்கும். அது தான் அம்னீஷியா.''

புது மனைவியோடு ஆறடி உயரத்துக்குக் கம்பீரமாக உள்ளே நுழைந்த மகன் ராமுக்கு ஆரத்தி எடுத்தாள் ராதா. அன்று எண் ணெய்க் குளியலுக்கு அடம் பிடித்த ஆறு வயது நிர்வாணம்தான் அவள் கண்ணில் நின்றது.

மிரள மிரள விழித்த மருமகளை அருகில் சென்று அன்போடு அணைத்துக் கொண்டாள் ராதா.

''பூர்ணி, இங்க வா!'' மனைவியை உள்ளே அழைத்துக் கொண்டு பாட்டியின் படத் துக்கு எதிரே போய் நின்றான். ''என் தெய்வம் நமஸ்காரம் பண்ணிக்கோ.''

நமஸ்கரித்து எழுந்தாள் பூர்ணிமா.

''அம்னீஷியான்னு என்னன்னு தெரியுமா உனக்கு?'' — மனைவியைக் கேட்டான்.

சிரித்துக் கொண்டே, குறுக்கே வந்தாள் ராதா. ''இந்தக் கேள்வி இன்னுமா உன்னை விட்டுப் போகல்லே? இது பெரிய வேடிக்கை யம்மா. குழந்தையிலேருந்து அடிக்கடி இந்தக் கேள்வியைக் கேட்டுத் தொளைச்சுடு வான். இனிமே நீ மாட்டிண்டே, அப்படி என்னடா அம்னீஷியா மேலே உனக்குத்தீராத மோகம்?''

''நீ பதிலே சொல்லலியே!'' மனைவியைத் தூண்டினான்.

''ஒரு விபத்துல பழசு மறந்து புதுச மட்டும் நினைவில தங்கும்னு சொல்லுவாங்க. இதுதான் எனக்குத்தெரிஞ்ச அம்னீஷியா.''

வாசலில் டாக்ஸி குரல் கொடுத்தது.

''கொஞ்சம் இருப்பா இதோ வந்திட் டேன்'' உரக்கக் குரல் கொடுத்தான் ராம்.

''பூர்ணி, எனக்கு இப்ப அம்னீஷியா! உனக்குத் தெரியுமோ?''

''என்னடா உளர்றே?'' ராதா குறுக்கே வந்தாள்.

''உளறலம்மா. நீ இப்ப எனக்குப் பழசு, பூர்ணி புதுசு. விபத்து இந்தக் கல்யாணம். அன்னிக்கு அப்பாவுக்கு அம்னீஷியா. இன் னிக்கு எனக்கு. போலாமா பூர்ணி?''

வாசலைப்பார்த்து நடக்கத்தொடங்கினான்


ஏதாவதொரு மிக்ஸரை வாங்கிவிடாதீர்கள்
... உங்கள் தேவைக்கேற்றது ஸுமீத்

அற்புதமான ஸுமீத்! இதன் வகையில் இந்தியாவிலேயே முதலாவது. நாடெங்கிலும் மேன்மேலும் அதிக இல்லத்தரசிகளுக்கு வியப்பூட்டி வருகிறது!


ஸுமீத்தில் மட்டுமே, எல்லா வேலைகளுக்கும் பயனுறும், விசேஷமாக வடிவமைக்கப்பட்ட, பல-பயனுள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி. அதன் மீது உள்ளே பார்க்கக் கூடிய அக்ரிலிக் மூடி. எனவே ஸுமீத் இயங்குவதைக் கண்ணெதிரில் காணலாம்.

பல்வேறு வேலைகளை விரைவிலும் எளிதிலும் செய்து முடிக்க, இப்போது இதில் 4 அலகு அமைப்பு பாகங்கள் :

ஈரப் பண்ட அரைவைக்காக,
உலர் பண்ட அரைவைக்காக,
கடைய, கலக்க, சாறு பிழிய,
மாமிசத்தை அரிக்க,
காய்கறிகளை நறுக்க.

இவை மட்டுமா? ஸுமீத்தில் 30 நிமிடங்கள் வரை நிற்காமல் ஓடக்கூடிய ஹெவி ட்யூட்டி மோட்டார்.


அற்புதமான ஸுமீத் ஒன்றுதான் முழுமையான கிட்சன் மெஷின். இதை அடைய எத்தனை நாள் வேண்டுமானாலும் காத்திருக்கலாம்.



ஈர அரவை—
வடை, இட்லி, தோசைக்காக உளுந்தம் பருப்பு மற்றும் அரிசியை அரைக்க 3½ நிமிடங்களில்.

உலர் அரவை—
எல்லாவித மசாலாக்கள், மிளகாய் வற்றல், மிளகு, மஞ்சள், கொத்துமல்லி விதை ஆகியவற்றை அரைக்க.





பொடிக்க—
1 நிமிடத்தில் மாமிசத்தை பொடிக்க, காரெட், வெங்காயம், தேங்காய் மற்றும் கொட்டைகளை நறுக்க—விநாடிகளில்.


அரைக்க—
2 நிமிடங்களில் தேங்காய் சட்னி அரைக்கலாம் அல்லது விநாடிகளில் கொத்துமல்லிச் சட்னி அரைக்கலாம்.





கடைய—
லஸ்ஸி, மில்க் ஷேக் ஆகியவற்றை ஒரே நிமிடத்தில் தயாரிக்க அல்லது நிமிடங்களில் மயோனைஸ் தயாரிக்க. வீட்டிலேயே வெண்ணெய் கடையலாம்.

விருப்பத் தேர்வு : ஒப்பற்ற நீடிங் இணைப்பு



மாவு பிசைய— சப்பாத்தி, பூரி, ரொட்டி தயாரிக்க 2 நிமிடங்களில் மாவு பிசையலாம். கேக் மாவை மிகவும் சன்னமாகப் பிசையலாம்— 3½ நிமிடங்களில்.

ஸுமீத்®

உங்கள் முழுமையான கிட்சன் மெஷின்

அற்புதமான ஸுமீத் பலவகைப் பல்வேறு பணிகளைச் செய்கிறது– மற்ற எல்லா வீட்டுபயோக மிக்ஸர்களைவிடச் சிறப்பாக. எப்போது சாங்கள் இவ்வளவாக இயக்கிக் காட்டுகிறோம் என்பதைக் கவனித்து வாருங்கள். உங்களுக்கெனவே ஸுமீத் சிறப்பாக இயங்குவதைக் காணுங்கள்!

தயாரிப்பாளர்கள் : பவர் கண்ட்ரோல் அண்ட் அப்ளையன்ஸஸ் கம்பெனி
F/11 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600 058 இந்தியா. ஃபோன் : 633340

சர்வீஸ் சென்டர்கள் :
சென்னை : செப்டைகிளாஸர்ஸ் & என்ஜினியர்ஸ், தொலைபேசி : 445700/442055 ● விவேக் எஜென்ஸிஸ், தொலைபேசி : 76923/75661 ● விவேக் & கம்பெனி, தொலைபேசி 444129 ● விவேக் & கம்பெனி, தொலைபேசி : 663545 ● வி. ஜி. பன்னீர்தாஸ் & கம்பெனி, தொலைபேசி : 812121/88184.
மதுரை : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், தொலைபேசி : 24028.
கோயம்புத்தூர் : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், தொலைபேசி : 24579/25566.
திருச்சி : ஸ்டாண்டர்ட் எலெக்ட்ரிக் கம்பெனி, தொலைபேசி : 24343.

கள்வனின் காதலி



அமரர் கல்கி

அத்தியாயம் 39

திருப்பதி யாத்திரை

திருப்பதியில் உள்ள ஸ்ரீ வேங்கடேசப் பெருமானுக்கு உலகத்திலே நாம் எங்கும் கேட்டறியாத ஓர் அபூர்வமான சபலம் இருந்து வருகிறது. தம்மிடம் வரும் பக்தர்களின் தலையை மொட்டையடித்துப் பார்ப்பதில் அவருக்கு ஒரு திருப்தி. வேறெங்கேயாவது மொட்டையடித்துக் கொண்டு வந்தால் பிரயோசனமில்லை. அவருடைய சந்நிதியிலேயே மொட்டையடித்துக் கொண்டு தலை மயிரையும் அவ்விடமேதான் அர்ப்பணம் செய்ய வேண்டும். சாதாரணமாய்க் குழந்தைகளை அப்படிப் பார்ப்பதிலேதான் அவருக்கு அத்யந்த ஆசை. ஆனால் சில சமயம் மீசை முளைத்து, தலை நரைத்த பெரியவர்களும் கூட அங்கே போனதும் கடவுளுக்கு நாம் குழந்தைகள்தானே என்ற எண்ணத்திலே தலையை மொட்டையடித்துக் கொண்டு விடுகிறார்கள். ''சாமியாவது பூதமாவது? அப்படி ஒரு சாமி இருந்தால் அவர்தான் என்னை வணங்கட்டுமே? நான் ஏன் அவரை வணங்கவேண்டும்?'' என்று பேசும் பகுத்தறிவுப் பெரியவர்கள் கூடத் திருப்பதிக்குப் போனதும் பகுத்தறிவெல்லாம் பறந்துபோய்த் தலையை மழுங்கச் சிரைத்துக்கொண்டு விடுகிறார்கள். கூந்தல் வளரும் தைலங்கள் தடவி அருமையாக வளர்த்த அளக பாரத்தை எத்தனையோ ஸ்திரீகள் அங்கே பறி கொடுத்து விட்டு வருகிறார்கள்.

அந்த வருஷம் கல்யாணியின் தகப்பனார் திருச்சிற்றம்பலம் பிள்ளைக்குக் குடும்பத்துடனே திருப்பதி போய் வர வேணுமென்ற விருப்பம் ஏற்பட்டது. தலை மொட்டையடிப்பதற்கு அவருடைய இளையதாரத்தின் குழந்தைகள் ஏராளமாய் இருந்தார்கள். வேங்கடேசப் பெருமாளுக்குக் குடும்பத்திலே வேண்டுதலும் இருந்தது. கல்யாணி அவ்வளவு பெரிய சொத்துக்காரியாக இருக்கும்போது, செலவுக்குப் பணத்துக்குத்தான் என்ன குறைவு? திருப்பதிக்குப் போய் வந்து விமரிசையாகக் 'கம்ப சேர்வை' நடத்தி, கூத்து வைக்க வேணுமென்றும் அவர் முடிவு செய்திருந்தார். கல்யாணியிடம் இதைப் பிரஸ்தாபித்தபோது, அவள் ஆவலுடன் தானும் வருவதாகத் தெரிவித்தாள்.

கல்யாணி பூங்குளத்துக்கு வந்து மூன்று மாதம் ஆயிற்று. ஆரம்பத்தில் முத்தையனைச் சந்தித்துப் பேசியதின் பயனாக அவளுடைய உள்ளத்தில் சிறிது அமைதி ஏற்பட்டிருந்தது. நாளாக ஆக அந்த அமைதி குன்றி,



பரபரப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது. ''முத்தையன் ஏன் இன்னும் வரவில்லை? அவன் எங்கே போனான்? என்ன செய்கிறான் என்று அவள் உள்ளம் ஒவ்வொரு கணமும் கேட்டுக் கொண்டிருந்தது. அவனைப் பார்க்க வேணுமென்ற தாபத்தினால் அவளுடைய இருதயம் துடித்துக் கொண்டிருந்தது. அவளுடைய தாபம் மீதமிஞ்சிப் போகாத வண்ணம் ஒருவாறு ஆறுதல் அளித்து வந்தது

அந்த நதிக் கரைப் பிரதேசம் தான். இந்த இரண்டு மூன்று மாத காலமாகக் கல்யாணி பழையபடி கொள்ளிடக்கரை வனதேவதையாக விளங்கினாள். தினம் தவறினாலும் அவள் நதிக்குக் குளிக்கப் போவது தவறுவதில்லை. அப்படிப் போகிறவள் திரும்பி வீட்டுக்கு வர அவசரப்படுவதுமில்லை. நெடு நேரம் காடுகளில் சுற்றிக் கொண்டிருப்பாள். அவள் கன்னிப் பருவத்தில் பழம் பறித்துத் தின்ற நாவல்மரம், இலந்தைமரம் இருக்குமிடமெல்லாம் இப்போதும் தேடிச் செல்வாள். கிளைகளை உலுக்குவாள். உதிர்ந்த பழங்களை ஓடி ஓடிப் பொறுக்

கிச் சேர்ப்பாள். அப்போது முத்தையனுடைய ஞாபகம் வந்துவிடும். அப்படியே தரையில் உட்கார்ந்து பகற்கனவில் ஆழ்ந்து விடுவாள். ஐயோ! தன்னை மட்டும் முத்தையனுக்குக் கட்டிக் கொடுத்திருந்தால் வாழ்க்கை எவ்வளவு ஆனந்தமயமாய் இருந்திருக்கும்?

தினம் ஒரு தடவை பாழடைந்த கோவிலுக்குச் சென்று பார்ப்பாள். ஒவ்வொரு நாளும் ''இன்றைக்கு வந்திருப்பானோ'' என்ற அடங்காத ஆவலுடனே செல்வாள். படபடவென்று அடித்துக் கொள்ளும் மார்பை அமுக்கிப் பிடித்துக் கொண்டு போய்ப் பார்ப்பாள். முத்தையன் வழக்கமாக உட்காரும் மேடை வெறிதாயிருக்கக் கண்டதும், அவள் நெஞ்சு துணுக்கமடையும். ஒருவேளை தன்னை அலைக்கழிப்பதற்காகப் பக்கத்தில் எங்கேயாவது ஒளிந்திருப்பானோ என்றுகூட நாலாபுறமும் தேடிப் பார்ப்பாள்.

ஏன் இன்னும் வரவில்லை? அபிராமியை ஒரு தடவை பார்த்து வர வேண்டுமென்றுதானே போனான்? பார்த்தானோ, இல்லையோ? ஒருவேளை அவள் அவனைப் பிரிய மாட்டேன் என்று சொல்லிவிட்டாளோ? இருவருமாகக் கப்பலேறிப் போய் விட்டார்களோ?

சகிக்க முடியாத இந்த எண்ணம் தோன்றும்போது அவளுக்கு அபிராமியின்மீது கோபம் அசாத்தியமாக வரும். அந்தப் பாழும் அபிராமியினாலேதான் தன்னுடைய வாழ்க்கை பாழானதெல்லாம்! அவள் எதற்காகப் பிறந்தாள்? அவள் பிறக்க வேண்டியது அவசியமென்றால் தன்னை எதற்காகப் பகவான் படைக்க வேண்டும்?

இப்படி ஒவ்வொரு நாளும் கல்யாணிக்கு முடிவில்லாத ஒரு யுகமாகப் போய்க் கொண்டிருந்தது. இத்தகைய சந்தர்ப்பத்திலேதான் திருச்சிற்றம்பலம் பிள்ளை குடும்ப சகிதமாகத் திருப்பதி யாத்திரை கிளம்பினார். ஆடி பிறந்து நடவு ஆரம்பமாகி விட்டால் அப்புறம் எங்கும் கிளம்ப முடியாதென்றும், யாத்திரை புறப்பட இது தான் சரியான தருணம் என்றும் அவர் எண்ணினார்.

நாளுக்கு நாள் உள்ளக் கிளர்ச்சி அதிகமாகிக் கொண்டிருந்த கல்யாணிக்குத் தான் பூங்குளத்திலேயே இன்னும் இருந்தால் பைத்தியமே பிடித்து விடும்போல் தோன்றிற்று. யாத்திரை கிளம்பிச் சென்றால், பல இடங்களைப் பார்ப்பதில் சிறிது மனத்தைச் செலுத்தலாமல்லவா? ஒருவேளை, போகுமிடங்களில் ஏதாவது முத்தையனைப் பற்றிய செய்தி காதில் விழுந்தாலும் விழலாமல்லவா? — இந்த எண்ணத்துடனே தான் கல்யாணியும் திருப்பதிக்குக் கிளம்பச் சித்தமானாள். குறிப்பிட்ட நல்ல நாளில் திருச்சிற்றம்பலம் பிள்ளையின் குடும்பம் திருப்பதிக்குப் பிரயாணமாயிற்று.

அத்தியாயம் 40

ராயவரம் ஜங்ஷன்

சாதாரணமாகவே ஒரு ரயில்வே ஜங்ஷனைப் போல் கலகலப்பான இடம் வேறு கிடையாது என்று சொல்லலாம். அதிலும் ராயவரம் ஜங்ஷனைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அங்கே நாலு முக்கியமான இடங்களுக்குப் போகும் நாலு ரயில் பாதைகள் வந்து சேர்கின்றன. ஆகவே, பகல், இரவு இருபத்து நான்கு மணி நேரமும், ஸ்டேஷன் கலகலவென்றுதான் இருக்கும்.

ஆஹா! அங்கே எத்தனை விதமான வாசனைகள்தான் கலந்து வருகின்றன? தாழம்பூ, ரோஜாப்பூ, வெட்டிவேர், மருக்கொழுந்து வாசனை; மசால்வடை, காராபூந்தி வாசனை; சாம்பார் சாதம், தயிர் சாதம் வாசனை; ரொட்டி, பன், பிஸ்கோத்து வாசனை; புகையிலை வாசனை; சுருட்டுப் புகை வாசனை; அழுகிய ஆரஞ்சுத் தோல், வாழைப் பழத் தோல் வாசனை; மனுஷ்யர்களுடைய மேலிருந்து வரும் ஸெண்டு, ஜவ்வாது, வேப்பெண்ணெய் வாசனை; கங்கையிலே முழுகிய பின், ராமேசு

ஜெர்மனியில் மிக மலிவாகக் கிடைப்பது ஆப்பிள். நம் ஊர் வாழைப்பழம் போல. ஆப்பிள் ஜூஸ் கொடுத்து உபசரித்தால் சரியான உபசரிப்பாக ஏற்க மாட்டார்கள். அங்கு அன்னாசி ஜூஸ் தருவதைத்தான் மிகப் பெருமையாக எண்ணுகின்றனர். அன்னாசிப் பழம் விலை உயர்ந்தது.

—எஸ். விஜயா சீனிவாசன்



GANESHJI MANDIR

IRWIN ROAD, NEW DELHI-110001

An appeal to you

Sani Preethi to ward off the bad effects of Sani Bhagwan

As you know the cycle of human life is controlled by the Nine planets (Navagrahas) and Sani Bhagwan plays an important role in every one's life. Therefore, for our mental peace and smooth running of our daily life, Sani Bhagwan's blessings are very essential. It is the belief, from time immemorial that by pleasing Him, He minimises our difficulties to a considerable extent. Offering til oil to keep the lamp (kept before Navagraha temple) glowing throughout the day and night is the most simplest and economical way of pleasing Him.

The daily consumption of til oil comes to 3 kgs. (the cost of which works out to Rs. 54/- daily). If 1000 devotees come forward with a donation of Rs. 200/- each, that too only once in their life time, it would be possible to deposit an amount of two lakhs of rupees in a nationalised bank and out of the interest thereof, it would be possible to see that the lamp glows for ever. Thus, you would observe that your contribution of Rs. 200/- is for an eternal cause and for the entire future. I am sure, you would lend your full support for this cause by donating the requisite amount. You can pay in one / two or four instalments. Your cheque drawn in favour of **'Ganeshji Mandir'** may please be sent to

Shri **S. R. Iyer**, Secretary,
GANESHJI MANDIR,
Irwin Road, New Delhi-110 001

An appeal to YOU

Construction of a Vimanam

'Ganeshji Mandir' the first South Indian temple in Delhi is without a Vimanam. It has now been proposed to construct the same. The totat cost has been estimated at about Rs. 1,50,000/-. Jagadguru Sri Sankaracharya Swamigals of Kanchi Kamakoti and Sringeri Peetams have conveyed their blessings for its success. They have desired that a large number of devotees should take part in making this project a succees. Your association in this project as well as financial support is very necessary to achieve our goal. Therefore, I am taking the liberty of approaching you for a nominal donation of Rs. 11/- only. Money Order or Cheque drawn in favour of **'Ganeshji Mandir'** be sent to Sri **S. R. Iyer**, Secretary.

வரத்தில்தான் குளிப்பது என்ற திட சங்கல்பத்துடன் வரும் வடக்கத்தியர்களுடைய அழுக்கடைந்த துணிகளிலிருந்து வரும் வாசனை; அம்மம்மா! அந்த வாசனைகளையெல்லாம் தனித் தனியாகப் பிரித்து எடுத்து எண்ணினால் குறைந்தது முப்பதினாயிரம் வாசனை இராதா?

அப்புறம் எத்தனை தினுசான மனிதர்களை நாம் அங்கே பார்க்கிறோம்! பட்டிக்காட்டுக் குடியானவர்கள்; பட்டணத்து நாகரிக புருஷர்கள்; உச்சுக் குடுமி மனிதர்கள், கிராப்புத் தலைக்காரர்கள், குல்லா அணிந்தவர்கள்; தொப்பி தரித்தவர்கள்; பட்டை நாமங்கள்; சந்தனப் பொட்டுக்கள்; முறுக்கு மீசைகள்; ஹிட்லர் மீசைகள்; முகக்ஷவரங்கள், நீண்ட தாடிகள்!

ஸ்திரீகளிலேதான் எத்தனை விதம்? கொரநாட்டுப் புடவை தரித்தவர்கள்; புதுச்சேரி ஸில்க் அணிந்தவர்கள்; நெற்றி நிறையும்படி குங்குமப் பொட்டு இட்டவர்கள்; கண்ணுக்குத் தெரியாதபடி சிறு சாந்துப் பொட்டு வைத்தவர்கள்! தலை பின்னித் தொங்க விட்டவர்கள், பின்னலை எடுத்துக் கட்டியவர்கள்! பின்னாமல் கொண்டை போட்டுக் கொண்டவர்கள்; வைரக் கம்மல்கள்; தொங்குகிற டோலக்குகள்!

அங்கே கிளம்புகிற சத்தங்கள் எத்தனை வகை! ரயில் ஊதும் சப்தம்; என்சின் புகை விடும் சப்தம்; மணி அடிக்கும் சப்தம்; ''மசால்வடை முந்திரிப் பருப்பு'' என்று விற்கும் சப்தம்; குழந்தைகள் கூக்குரலிடும் சப்தம்; ஸ்டேஷனுக்கு வெளியே ஜட்கா வண்டிகள் கடகடவென்று ஓடும் சப்தம்; மோட்டார் ஹாரன்களின் சப்தம்; எல்லாவற்றுக்கும் மேலாக ஜனங்கள் பேசுகிற கலகல சப்தம்.

ஒரு ரயில் பிளாட்பாரத்தில் நம்முடைய காதில் விழுகிற பேச்சுக்களைப் போல் சுவாரஸ்யமானது வேறு ஒன்றுமே கிடையாது என்று சொல்ல வேண்டும்.

''கொஞ்சமாவது மூளையே இல்லாதவர்கள் ராஜ்யத்தை ஆண்டால், வேறு என்னதான் நடக்கும்?'' என்று ஓர் அரசியல்வாதி சொல்லிக் கொண்டு போகிறார்.

''அய்யர்வாள்! என்னதிட்சை வளர்க்கிறாப்போலிருக்கே! ஆத்திலே எத்தனை மாதம்?'' என்று கேட்கிறார் ஒரு கர்நாடகப் பேர்வழி.

''அம்மா எனக்கு ஒரு லயிலு வண்டி வாங்கிக் கொடு!'' என்று மூக்கால் அழுகிறது ஒரு சின்னக் குழந்தை. (அது வாங்கிக் கொடுக்கச் சொல்வது பொம்மை ரயிலைத்தான்; நிஜ ரயிலையல்ல.)



ஒருவர்: ''உங்களுக்கும் உங்க மனைவிக்கும் ஒரு வாரமா 'வாக்கு' வாதம் என்றீர்களே! எதைப் பற்றி?''
மற்றவர்: ''யாருக்கு வோட்டுப் போடுவது என்பதைப் பற்றித்தான்!''
—ஆர். சுப்பு

''ஏன் ஸார்! இன்றைக்குப் பேப்பரில் என்ன ஒரு இழவும் இல்லையே!'' என்று சொல்லிக் கொண்டு போகிறார் ஒரு பத்திரிகைப் பிரியர்.

''அடே ராமு! பரீட்சையில் 'கோட்' அடிச்சுட்டயாமே? இப்படிக் கொடு கையை!'' என்று ஒரு வாலிபன் இன்னொரு வாலிபனுடைய கையைப் பிடித்துக் குலுக்குகிறான்.

ராயவரம் ஜங்ஷன் இப்படி கலகலப்பாக இருந்து கொண்டிருந்தது. சென்னைக்குப் போகும் ராமேச்வரம் எக்ஸ்பிரஸ் வண்டி வருகிற நேரம் நெருங்கி விட்டபடியால், ஜனங்கள் பெட்டி படுக்கைகளுடனும், மூட்டை முடிச்சுகளுடனும், குழந்தை குட்டிகளுடனும் கூட்டம் கூட்டமாக வந்து பிளாட்பாரத்தில் சேர்ந்து கொண்டிருந்தார்கள். இப்படி வந்தவர்களில் திருச்சிற்றம்பலம் பிள்ளையையும் அவரது குடும்பத்தாரையும் நாம் பார்க்கிறோம்.

★ ★ ★

மேம்பாலத்துக்குப் போகும் படிக்கட்டின் அடியில் விழுந்திருந்த நிழலில் ஒரு பெட்டியின் மேல் உட்கார்ந்திருந்தாள் கல்யாணி. அத்தை அவள் பக்கத்தில் நின்றாள். திருச்சிற்றம்பலம் பிள்ளையும் அவருடைய மனைவியும் குழந்தைகள் அங்கும் இங்கும் ஓடாமல் தடுத்து நிறுத்தும் பெரு முயற்சியில்

சுடுபட்டிருந்தார்கள். வண்டிக்காரர்கள் இரண்டு பேர் கையில் தார்க்குச்சியுடன் பயபக்தியோடு சற்றுத் தூரத்தில் நின்ருர்கள்.

அந்தப் பிளாட்பாரத்தில் கூடியிருந்த அவ்வளவு ஸ்திரீகளுக்குள்ளும் கல்யாணிதான் அழகும் வசீகரமும் பொருந்தி விளங்கினுள். அவ்வழியே போன ஸ்த்ரீகள் அவளைப் பொருமை பொங்கிய கண்களுடன் பார்த்துக் கொண்டு போனுர்கள். புருஷர்கள் எங்கேயோ பார்க்கிற பாவனையுடன் அவளைப் பார்த்துக் கொண்டு சென்ருர்கள். பட்டு உருமாலையும் ஜவ்வாதுப் பொட்டும் தரித்த ஓர் இளைஞன் அவ்வழியாகக் குறுக்கே நெடுக்கே ஐந்தாறு தடவை போய்விட்டான்.

முதலில் இரண்டொரு நிமிஷம் கல்யாணி பிளாட்பாரத்தின் நாலாபுறமும் பார்த்துப் பார்த்து ஆச்சரியப் பட்டுக் கொண்டிருந்தாள். அப்புறம்பட்டென்று அவள் முகத்தில் ஒரு மாறுதல் உண்டாயிற்று. கவனத்துடன் எதையோ கேட்பவள் போன்ற பாவனை தோன்றிற்று. ஐந்து நிமிடத்துக்குள் அவளுடைய முகத்தில் ஆயிரம் விதமான பாவங்கள் காணப்பட்டு மறைந்தன. வியப்பு, கோபம், ஆவல், ஆத்திரம், சந்தேகம், பரபரப்பு இவ்வளவு பாவங்களும் மாறி மாறித் தோன்றின.

அவளுக்குக் கொஞ்ச தூரத்தில் சிலர் கும்பலாகப் பேசிக் கொண்டிருந்தது அவளுடைய காதில் விழுந்ததுதான் இதற்குக் காரணமாகும்.

கூட்டத்தில் ஒருவர் சொல்கிருர்: ''அதை யெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்? சென்னைப் பட்டணமெல்லாம் ஓரே 'கொல்' லென்று போயிருக்கு! அடாடா! அந்தத் திருடனுடைய சாமர்த்தியத்தைச் சொல்லுகிருர்கள், சொல்லுகிருர்கள் அப்படிச் சொல்லுகிருர்கள்....''

கூட்டத்தில் இன்னெருவர்: ''ஏன் ஸார்! அது எப்படி அவ்வளவு பெரிய கூட்டத்திலே அத்தனை போலீஸ்காரருக்கும் டிமிக்கி கொடுத்துவிட்டு அவன் தப்பித்துக் கொண்டான்? நம்ப முடியாத அதிசயமாயிருக்கிறதே!''

முதல் பனிதர்: ''பாருங்கள், ஸ்டேஜ் மேலே யிருந்து அப்படியே அலாக்கா ஒரு தாவு தாவினுனும். நாடகம் பார்க்க வந்திருந்தவர்கள் தலைகளின் மேலேயே நடந்து இரண்டு எட்டிலே போய் விட்டானும். இன்னும் பெரிய வேடிக்கை என்ன தெரியுமா? அவனை அரெஸ்ட் செய்ய வந்திருந்த போலீஸ் டிபுடி கமிஷனரின் மோட்டார் வண்டி வாசலிலே நின்று கொண்டிருந்ததாம். அந்த வண்டியைத்தான் அவன் விட்டுக் கொண்டு போய்விட்டானும்!''

வேருெருவர்: ''அவன் எங்கேதான் போயிருப்பான் என்று ஏதாவது தெரிந்ததோ?''

''எங்கே போயிருப்பான்? பழைய படி கொள்ளிடக் கரைக்குத்தான் வந்து சேர்ந்திருப்பான். நாணற் காட்டிலே புகுந்துவிட்டால் அப்பாலே யாராலே கண்டு பிடிக்க முடியும்? ஆயிரம் போலீஸ்காரர்கள்தான் வரட்டுமே?''

''ஆமாம்; நாணற் காட்டில் புகுந்து விட்டால், சாப்பாட்டுக்கு என்ன வழி?''

பாப்பாப் பாட்டுப் பாடியவனுக்கு அஞ்சலி:



பாப்பா சினிமா

● சினிமா உலகப்பெரும் புள்ளிகள் வெறும் வாய்ப் பந்தலுடன் நிற்க, இதோ ''மகா கவி பாரதியார்'' என்ற பாரதியின் வரலாற்றைப் பற்றிய திரைப்படம், முழுவதும் சிறுவர்—சிறுமியராலேயே நடிக்கப்படுகிறது! தயாரிப்பவர் திரு சர்மா.

ஒரு தேசத் தலைவரைப் பற்றிய படம் குழந்தைகளை நடித்து உருவாவது இந்தியாவிலேயே இதுதான் முதல்.

டி.வி.எஸ். சர்மா குழந்தைகளை வைத்துப் பாரதியார் நாடகத்தைப் பலமுறை அரங்கேற்றியுள்ளார்.

''அது தெரியாதா உங்களுக்கு? கொள்ளிடக் கரையில் ஏதோ ஒரு கிராமத்தில் அவனுக்கு... (மெதுவான குரலில்) யாரோ ஒரு பெண்பிள்ளை இருக்கிறாளாம்!''

''இதற்கு என்ன, ஸார் இவ்வளவு இரகசியம்? முத்தையன் போகிற ஊரெல்லாம்தான் அவனுக்கு ஒரு பெண்டாட்டி இருக்காள் என்று சொல்கிறார்களே!''

''சிச்சி! ஏன் இப்படிக் கன்னா பின்னா வென்று பேசுகிறீர்கள்? நம்முடைய வழக்கமே இப்படித்தான்; ஒன்று என்பதைப் பத்து என்கிறது!''

''உங்களுக் கெல்லாம் என்ன தெரியும்? பட்டணத்திலே பெண் பிள்ளைகள் எல்லாம் ஒரேயடியாக அவனுடைய மோகத்திலே முழுகிக் கிடந்தார்களாம். அதென்னமோ அவனிடத்திலே ஒரு வசீகரமான சக்தி இருப்பதாகச் சொல்கிறார்கள். நாடக மேடையிலே அவன் முகத்தைத் திறந்து காட்டினானோ இல்லையோ, எத்தனையோ பெண் பிள்ளைகள் மூர்ச்சை போட்டு விழுந்து விடுவார்களாம். பாருங்கள்! கடைசி நாள் நாடகத்தன்று கூட அப்படி ஒருத்தி மூர்ச்சை போட்டு விழுந்து விட்டாளாம்!''

''அதென்னமோ ஸ்வாமி! இந்தப் பக்கமெல்லாம் அவனுக்கு அது விஷயத்தில்ரொம்பநல்ல பெயர். என்னதான் கொள்ளைக்காரனாக இருந்தாலும் இது வரையில் ஒரு ஸ்திரீக்காவது அவன் கெடுதல் செய்தது இல்லை என்று சொல்கிறார்கள்.''

''ஒரு நாளைக்கு அவன் அகப்படப் போகிறான்! அப்போது எல்லாப் பொய் நிஜமும் தெரிந்து போகிறது.''

கல்யாணி இவ்வளவுதான் கேட்டாள். உடனே ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். திருச்சிற்றம்பலம் பிள்ளையைக் கூப்பிட்டு, ''அப்பா! எனக்கு உடம்புக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது. நான் திருப்பதிக்கு வரவில்லை. நீங்கள் போய் வாருங்கள். நானும் அத்தையும் திரும்பிப் பூங்குளத்துக்கே போய் விடுகிறோம்'' என்றாள்.

திருச்சிற்றம்பலம் பிள்ளை திடுக்கிட்டு, ''என்ன அம்மா இப்படிச் சொல்கிறாய்? டிக்கட் கூட வாங்கியாகி விட்டதே!'' என்று கேட்டார். அவர் என்ன சொல்லியும் பிரயோஜனப்படவில்லை. கல்யாணி பிடிவாதமாகத் திரும்பித்தான் போவேனென்று சொன்னாள்.

இதற்குள் ரயில் வந்து விடவே, திருச்சிற்றம்பலம் பிள்ளை வேறு வழியில்லாமல் ''சரி, அம்மா! நல்லவேளையாய் வண்டிக்காரர்களும் இருக்கிறார்கள். ஜாக்கிரதையாய்ப் போய்ச் சேர். வீட்டிலும் ஜாக்கிரதையாய் இரு'' என்று நூறு தடவை ஜாக்கிரதைப்படுத்திவிட்டு, மனைவி மக்களுடன் ரயில் ஏறினார்.

ஸ்டேஷனை விட்டு ரயில் நகர்ந்ததும் கல்யாணியும் அத்தையும் வெளியே வந்து மாட்டு வண்டியில் ஏறிப் பூங்குளத்துக்குப் பிரயாணமானார்கள்.

(தொடரும்)

''திரைப்படம்தான் பாரதியைப் பற்றி மக்களுக்குச் சுலபமாகவும் பரவலாகவும் எடுத்துச் சொல்லச் சிறந்த மீடியாவாகக் கருதுகிறேன்'' என்கிறார்.

''ஏன் பிரபல நடிக நடிகையரைப் போட்டுப் படம் எடுக்கக் கூடாது?''

''நான் அவரைப் பற்றிக் கொண்டிருக்கிற கருத்துப்படி நடிக்கப் பிரபல நடிகர்களின் மனம் இணங்காது. ஏனெனில் அவர்கள், தங்கள் மனத்தில் பாரதியைப் பற்றிய வேறு ஒரு விதமான வடிவு கொடுத்து வைத்திருப்பார்கள். ஆனால் குழந்தைகள் நான் சொல்வதுபோல் நடிக்கும்.'' என்கிறார் இவர்.

''விஜய்-சித்தர்'' என்ற புதிய இசையமைப்பாளர்கள் அறிமுகமாகவிருக்கும் இவ்வண்ணப் படத்தில் மொத்தம் பாரதியின் நாற்பது பாட்டுக்கள் இடம் பெறுகின்றனவாம்!

வி. தியாகு

புகைப்படம்: கலை நாகராஜன்

✖ சர்மா



டெட் கட்டியில் மட்டுமே உள்ளது ஸால்வெண்ட் பவர்

இது துணிகளுக்கு முற்றிலும் பளிச்சிடும் வெண்மை அளிக்கிறது



வேறெந்த டிடர்ஜெண்ட் கட்டியும் பாரும் இதற்கு இணையில்லை பாரும்



கல்கி-பாரதி நூற்றாண்டு போட்டி-8

சரியான விடை எழுதியவர் வரிசை (தொடர்ச்சி)

401. பழனியா பிள்ளை, இடலாக்குடி; 402. எஸ். ரங்கதிலகம், பாப்பா நாயக்கன் பாளையம்; 403. எஸ். ராதா, சென்னை-82; 404. ப. கருணா மதுரை 405. ஆர். பி. எம். கவரி, கும்பகோணம்; 406. இ. சியாமளா, திருவஞ்சநல்லூர்; 407. குமாரி வாசந்தி, ஸ்ரீவைகுண்டம்; 408. தி. வெ. மல்லிகா, திருநெல்வேலி சந்திப்பு; 409. ஆர். பழனியப்பன், குளத்தூர், வெர்சிட்டாபுரம்; 410. கிரிஜா கணேஷ், நெகமம்; 411. ரா. முரளிதரன், காவிலிபாளையம்; 412. ம. சுப்பிரமணியன், புதுச்சேரி; 413. இரா. ஸ்ரீமதி, சுரமங்கலம்; 414. பி. ஸ்ரீனிவாசலு, அருப்புக்கோட்டை; 415. ப. தனசேகர், மதுரை-22; 416. பி. எல். பரமசிவம், மதுரை-1; 417. கருணா சத்தியமூர்த்தி, கான்பூர்; 418. கே. விசாலாட்சி, சென்னை-45; 419. எம். நமச்சிவாயம், குமரேசபுரம்; 420. பா. ஜெயலட்சுமி, சென்னை-6; 421. ஆர். மைதிலி, சென்னை-78; 422. வி. எஸ். ஸ்ரீகாந்த், ஈரோடு; 423. ஏ. ஜானகி, திருமணிலையூர், கரூர்; 424. எஸ். பாலசுப்பிரமணியம், ஈரோடு; 425. ஆர். மங்களா, ஸ்ரீரங்கம்; 426. ஸரஸ்வதி கிருஷ்ணமூர்த்தி, பாந்த்ரா, பம்பாய்; 427. இமயன், பெங்களூர்; 428. சுந்தரி கோபாலகிருஷ்ணன், காஜியாபாத்; 429. கே. வெங்கடேசன், மதுரை-1; 430. என். ரவீந்திரன், தஞ்சாவூர்; 431. ம. நாராயணி, ஆழ்வார்குறிச்சி; 432. பி. வீரமணி, திண்டுக்கல்; 433. வி. நாராயணன், ஸ்ரீரங்கம்; 434. க. ருக்மிணி, மதுரை-2; 435. எஸ். முருகானந்தம், தேவகோட்டை; 436. ஆர். பத்மாவதி, பாண்டிச்சேரி; 437. கா. மருதமுத்து, சமத்தூர்; 438. வா. சங்கர், வர்ணன்புரம், பவானி; 439. எஸ். சத்திய-சந்திரன், புளியகுளம்; 440. எஸ். விஜயபாலன், பல்லாவரம்; 441. எஸ். பாலகிருஷ்ணன், காங்கேயம்; 442. அலமேலு மகாதேவன், கல்லிடைக்குறிச்சி; 443. எஸ். ரமணிசங்கர், புதுதில்லி-15; 444. மு. வைத்தியநாதன், முத்தியால் பெட், பாண்டிச்சேரி; 445. மா. முத்துராமன், பள்ளத்தூர்; 446. வி. கார்த்திகேயன், நாகர்கோயில்; 447. ஸ்ரீமதி தெரேசா, காரமடை; 448. அண்ணாதுரை, சாயிநாதபுரம், வேலூர் 449. கே. பரிமளா, தொரப்பாடி, வேலூர்; 450. கு. பாஸ்கரன், ஆரணி; 451. கு. ஸ்ரீவரமங்கை, பேயன்விளை P.O.; 452. கே. எஸ். சியாம்சுந்தர், மதுரை; 453. கே. எஸ். பானுமதி, மதுரை; 454. வி. குருமூர்த்தி, ஊர்காம்பெட், கோலார் தங்கச் சுரங்கம்; 455. எல். ராதா, கும்பகோணம்; 456. கே. முத்துகிருஷ்ணன், சாத்தனூர்; 457. சோ. விஜயலட்சுமி, நாகப்பட்டினம்; 458. ஈ. மாரியப்பன், புள்ளாக்கவுண்டன் பட்டி, தேலூர்; 459. இ. தமிழ்மணி, புள்ளாக்கவுண்டன்பட்டி; 460. த. சத்தியபாலன், தாராபுரம்; 461. திருமதி சரோஜினி சுந்தரம், சிங்காநல்லூர்; 462. கே. அன்னப்பூரணி, கோட்டையூர், காரைக்குடி; 463. கே. விஜயலட்சுமி, ஆ. தெக்கூர்; 464. எம். எஸ். கோமதி, ஆ. தெக்கூர்; 465. ஜெயசர்மா, பாப்பானம்கோட், திருவனந்தபுரம்; 466. எஸ். வள்ளி, தில்லைநகர், திருச்சி; 467. வா. ஜானகி, வடுவூர்; 468. திரு. கண்ணன், ஜெய்ஹிந்த்புரம், மதுரை; 469. பெயர், விலாசமில்லை; 470. பெயர், விலாசமில்லை; 471. பெயர், விலாசமில்லை; 472. பெயர், விலாசமில்லை; 473. பெயர், விலாசமில்லை.

(முற்றும்)

எதிரொலி விசுவநாதன் எழுதியளித்த பட்டியலின்படி அதே வரிசையை எழுதியவர்கள் மட்டுமே சரியான விடை எழுதியவர்களாகக் கருதப்பட்டு குலுக்கலில் பங்கு பெற்றனர்.

சரியான விடைகளும் குலுக்கல் முடிவும் அடுத்த இதழில்.

அவன்: நாமெல்லாம் பகலில் தூங்கினு லும் நம்ம மானேஜர் மட்டும் கஷ்டப் பட்டு விழிச்சபடி உட்கார்ந்திருக்காரே ஏன்?

இவன்: தூக்கத்திலே நாம் அவரைப் பற்றி என்ன உளறுகிறோம் என்று தெரிஞ்சுக்கலாம்னு விழிச்சுக் காத் திட்டிருக்கார் மனுஷன்.

- கே. ஆர். எம்.





கல்கி, மங்கையர் மலர், கோகுலம் பத்திரிகைகளின் பெங்களூர் பிரதிநிதி ஸ்ரீ S.R. வெங்கடாஜலம் அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி **வசந்திக்கும்** பம்பாய் ஸ்டாண்டர்டு ஆல்கலியின் எக்ஸிக்யூடிவ் வைஸ் பிரஸிடெண்ட் ஸ்ரீ V. ராமதுரை அவர்களின் குமாரன் சிரஞ்சீவி **குமார் (K.T.I., B.V., Holland)** அவர்களுக்கும் பெங்களூரில் சமீபத்தில் வெகு விமரிசையாக விவாஹம் நடைபெற்றது. திருமணத்துக்கும், வரவேற்புக்கும் ஏராளமான நண்பர்களும் நகரப்பிரமுகர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

மௌனம் தொடர்கிறது

—காந்தன்

நாராயணன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் அருகில் கசக்கப்பட்ட ஒரு காகித உருண்டை வந்து விழுந்தது. நாராயணன் குனிந்து அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தார்.

''எனக்கு உடம்பு சரியில்லை. நல்ல ஜுரம். டாக்டரை அழைத்து வந்தால் சௌகரியமாயிருக்கும். —கிரிதரன்.''

நாராயணனிடமிருந்து பதில் துண்டுக் கடிதத் தாக்குதல். கிரிதரன் அந்தத் துண்டுக் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

''ஏன் உனக்கு என்ன உடம்பு? டாக்டரை அழைத்துக் கொண்டு வந்து பார்க்கிற அளவுக்கு அதிகமாகி விட்டதா? —நாராயணன்.''

கிரிதரன் உடனே சில வரிகள் பதில் எழுதி, பிறகு அதைக் கசக்கி நாராயணனிடம் வீசி எறிந்தார்.

நாராயணன் அந்தத் துண்டுக் கடிதத்தை எடுத்துப் படித்தார்:

''உடம்புக்கு வந்தால் முன்னாலே சொல்லி விட்டுத்தான்வருமா என்ன? நான் படுகிறதை நீ பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாய்? சாதாரண மனிதத் தன்மைகூட உன்னிடம் இல்லாமல் இருப்பது எனக்கு அதிசயமாயிருக்கிறது! —கிரிதரன்.''

இந்தக் கடிதத்தைப் படித்து விட்டு நாராயணன் தமக்குள் ஏதோ முணு முணுத்துக் கொண்டே எழுந்தார். உடனே டாக்டர் வீட்டுக்குப் போனார். சிறிது நேரத்துக் கெல்லாம் டாக்டருடன் உள்ளே நுழைந்தார். டாக்டர் கிரிதரனைப் பரிசோதித்துப் பார்த்தார். பிறகு மருந்துகளை எழுதி அந்த 'ப்ரிஸ்கிரிப்ஷனை' நாராயணனிடம் கொடுத்தார்.

''அவரை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். ஜுரம் ரொம்பக் கடுமையாக இருக்கிறது. இந்த மருந்தை வேளை தவறாமல் கொடுத்து வாருங்கள். ரொட்டி, பால், புழுங்கலரிசிக் கஞ்சி, காஃபி கொடுங்கள். நான் நாளைக்கு வந்து பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டு டாக்டர் போய் விட்டார்.

நாராயணனும் கிரிதரனும் இணைபிரியாத நண்பர்கள். பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே இருவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் ஒன்றாய்ப் படித்தார்கள். வேலை விஷயத்தில் கூட ஒற்றுமையாயிருந்தார்கள். ஒரே ஊரில் சர்க்கார் வேலை பார்த்தார்கள். ஒரே வீட்டில் குடியிருந்தார்கள். இருவருக்கும் திருமணமாகியும் குழந்தைகள் இல்லை. அதிலும் ஒற்றுமை!

அவர்களது வாழ்க்கையில் மிகவும் சோகமான கட்டம் இருவருடைய மனைவிமார்களும் சொல்லி வைத்தாற்போல் ஒருவர் பின் ஒருவராக இறந்து போனதுதான்.

நாராயணன், கிரிதரன் இருவரும் சம வயதினர்களாதலால், உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றதும் ஏறக் குறையச் சம காலத்திலேயே நிகழ்ந்தது.

பிறகு இருவரும் சேர்ந்து ஒரு தனி வீட்டில் ஒரு தனி போர்ஷன் பார்த்து அட்வான்ஸ் கொடுத்து ஏற்பாடு செய்து கொண்டார்கள். அங்கே கூடத்தில் இரண்டு நாடாக் கட்டில்கள், இரண்டு சாய்வு நாற்காலிகள், சமையற்காரச் சங்கரையர் ஒண்டிக்கட்டை: அதோடு வயதானவரும் கூட. அவருக்கு இவர்களோடு



தங்கியிருந்து சமைத்துப் போடுவதில் சந்தோஷமே.

நாராயணனும், கிரிதரனும் இணைபிரியாத நண்பர்களாக இருந்ததில் யாருடைய கண் திருஷ்டியோ பட்டிருக்க வேண்டும்.

அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த நிகழ்ச்சிக்குப் பிறகு இரு நண்பர்களும் ஒருவருக்கொருவர் பேசுவதை நிறுத்திவிட்டு எழுத்தாளர்களாக மாறி விட்டார்கள்!

அன்று கிரிதரன் பால் பாட்டில்களை எடுத்துக் கொண்டு வர வேண்டிய முறை. வழக்கம்போல் பால்காரன் அதிகாலையில் வந்து குரல் கொடுத்தான். கிரிதரன் எழுந்திருக்கவில்லை.

பொழுது நன்றாக விடிந்து விட்டது. நாராயணன் திடுக்கிட்டு எழுந்தார். நேரே வாசலுக்குப் போய்த் திண்ணையைப் பார்த்தார். திண்ணையில் பால் பாட்டில்கள் இல்லை. நேரே சமையல் அறைக்குப் போனார். ''சங்கரய்யர் நீங்கள் வாசலுக்குப் போய்ப் பால் பாட்டில்களை எடுத்து கொண்டு வந்தீர்களா?'' என்று கேட்டார்.

அவர் ''இல்லையே, நான் எடுத்துக்கொண்டு வரவில்லையே!'' என்றார்.

நாராயணன் முகத்தில் ஏமாற்றக்களை.

''கிரிதரா, விடிந்து எத்தனை நாழியாகிறது இன்னும் என்ன தூக்கம்! எழுந்திரு!'' என்று ஆத்திரத்துடன் பலமாகக் கத்தினார்.



ஓலைத் கலை

● பனை ஓலையாலும், மூங்கிலாலும், பிரம்பாலும், புல் வகையாலும் எத்தனை வகைக் கலைப் பொருட்கள் செய்ய முடியும் என்பதற்கு லலித் கலா அகாதமியில் சமீபத்தில் நடந்த கண்காட்சி சான்று. இத்தகைய கலைப் பொருட்களால் இன்று அந்நியச் செலாவணியாக நம் நாட்டுக்கு இரண்டு கோடி ரூபாய் கிடைக்கிறதாம்!

● தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் பல்லோஸ் என்பவரின் ஆராய்ச்சிப்படி தென்னிந்தியாவில் பனை ஓலை தாராளமாகக் கிடைப்பதன் காரணமாக நிறையப் பொருட்கள் தயார் செய்யலாம். இதில் வேலை வாய்ப்புக்கு நிறைய இடம் இருக்கிறது. பத்து லட்சம் பேர் வேலை செய்யக் கூடிய இத்தொழிலில் தற்போது இரண்டு லட்சம் பேரே ஈடுபட்டிருக்கிறார்கள்.

● ஆந்திரா, கேரளா, உத்தரப் பிரதேசம், நாகாலாந்து, ஒரிஸா, பீகார், தமிழ்நாடு — எல்லா இடங்களிலிருந்தும் வந்த கைவினைக் கலைஞர்கள் கண்காட்சியில் கைவரிசையைக் காட்ட, அழகும், நளினமும் மிக்க கலைப் பொருட்கள் வகை வகையாய் உருவாயின: தட்டுக்கள், கூடைகள், மணி பர்சுகள்; பென்சில் ஸ்டாண்டுகள்....

● புழலேரியை அடுத்த புளிக்காட் இன்டஸ்டிரியல் கோவாபரேடிவ் சொஸைட்டியில் மட்டும் ஐந்நூறு அங்கத்தினர்கள் இருக்கின்றனர். இங்கே மூலப்பொருள் (பனை) அதிகமாகக் கிடைக்கிறது. இங்கேயிருந்து மட்டும் 5 லட்சம் ரூபாய்க்கான கலைப் பொருட்களை ஒரு வருடத்தில் உற்பத்தி செய்கிறார்கள். ஒரு லட்ச ரூபாய்க்கான பொருள்கள் ஏற்றுமதியாகின்றனவாம். பூம்புகார், வி.டி.ஐ ஆகியவற்றில் ஆதரவு இருக்கிறது இவர்களுக்கு.

● மற்ற மாநிலங்களில் இந்தப் பொருட்களுக்கு விற்பனை வரி உண்டு. அதனால் கலைஞர்கள் அவதிப்படுகிறார்கள். தமிழ் நாட்டில் அதிர்ஷ்ட வசமாக வரிவிலக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

● அஸ்ஸாம், பீகார், உ. பி. கலைஞர்கள் செய்தவை அலங்காரப் பொருட்களாகவே இருந்தன. உபயோகமும் குறைவுதான்.

—எஸ். விஸ்வநாதன்

தர்மபத்தினிகள்



கணவன் பாவியாகவும், மனைவி அப்பாவியாகவும் இருந்தால் நாடகம் சுவாரஸ்யமாகத்தானே இருக்க முடியும்?

ஹீரோ மனைவியின் தங்கையைக் கெடுக்க அதே வீட்டில் வளர்ந்த — வேலைக்காரனின் பிள்ளை ரங்கன் தடுக்க, ஹீரோவால் அவன் கொலை செய்யப்படுகிறான். ஹீரோவின் மாமியார் பப்ளிக் பிராசிக்யூடர். மகளுக்கு மஞ்சளும் குங்குமமும் போனாலும் மாப்பிள்ளைக்குத் தூக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதில் தீவிரமாயிருக்கிறாள். கணவனை ஒரேயடியாக நம்பும் அப்பாவி மனைவிதான் கணவனைக் காப்பாற்ற முனைகிறாள் என்றால், கெடுக்கப்பட்ட தங்கையும் மனசு மாறி, அக்காவின் பக்கம் சேர்ந்து கொண்டு, பப்ளிக் பிராசிக்யூடர் அம்மாவை எதிர்க்கிறாள். பாலிடிக்ஸை குத்தலான நகைச் சுவையோடு வழங்கும் நண்பன் (ஹோம் மினிஸ்டரின் ஒரே மனைவியின் ஒரே மகன்!) துணையாயிருக்கிறான் ஹீரோவுக்கு. எதுவரை? ஜெயில் வரை!

நாடகம் அலுப்புத் தட்டாமல் பல இடங்களில் கைதட்டல் வாங்குகிறது என்றால்— மங்களமாக வரும் மாஜிக் ராதிகா, ஹீரோ சத்தியமூர்த்தியாக வரும் சாந்திமணி, பப்ளிக் பிராசிக்யூடராக வரும் சீதாலட்சுமி அவள் தகப்பனாராக வரும் டி. பி. கண்ணன், வேலைக்காரராக வரும் கரூர் ரங்கராஜ் ஆகியோரின் நடிப்பு மட்டும் காரணமல்ல.

நறுக் நறுக்கென்று மணிபோகனின் கூரான வசனமும்தான்.

-சாருகேசி

வாரிச் சுருட்டிக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்தார் கிரிதரன்.

''இப்பொழுது என்ன குடிமூழ்கிப் போய் விட்டது? என்னத்துக்காக இப்படிக் கூச்சல் போடுகிறாய்?'' என்று கத்தினார் கிரிதரன்.

''ஆமாம், குடிமூழ்கி விட்டது. நிதானமாக எழுந்து கேட்கிறாயே, இன்று நமக்குக் காஃபி கிடையாது. பால் பாட்டில் இரண்டும் திருட்டுப் போய் விட்டன. உன் சோம்பேறித்தனம் அதற்குக் காரணம்....''

''நான் எழுந்திருக்கவில்லை என்று தெரிந்தும் நீ விழித்துக் கொண்டே படுத்திருக்கிறாய். அப்படி என்ன வீம்பு!'' என்று கிரிதரன் பதிலுக்குக் கத்தினார்.

''என் முறைகளில் நான் ஒரு நாள் கூட எழுந்து போய் பாட்டில்களை எடுத்து வரத் தவறியதில்லை. நீ செய்யும் அக்கிரமம் என்னால் சகிக்க முடியாமல் போகவே இன்று உன்னை எழுப்பாமலே படுத்திருந்தேன்.''

''ரொம்ப யோக்கியன்தான் போ. வெட்கமாயில்லை?

''சீ, பேசாதே, வாயை மூடு!''

''சீ,சீ! நீ வாயை மூடிச் சும்மா இரு.''

அவ்வளவுதான். நாராயணனும் கிரிதரனும் பேசுவதையே நிறுத்தி விட்டனர். வேறு வழியில்லாமல் எழுத்தாளர்களாக மாறிவிட்டனர்.

கிரிதரன் மிகவும் கடுமையான ஜுரத்தில் படுத்திருந்தார். பத்து நாட்களுக்கு நாராயணன் அவரை விட்டு நகரவேயில்லை.

அன்று வழக்கம்போல் நாராயணன் கிரிதரனின் கட்டிலில் உட்கார்ந்து மாத்திரையை அவர் கையில் கொடுத்தார்.

''நாராயணா, நீ செய்யும் உதவிகளை என்னால் மறக்க முடியாது. இவைகளுக்கெல்லாம் நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். என்று கூறி, கிரிதரன் குலுங்கி அழுதார்.

''அப்பா, கிரிதரா, நீ பிழைத்து எழுந்ததே போதும்.. பகவான் காப்பாற்றினார்!''

''இல்லை, நாராயணா! பகவான்தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்றாலும் 'தெய்வம் மனுஷ்ய ரூபணே' என்று பெரியவர்கள் சொல்கிறார்கள் இல்லையா? தெய்வம்தான் உன் உருவத்தில் வந்து என்னைக் காப்பாற்றியது. ஆகவே உனக்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன்.''

''இல்லை, இல்லை. அப்படிப் பார்த்தால் உனக்கு வைத்தியம் செய்த டாக்டருக்குத் தான் நீ மிகவும் கடமைப்பட்டிருக்கிறாய்.''

''இல்லை, இல்லை. உளறாதே.''

பிதற்றாதே, வாயை மூடு!''

நாராயணன் பேசவில்லை.

கிரிதரனும் பேசவில்லை.

இரு நண்பர்களும் தீவிரமாக மறுபடியும் எழுத்து வேலையைத் தொடங்கி விட்டனர்! இனி அது தொடர்ந்து நடக்கும்.

நீங்கள் கேட்டவை

— தராசு



மார்கரெட் தாட்சர்



ஆண்டிரோபோவ்



நெடுஞ்செழியன்

○ எஸ். வி. ராஜசேகர், சென்னை-5

? அதிசயத்தில் ஆழ்த்திய காட்சி எது?

! லேட்டஸ்ட் ஜேம்ஸ் பாண்ட் படத்துக்கு ஐந்து ரூபாய் டிக்கட்தான் கிடைத்தது. செரிக்கும். ஏ. வி. இல்லை. உடல் வெந்ததை யார் கவனித்தார்கள்? திறந்த வாய் மூட விடாமல் 007 சாகஸங்கள் ஒருபுறமிருக்க, அவற்றை விடவும் அதிசயித்து ரசித்தது. கடைசிக் காட்சியில் பிரிட்டிஷ் பிரதமரையேகிண்டல்செய்திருந்ததுதான். 10, டௌனிங் ஸ்டிரீட் சமையலறையில் இருந்தவாறே 007 இடம் ஃபோனில் பேசுவதாக எண்ணிக் கொண்டிருக்கிறார் பிரதமர். மறுபுறம் இருப்பதோ ஒரு கிளி. கிள்ளை மொழியில் புகழுரை கேட்டு மார்கரெட் அசடு வழிவதும்.... கணவர் தாட்சர் ஏதோ தின்பண்டத்தை எடுக்கப்போக அவர் கரத்தில் பட்டென்று போடுவது... அப்பப்பா! என்ன துணிச்சல்! எவ்வளவு சுதந்திரம்! பிரிட்டிஷ் தலைவர்களுக்குத்தான் எத்தனை சகிப்புத் தன்மை!

○ ஏந்தல் ஆர். இளங்கோ, திருச்சி

? அச்சம் தரக்கூடிய செய்தி எது?

! உற்பத்தி அதிகரித்தாலொழிய சம்பளங்களை உயர்த்த முடியாது. போனஸ் தர முடியாது என்று சமீபத்தில் கூறியிருப்பவர் யார் தெரியுமா? ருஷ்ய அதிபர் ஆண்டிரோபோவ்! கம்யூனிஸ்ட் தலைவர்களே முதலாளிகள் மாதிரி பேச ஆரம்பித்து விட்டார்கள் என்பதைப் பார்க்க அச்சமாகத்தான் இருக்கிறது. என்றாலும் இந்தியாவில் இரண்டும் கெட்டானான ஜனநாயக சோஷலிஸம்தானே ஆட்சியில் இருக்கிறதுஎன்பதால் தைரியம் பெறுகிறோம்!

○ ஜி. கணேசன், செல்லூர்

? சாதாரண பியூன் வேலைக்குக்கூட கல்வித்தகுதிநிர்ணயிக்கும் நம் அரசு சட்டமியற்றும் சட்டமன்ற நாடாளு மன்ற உறுப்பினர்களுக்குக் கல்வித் தகுதி நிர்ணயிக்கவில்லையே ஏன்?

! இந்தக் குறையை இட்டு நிரப்புவதற்காக ஏற்பட்டது தான் மேலவை. அதைப் போய் ஒழித்து விடுகிறேன் என்று புறப்பட்டிருக்கிறார் ராமராவ்!

○ ஏ. ஜாகந்தா பேகம், புதுக்கோட்டை

? அட்டன்பரோவின் காந்தி படத்தை நம் நாட்டின் ஒவ்வொரு குடிமகனையும் காணச் செய்ய வேண்டாமா?

! வரிச் சலுகை அளித்தது இதற்காகத்தான். அரசை வாழ்த்துகிறோம். ஆனால் அண்மையில் தில்லியில் நடந்த சர்வ தேசத் திரைப்பட விழாவில் இதைக் காண்பிக்க அட்டன்பரோவுக்கு அழைப்பு விடுக்காததற்காக அரசைக் கண்டிக்கிறோம். இதனால் படத்தின் முக்கியத்துவத்தைத் தேச மக்கள் முன் குறைத்து மதிப்பிட்டு விட்டது அரசு.

○ வி. ஆர். நாகராஜன், வளவனூர்

? குமுதத்தில் தொடர்கதை எழுதிக்கொண்டே அப்பத்திரிகையைக் கண்டித்து விமரிசிக்கும் ஜெயலலிதா பற்றி?

! கண்டித்து விமர்சித்தாலும் தொடர்கதை எழுதுவதை நிறுத்த மாட்டேன் என்ற அளவில் கருணாநிதியிடமிருந்து மாறுபட்டு உயர்கிறார்.

அதிசயத்தில் ஆழ்த்திய 007

○ ஏ.எம். முகம்மது நிஜாமுத்தீன், நீடூர்
? நான் அனுப்பும் கடிதங்களைத் தாங்களும் அனுப்புநிர்களே குப்பைத் தொட்டிக்கு. அதற்கு ஒரு முடிவே கிடையாதா?
! உண்டு.

○ விஜயா ரங்கநாதன், டோம்பிவிலி
? வாஜ்பாயின் ராஜிநாமா பற்றி?
! ராஜினாமாவும் சரி, தளபதிகள் கோரிய போது வாபஸ் பெற்றதும் சரி. இதில் கிண்டல் கேலிக்கு இடமில்லை. டில்லி தேர்தலில் பி. ஜே. பி. அடைந்த தோல்விக்குத் தார்மீகப் பொறுப்பு ஏற்று ராஜினாமா செய்தார். அதனை ஏற்காததோடு கட்சி அவரிடம் பூரண நம்பிக்கை தெரிவித்தபோது ராஜினாமாவை வாபஸ் பெற்றார். நல்ல ஜனநாயக மரபு காக்கிறார்.

○ கனியூர் பழனிச்சாமி, கோவை
? இந்திய இளைஞன் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?
! உங்கள் ஊர் பி. எஸ். ஜி. பொறி இயல் கல்லூரி மாணவர்கள் தென் இந்தியாவிலேயே முதல் தடவையாக ஒரு கழலும் மேடையை உருவாக்கி யிருக்கிறார்கள். செலவு ரூ. 15000தான் என்பது மற்றொரு அதிசயம். இங்கே மாநில அளவில் இசை, நாடகப் போட்டிகள் நடத்துகிறார்கள். இவ்வாறு இளைஞர்கள் தங்களுடைய சக்தியை ஆக்க பூர்வமாக வெளிப்படுத்த வேண்டும்.



007



காளிமுத்து

○ மன்னை உ. அன்பரசு, திருச்சி
? சாண்டில்யன் கற்பனைக்கு ஓர் எடுத்துக்காட்டு கூற முடியுமா?
! கூறலாம். அதைவிட கல்பம் காளிதாசன் கற்பனைக்கு எடுத்துக் காட்டுக்களை சாண்டில்யனில் காண்பது.

○ என். மோகனசுந்தரம், பொள்ளாச்சி
? எப்போதும் அமைச்சர் காளிமுத்து மத்திய அரசைத் தாக்குவதையே பிரதானமாகக்கொண்டிருக்கிறாரே?
! மாநில நொண்டிக் குதிரைக்கு மத்திய குதிரை சறுக்கியது சாக்கு.

○ எம். ராஜேந்திரன், லால்குடி ★
? தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு முன்பே வினாத்தாள் வெளியாகிவிட்டதே! தமிழக அரசுக்கு அவமானமில்லையா?
! இதில்கூட அவ்வளவு அவமானமில்லை. ஆனால் திருவையாறு வாசகர் இ. நரசிம்மன் எடுத்து எழுதியிருக்கும் நெடுஞ்செழியன் விளக்கத்தைப் படிக்கும்போது அதுதான் அரசுக்கு அவமானம் என்று எனக்குத் தோன்றுகிறது. நாவலர் கூறியது: கேள்வித் தாள் முன்பே வெளியாகி விட்டதென்ற செய்தி வெள்ளியன்றே எங்களுக்குத் தெரியும். ஆனால் குறிப்பிட்ட நேரத்துக்குள் தேர்வை ரத்து செய்த செய்தியை எல்லா இடத்துக்கும் தெரிவிக்க இயலாது. எனவேதான் தேர்வை நடத்தினோம்!

★ தலா ரூ. 10 பரிசு பெறுவோர்:
(1) எம். ராஜேந்திரன்,
19, சன்னதி தெரு,
லால்குடி-621601
(2) இ. நரசிம்மன்,
8, சாமராயர் அக்ரஹாரம்,
திருவையாறு-613 204



சாண்டில்யன்



பருகுக நரசுஸ் காபி பெறுக நற்பரிசுகளை!

- 12 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டபரா செட்.
- 6 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டம்ளர்.
- 2 கிலோ நரசுஸ் காபிக்கு பல வண்ணத் துணிப் பை.
- 500 கிராம் நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி ஸ்பூன்.

மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று வெகுமதிகளைப் பெறுங்கள்.

12.2.83 முதல் 19.3.83 வரை உள்ள விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.

ஜீவனுள்ள ஒரே காபி!

நரசுஸ்

"தெர்மலோ" காபி!

நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.

ADWAVE NCC 2261

அனுமந்துவின் அனுபவங்கள்

“என் பெயர் அனந்த பத்மநாபன். 'அனந்த்' என்று கூப்பிடப்பட்ட நான் திடீரென்று 'அனுமந்து' ஆகி அனுமார் கோவிலுக்கு எதிரிலேயே வசிக்கிறேன்.”

வாய் விட்டுச் சிரிக்கிறார் அனுமந்து.

“எஸ்.எஸ்.எல்.சி. முடித்ததும் செங்கல்பட்டு ஐ.ஐ.டி.யில் படித்தேன். எனது நண்பர் ஒருவர் லைட் மியூஸிக் பார்ட்டி வைத்திருந்தார். அவருடன் ஊர் ஊராகப்போய் கச்சேரிகளுக்கிடையே மிமிக்ரி செய்வேன். அம்பாஸ் கிடைக்கும். கொஞ்சம் கொஞ்சமாக நாடக மேடையில் பிட் ரோல்கள் செய்தேன். நடிப்புப் பைத்தியம் பிடித்தது.

காலஞ்சென்ற டி. எஸ். சேஷாத்திரி மூலமாக வில்லன் கே. கண்ணனின் குழுவில் சேர்ந்தேன்.

அன்று 'ஏமாளி' நாடகம். எனக்கு ஏழு நிமிடம் தோன்றக் கூடிய கவுன்சிலர் வேடம். ஊரிலே யார் செத்தாலும் அவருக்கு மாலை போட்டுக் கண்ணீர் வடிப்பார் கவுன்சிலர்.

நான் உணர்ச்சி வேகத்தில் பிணமாக நடித்தவர் மேல் விழுந்து அவரது காலையும் மிதித்து விட்டேன்! அந்த நடிகர் தன்னையும் மறந்து எழுந்திருக்க ஆரம்பித்தார். உடனே சுதாரித்துக் கொண்டு அவரைப் பழையபடி படுக்க வைத்தேன்.

“ஐயோ — பிணம் அசையுதே — சாரி— மன்னிச்சுக்குங்க.” என்று ஸ்பெஷல் டயலாக் பேசிச் சமாளித்தேன்.

முதல் வரிசையில் அமர்ந்திருந்த கவிஞர் கண்ணதாசன் சிரிப்புத் தாங்க மாட்டாமல் வெளியே ஓடி விட்டார்.

இடைவேளையில் நான் சமாளித்து நடித்ததற்காகப் பாராட்டிப் பேசினார் கவிஞர்.

வாலியின் சம்பூர்ண ராமாயணம் நாடகத்தில் எனக்குச் சமையல்கார சாம்பு வேடம். அந்த வேடத்தில் நடிப்பதற்காகவே கட்டுக் குடுமி வைத்திருந்தேன்.

ஒரு நாள் தற்செயலாக அந்த நாடகம் பார்த்த டைரக்டர் கே. பாலசந்தர் என்னை வெகுவாகப் பாராட்டியதுடன், 'நிழல் நிஜமாகிறது' படத்தில் நடிக்க வாய்ப்பளித்தார்.

ஹைதராபாத்தில் படப் பிடிப்புத் துவங்கியது. எனக்கு 'காசி' என்ற செவிடன் வேஷம். நான் ஷோபாவின் குழந்தையைப் பாடிக் கொண்டே தாலாட்ட வேண்டும். திடீரென்று பாடும்போது உச்ச ஸ்தாயியில் உளற ஆரம்பித்தேன்.

டைரக்டர் பாலசந்தர் முகத்தில் என்னும் கொள்ளும் வெடித்தது.

காமிரா ஓடிக் கொண்டிருந்தபோதே கமலஹாசன் பரபரப்பாக செட்டுக்குள் ஓடி வந்தார். எனது காலடியில் திடீரென்று அவதாரமெடுத்த ஒரு பாம்பைத் தமது பூட்ஸ் காலால் மிதித்துக் கொன்றார். பிறகு தான் டைரக்டருக்கு எனது உளறல் ரகசியம் தெரிந்தது.

சரத் பாபு ஊஞ்சலில் வேகமாகப் போவார். நான் அவரைத் துரத்திக் கொண்டே போய் வசனம் பேச வேண்டும். வானம் மூட ஆரம்பித்தது. டைரக்டர் “ஒரே ஒரு டேக்தான் எடுப்பேன். சரியா வராவிட்டால் என்ன செய்வேனோ தெரியாது” என்று மிரட்டினார்.

காலில் செருப்புக் கூட இல்லாமல் சரத் பாபுவை ஒரு காட்டுப் பாதையில் துரத்தி நடித்தேன். “நாடக நடிகன் — நாடக நடிகன் தானய்யா. ஷாட் ஓ.கே.” என்று மகிழ்ச்சியுடன் கூறினார் டைரக்டர்.

'சிவப்பு மல்லி' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது.

ஒரு வைக்கோல் போரில் தீப்பிடிக்கவைத்து அதற்குள் ரகசியமாக ஒரு கூடாரம் போட்டு அதில் சிலரைத் தூக்கி எறிந்து நெருப்பிலே பற்றவைப்பதாக சீன்.

குமரேசன் என்ற நடிகரை வைக்கோல் போரில் வீசி எறிந்தோம். அவர் கூடாரம் வழியாகத் தப்ப வேண்டும். அதற்குள் அவர் தப்பியிருப்பார் என்று போரைக் கொளுத்தி விட்டோம். ஆசாமியைக் காணோம்.

அனைவரும் சில நிமிடங்கள் வெலவெலத்துப் போய் விட்டோம். நல்ல வேளை. குமரேசன் ஆபத்து எதுவும் இல்லாமல் தப்பி வந்தார்.

இப்படி எவ்வளவோ கண்டங்கள்.

இப்போது காமெடி மட்டுமில்லாமல் கேரக்டர் ரோலும் செய்கிறேன்.

'இது எங்க நாடு' படத்தில் ஹீரோயினின் தந்தையாக 'மலையாளி'யாக நடிக்கிறேன். இதில் எனக்கு முதன் முறையாகப் பாட்டு கூட உண்டு!”

- பேட்டி: மன்னை சௌரிராஜன்



நீங்கள் வருமான வரி செலுத்துபவரா?



நினைவிருக்கட்டும்!

வருமான வரிக் கணக்கை
சமர்ப்பிக்க வேண்டிய
தருணம் நெருங்குகிறது.

இன்றே

பப்ளிக் பிராவிடண்ட் பண்ட்

அல்லது

குமுலேடிவ் டைம் டெபாசிட்

கணக்கை துவக்கி
வரிச் சலுகை பெறுங்கள்.

PPF

தலைமை
அஞ்சலகங்கள்
அனைத்திலும் மற்றும்
பாரத ஸ்டேட் பாங்க்,
அதன் கிளைகளிலும்
துவக்கலாம்

CTD


எல்லா
அஞ்சலகங்களிலும்
கணக்கை
துவக்கலாம்

P.P.F. மற்றும் **C.T.D.** திட்டங்களில்
முதலிட்டு கீழ்க்கண்ட சலுகையைப் பெறுங்கள்:

1. 80-C பிரிவின் கீழ் வருமான வரித்தள்ளுபடி
2. வட்டி முழுவதற்கும் வருமானவரி விலக்கு
3. செல்வ (சொத்து) வரியிலிருந்து விலக்கு
4. கட்டாய சேமிப்பு முதலீட்டுச் சலுகை
5. P.P.F-ல் முதலிட்ட தொகையை கோர்ட்மூலம் ஜப்தி செய்ய முடியாது

மேலும் விபரங்களுக்கு:
சிறு சேமிப்பு இயக்குநர்
143, அண்ணா சாலை,
சென்னை-600 002
போன்: 840223
அல்லது
உங்கள் அருகாமையிலுள்ள
அஞ்சலகம்

DIPR/509/83/EP



நாரத கான சபாவுக்கு

நல்வாழ்த்துக்கள்!

வெள்ளி விழாக் காணும் நாரத கான சபாவை நிறுவியவர்
முன்னாள் நீதிபதி எம். அனந்தநாராயணன்.
கிட்டத்தட்ட 200 பேர் இருபது வருஷங்களுக்கு மேலாக உறுப்பினர்களாக இருக்கிறார்கள்!
சபா உறுப்பினரான கட்டடக் கலை நிபுணர்
கே. எஸ். சீனிவாசனின் 'பிளான்'படி (1971ல் வாங்கிய இருபத்தைந்து கிரவுண்டு மனையில்)
1200 பேர் அமரக்கூடிய அரங்கம் தயாராகி வருகிறது.
ஹால் வாடகையை மட்டுமே நம்பியிராமல்,
ஆபீஸ் பகுதிகளும் கட்டப்பட்டிருக்கின்றன, நிரந்தர மாதாந்திர வருவாய்க்கு.
இந்தத் தமிழ்ப் புத்தாண்டிலிருந்து இங்கே இசை–நாடக வகுப்புகள் ஆரம்பமாக இருக்கின்றன.
கட்டட நிதிக்குப் பெருமளவு உதவியவர்
ஹேமமாலினி என்று நன்றியுடன் கூறுகிறார் செயலர் ஆர். கிருஷ்ணஸ்வாமி.
ஒவ்வொரு ஆண்டும் இலவசமாக நிதியுதவி நிகழ்ச்சி நடத்தி
ஒரு லட்சம் ரூபாய் வருஷா வருஷம் வசூலித்துக் கொடுப்பதுடன் தாராளமாக நன்கொடையும்
வழங்கி வந்திருக்கிறார் ஹேமமாலினி.
ஸ்ரீவாஞ்சியம் ராமச்சந்திர பாகவதர், மாயூரம் கிருஷ்ணமூர்த்தி பாகவதர்
ஆகியோரைக் கொண்டு,
அழிந்துகொண்டு வரும் 'அபிநய பஜனை'க் கலையை மீண்டும் வகுப்புக்கள் நடத்திக் கற்றுக்
கொடுப்பது இவர்கள் திட்டம். இதற்கு ஸ்காலர்ஷிப் உண்டாம்.
வெறும் துணுக்குத் தோரணங்களும் விரச வசனங்களும் நிறைந்த நாடகங்களைப்
போடுவதை விடுத்து, நல்ல நாடகங்கள் உருவாக சகஸ்ரநாமம், சோ, மனோகர் ஆகியவர்கள்
உதவியுடன் தியேட்டர் ஒர்க்ஷாப் ஏப்ரல் 14ல் ஆரம்பமாகிறதாம்.
புதிய ரசிகர்களை உருவாக்கவும்,
இருக்கிற சங்கீத அபிமானிகளுக்கு இசையில்
ஆர்வமும் திறமையும் உண்டாக்கவும், இசை வகுப்புகள் நடத்தி,
கலைஞர்களுக்கும் ரசிகர்களுக்கும் ஒரு பாலம் அமைக்க விருப்பம் தெரிவித்தார்
மற்றொரு செயலர் கே. ஆர். கோபாலன்.
முழுக் கட்டடமும் 40–50 லட்ச ரூபாய் செலவில் இன்னும் ஓராண்டுக்குள் தயாராகிவிடும்.
சென்னையில் lift உள்ள ஒரே அரங்கமாக இருக்கும் இது.
இசை – நடன – நாடகக் கலைக்கு இன்னும் ஒரு lift கிடைக்கும் என்று
எதிர்பார்க்கலாம்!

-சாருகேசி

கே. ஆர். கோபாலன்



ஆர். கிருஷ்ணசாமி



இசையமைக்கிறார்



எஸ். பி. பாலசுப்பிரமணியம் முதன் முறையாகத் தமிழ்ப் படத்துக்கு இசை அமைத்து வருகிறார். ரஜினிகாந்த் நடிக்க, ஸ்ரீதர் இயக்கும் "துடிக்கும் கரங்கள்."

இதைப் பற்றிச் சம்பந்தபட்டவர்கள் பேசுகிறார்கள்:

ஸ்ரீதர்:

எஸ். பி. பாலசுப்பிரமணியம் சிறந்த பாடகர், இசை ஞானம் மிக்கவர். பல்வேறு இசை அமைப்பாளர்களிடம் வேலை செய்திருக்கிறார். தமிழில் அவருக்கு இது முதல் படமென்றாலும் தெலுங்கில் இரண்டு மூன்று படங்கள் செய்து வெற்றி கண்டவர். எனவேதான் அவரை இசை அமைக்கக் கோரினேன். இந்தப் படத்தில் ஐந்து பாடல்கள் உள்ளன. ஐந்துமே கண்டிப்பாக ஹிட்டாகும். ஏனென்றால் ஒவ்வொன்றுமே ஒவ்வொரு வகை. சில இசை அமைப்பாளர்கள் சிறப்பாக பாடல்களுக்கு டியூன் போட்டு விடுவார்கள் (ரீ ரிகார்டிங்) மியூசிக் என்று வரும்போது கஷ்டப்படுவார்கள். ஆனால் பாலுவைப் பொறுத்த வரை இன்று இருக்கும் எந்த இசை அமைப்பாளருக்கும் சளைத்தவரல்ல என்று காண்பிக்கும் வகையில் பின்னணி இசையையும் சிறப்பாக அமைத்திருக்கிறார். இந்தப் படத்தின் மூலம் அவர் ஒரு புகழ் பெற்ற இசை அமைப்பாளர் ஆவார்.

எஸ். ஜானகி:

இவர் இசை அமைத்து வெளிவந்த பிற மொழிப் படங்கள் எல்லாமே ஹிட்டான பாடல்களைக் கொண்டவை. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடிய அனுபவம். இளைஞர். அதனால் கற்பனையும் அதிகமாக இருக்கிறது. உள்ளத்தில் இருக்கும் ஒருவகையான தாகம்தான் இசை அமைக்கச் சொல்கிறது. புகழ் பெற்ற பாடகராக இருந்தும், தமது நேரத்தை இந்த இசையமைப்பில் செலுத்துகிறார் என்றால் ஒரு ஆத்ம திருப்திக்காகத்தான். என்னைப் போன்ற பாடகிகளின் குறை நிறைகளைப் புரிந்தவர். அதனால் எந்த வகையான பாடல்களை யாருக்குக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று அனுபவ பூர்வமாக உணர்ந்து செயல்படுவார்.

எஸ். பி. பி:

பல வருடங்களுக்கு முன்பே தயாரிப்பாளர் கே.ஆர்.ஜி. நான் இசை அமைப்பாளராக ஆனால் முதலில் அவருடைய படத்துக்குத்தான் இசை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நானும் ஒப்புக்கொண்டேன். சமீபத்தில் ஒரு நாள் டைரக்டர் ஸ்ரீதர் என்னைத் தம் படத்திற்கு இசை அமைக்கும்படி கேட்டார். நான் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் தடுமாறினேன். ஸ்ரீதர் என்னிடம் கேட்டது பற்றி திரு கே. ஆர். ஜியிடம் சொன்னேன். "அவர் படத்துக்கும் நீங்கள் இசை அமைக்க வேண்டும், என் படத்துக்கும் இசை அமைக்க வேண்டும் அவ்வளவுதானே! அவர்தான் என் படத்திற்கு டைரக்டர்" என்றார். பிரச்னை சுமுகமாகத் தீர்ந்தது.

டைரக்டர் ஸ்ரீதரும் கே. ஆர். ஜி.யும் மிகவும் உதவி செய்தார்கள். ஒரு டியூன் பிடித்து விட்டதென்றால் அந்த நிமிடமே "இதையே வைத்துக் கொள்ளுங்கள்" என்று முடிவு செய்து விடுவார். பிடிக்கவில்லை என்றால் நேராகச் சொல்லாமல் "இது சிறப்பாக இருக்கிறது. ஆனால் இன்னும் முயன்று பாருங்கள்" என்று தட்டிக் கொடுத்து வேலை வாங்கினார்.

தயாரிப்பாளர் கே. ஆர். ஜி. "பாலு, உங்களுக்கு இது மொதப் படம். பட்ஜெட்டைப் பற்றி கவலைப்படாதீங்க. உங்க கிட்ட இருந்து மக்கள் நிறையவே எதிர்பார்ப்பாங்க. எதிர்பார்ப்புக்கு ஏற்றாற்போல் இருக்க வேண்டாமா?" என்றார்.

ஸ்ரீதருக்கு என்று ஒரு முத்திரை உண்டு. அதே போல் எனக்கு என்றும் தனி முத்திரையை இந்தப் படத்தில் நான் பதித்திருக்கிறேன்!"

பேட்டி: சலன்



பூமியைச் சுமக்கும் வானங்கள்

முத்துராமலிங்கம்

இரவு:

தீபத்தின் நாக்குகள்
காற்று—
மதுவுண்ட போதையில்
தள்ளாடித் தள்ளாடி
எரிகின்றன....

விளக்கின்
சுடர் இதழ்கள்
இருட்டின்
கருத்த உதடுகளைச்
சப்பிச் சப்பி
அவஸ்தைப் படுகின்றன...

மகா நதிகள்
பட்டத்து யானைகளாய்
இருள் முகபடாம்
தரித்து
அசைந்து அசைந்து
போய்க்கொண்டிருக்
கின்றன...

அலைகள்
புரட்சிக்காரர்களாய்ச்
சினந்து கிளர்ந்து
சீறி எழுந்து
இந்தப்
பொல்லாத பூமியையே
விழுங்கப் பாய்ந்தும்
பின் ஓய்ந்தும்
விழுகின்றன....

நிசப்தம் கவ்விய
அந்த
நீல ராத்திரியில்
கவிந்துறைகிய
சமூக யாத்ரிகன்
ஒரு
மலைச்சாரலடியில்....

அது ஓர்
அடிவாரச் சிறு
கிராமம்:
அழகான பழங்
கிராமம்....

அங்கே—
பர்ணசாலையாய்ப்
பரிணமித்துள்ளதோர்
இலையுதிர்
பழத் தோட்டத்தில்
ஒரு
பழுத்த தேசபக்தனைப்
பார்க்கிறேன்...

'பலவீடு' வைத்துள்ள
'பண்பாளர்' திருநாட்டில்
அவனுக்கு
தேசம் 'பெரிய வீடு';
சிறைக் கூடோ
'சின்ன வீடு'!

இளமை இளவேனிலை
இருட்டுச் சிறை
நெருப்பில்
சருகாய் உதிர்த்துவிட்ட
அவனின்
வாழ்க்கை வண்டிக்கு
அவனே
ஒற்றைச் சக்கரம்!

உதவித் தொகையோ
பதவிச் சலுகையோ
பார்த்தறியா
அந்த—
உத்தமத் தியாகி
பனியின் குளிரிலும்
சூடாய்க் கொதித்தான்;
பழைய நினைவு நெருப்பில்
பழுக்கக் காய்ச்சிய
இரும்பாய்க் கனன்றான்...

ஆயுளின்
அந்திப் பொழுதான
அந்த—
விருத்தனின்
விர வரியோடிய
விழிகள்
இருட்டிலும்
இரட்டைச் சூரியனாய்த்
தகித்தன....

நெற்றிச் சுருக்கங்களில்
ஒரு
நெடிய வரலாறு
நிழற் படம் காட்டியது...



'சுதந்திரம் பற்றி
என்ன சொல்கிறாய்?'
என்றேன்.

'கால் விலங்கு
இறக்கக்
கையெலும்பால்
சாவி செய்தோம்...

விடுதலை மோதிரம்
சூடிய பின்போ
விரல்கள் கூட
விலங்கு தரித்துள்ளன...

வெள்ளைப் பூட்டுக்கள்
வாய் பிளக்கையில்
கருப்புச் சங்கிலிகள்
கைகளைப் பிணைத்தன...

நாம்—
சொந்த வீட்டிலேயே
வாடகைக்கு வசிப்பவர்கள்;
அதனால்தான்
நம்
சுதந்திரத்துக்குக் கொஞ்சம்
சுவாசப் பைகளில்
கோளாறு!

விலங்குகள்
சுமந்து சுமந்தே
நம்—
விடுதலைக்கும்
அடிமைப் பக்கவாதம்!...'

'விரக்தியின் எதிரொலியே
இந்த
வெறுப்பின் வெளிப்
பாடா?'...

'இல்லை... இல்லை!!...
சிறைகளை நேசிக்கும்
சிம்புட் பறவைகள்
கேவலம் மயிலாசனங்களில்
மயங்கிச் சாய்வதில்லை!...

நீ
சுதந்திரம் பற்றிக்
கேட்டதால் சொல்லு
கிறேன்..

ரத்தாபிஷேகத்தில்
சிலிர்க்க வேண்டிய
சுதந்திரதேவி
சித்தாப்பு வெளிச்சங்களில்
கிறுகிறுத்துக்
கிடக்கிறாள்!....

'ஓ!.... தியாகியே!
தேசபக்தனே!
எங்களுக்காய் நீ
என்னதான்சொல்லுகிறாய்?'

'பயணத்திற்கேற்றபடி
பாதையா?...
பாதைக்கேற்றபடி
பயணமா?....

எங்கள் தலைவர்கள்
தேசத்திற்காய்
வாழ்ந்தார்கள்;
உங்கள் தலைவர்களோ
தேர்தலுக்காய்
வாழ்கிறார்கள்!....

தேவைகள் தீர்க்கப்
படாவிட்டால்
ஒரு
தேசம் கூடத்
திறந்தவெளிச்
சிறைச்சாலையே!

பூமிதானம் செய்யும்
புதிய இந்தியா
மலராமல் தானே
ஆவி தானம் செய்தார்
அன்பர் வினோபா!....

இருளின் கர்ப்பத்தில்
ஒளியின் ஜனனம்
சுகப் பிரசவங்களல்ல;
சோதனைப் பிரசவங்களே!...
அதற்காய்—
சோதனையே பிரசவித்தால்
சுதந்தரிக்குப்
பெருமை யென்ன?...

என்றைக்கு
இந்நாட்டில்...
சூதும் சுயநலமும்
சுட்டெரிக்கப்பட்டு
சுரண்டலும் கொடுமையும்
சூறையாடப் படுகிறதோ...

என்றைக்கு இங்கே....
வயல்களும் பொழில்களும்
வசந்த வனங்களும்
ஆலையும் சோலையும்
ஆக்கமும் வளமும்
மேனி வருத்தி
இந்த—
மேதினி திருத்துவோர்க்கே
என்ற
மெய்யுரிமை
மலர்கிறதோ...

என்றைக்கு இங்கே—
ஒலிபெருக்கிகளின்
ஓலத்தை விடவும்
ஆலைக் குழாய்கள்
ஆர்த்திடும் கர்ஜனை
ஆகாசமும் பூமியும்
வியாபிக்கிறதோ....

அன்றைக்கே
இந்நாட்டில்....
சமத்துவம் மணக்கும்
ஜனநாயகச் சுதந்திரம்
அமைத்திடும் திருநாள்!
என்று—
அமையுமோ அந்த
இன்பத் திருநாள்?''

கிழவன் பேச்சால்
கிறுகிறுப்பான நான்
எழவும் மாட்டாது
எழுந்தேன்;
நடந்தேன்....
எதிரே....எல்லாம்
இருட்டோ இருட்டு!

எங்கள் கிழக்கில்
என்று விடியலோ?....





மோகனுக்குப் பிடித்த பேல்பூரி

பாண்டி பஜார் பகுதியில் மிகவும் பிரபலமானது 'மெட்ராஸ் நியூ பேல்பூரி'. மாலை ஐந்தரையானால் போதும். ஜே ஜே என்று கும்பல் வந்து வியாபாரம் களைகட்ட ஆரம்பித்துவிடும். இது இரவு பத்தரை பதினொன்று என்று தொடரும். இந்தப் பேல்பூரி தயாரித்து விற்கும் திரு லோகிதாசன் சொல்கிறார்:

''என்னுடைய பேல்பூரிக்கும், சென்னையில் ஏன், பெங்களூர், பம்பாய் போன்ற மற்ற நகரங்களில்விற்கப்படும்பேல்பூரிக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. பொதுவாக பேல்பூரி என்றால் சின்ன சைஸ் பூரிகளில் புளித் தண்ணீரை ஊற்றி, பொரி போட்டுக்கலந்து கொடுத்து விடுவார்கள். இது அவ்வளவு டேஸ்டாக இருக்காது. உடம்புக்கும் கெடுதல். ஆனால் நான் தயாரிக்கும் பேல்பூரியில் எல்லாம் புத்தம் புதிய காய்கறிகள், அத்தனையும் வைட்டமின் சத்துக்கள்.''

லோகிதாசன் கடந்த இரண்டாண்டுகளாக இந்தப் பேல்பூரி வியாபாரம் செய்து வருகிறார். ''ஆரம்பத்தில் அவ்வளவு விறுவிறுப்பு இல்லை வியாபாரத்தில். இப்போது நல்ல சூடு பிடித்து விட்டது. தினமும் சுமார் இருநூறு முந்நூறு பேர்கள் வருகிறார்கள்.

''பெங்களூரிலிருந்து, சினிமா உலகில் நுழைந்து, டைரக்டராக வேண்டும் என்ற ஆசையில் 800 ரூபாயுடன் சென்னை வந்த நான், ரயிலில் வரும்போது சினிமா சான்ஸ் எப்போது வருமோ அதுவரை ஏதாவது தொழில் செய்யலாம் என்று நினைத்தேன்.

''சினிமா உலகத்தினர் பலர் எனக்கு வாடிக்கையாளர்கள். மோகனும், எஸ்.வி. சேகரும் அடிக்கடி வருவார்கள். விஜயகாந்த், பஞ்சு அருணாசலம், வியட்நாம் வீடு சுந்தரம், மற்றும் போலீஸ் கமிஷனர் ஸ்ரீபால் என்று நீளமான வாடிக்கையாளர்கள் லிஸ்ட் உண்டு. ஒரு முறை ஹிந்தி நடிகை ரேகா வந்து, என் பேல்பூரி சாப்பிட்டுவிட்டு, ''பம்பாயில் கூட இத்தனை அருமையாய்ப் பேல்பூரி கிடையாது'' என்று சர்ட்டிபிகேட் கொடுத்து விட்டுப் போனார். 'சிலுக்கு ஸ்மிதா' வீட்டு விருந்துகூட ஆள் வந்து என்னிடமிருந்து பேல்பூரி வாங்கிக்கொண்டு போவார்கள்.''

''சரி! இந்தப் பேல்பூரி செய்வது எப்படி?''

''முதலில் பச்சை மிளகாய் சிலவற்றை எடுத்து அரைத்துச் சட்னி செய்து வைத்துக் கொள்ளவும்.

பின் மிளகு, சீரகம், உப்பு இவற்றை நன்றாகப் பொடி செய்து வைத்துக்கொள்ளவும். பிறகு தக்காளியைச் சிறு சிறு துண்டுகளாக்கி ஒரு வாய் அகன்ற கிண்ணத்தில் போடவும்.

வெள்ளரிக்காய், காரட் இரண்டையும் துருவித் தக்காளித்துண்டுகளுடன் சேர்த்துக் கொள்ளவும்.

இவற்றுடன் வெங்காயத்தைப் பொடிப் பொடியாய் நறுக்கிச் சேர்த்துக் கொண்டு, மிளகாய்ச் சட்னியைத் தேவையான காரத்துக்கேற்பச் சேர்க்கவும்.

அடுத்து உப்பு, மிளகுத் தூளைப்போட்டுக் கொத்துமல்லி சேர்க்கவும்.

இவற்றை யெல்லாம் ஒரு பெரிய ஸ்பூன் கொண்டு நன்றாகக் கலந்து கொள்ளவும்.

அடுத்து கடைகளில் கிடைக்கும் மிக்சர், பொரி இவற்றையும் போட்டு, நன்றாகக் கலந்து எடுத்து வாயில் போட்டுக் கொண்டால் போதும், நியூ பேல் பூரியின் பரம ரசிகராகிவிடுவீர்கள் நீங்கள்.''

பேட்டி: எஸ். சந்திரமௌலி

போட்டோ: ஈ. வே. ரா. மோகன்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)

Assistant Editor: P.S. Mani

Editor: K. Rajendran

"காம்ப்ளான்® ஒண்ணுதான் சரி என் குடும்பத்துக்கு ...திட்டமிட்ட பரிபூரண உணவு."



"பல வேளைகள் சாப்பிடத் தவறி விடும் என் கணவருக்கு"



"சாப்பிடும்போது சண்டித்தனம் செய்யும் என் மகனுக்கு"



"நோயுடல் தேறிவரும் என் தாயாருக்கு"

காம்ப்ளான்® ஒன்றுதான் எவருக்கும் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களால் முழுமை பெற்றது.



"அசதியினால் சரிவர சாப்பிட முடியாத எனக்கு"

காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விஞ்ஞானக் கலவையாக உடலுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்போ-ஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள். எனவேதான், டாக்டர்கள் பெரும்-பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.

கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக—சாக்கலேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.

திட்டமிட்ட பரிபூரண உணவு

காம்ப்ளான்®

GLC. 10-2015 TM


REGISTERED No. M. 4203
Registered as a Newspaper in Sri Lanka

கிளியர்·டோன்

உபயோகிப்பவர்கள் முகமலரக் கூறுவதைக் கேளுங்கள்:



"முன்னேவிட சிகப்பாகி விட்டேன் என்கிறள் என் மாமன்மகள்... அவளே பாராட்டுவதென்றால் அது பெரிசுதான்."
—டெய்ஸி நாம்தார்
நாடக நடிகை



"கடந்த 4 வாரமாக கிளியர்-டோன் உபயோகித்து வருகிறேன். மாசு மரு எல்லாம் கிட்டத்தட்ட மறைந்தே போச்சு"
—ஷெர்னாஸ் படேல்
மாணவி



"வெய்யிலில் அலையும்படியான வேலை எனது. கிளியர்-டோனை தொடங்கினது முதலோ உடம்பு கறுக்கலே காணோம்"
—பாலெட் சல்தானா



"கிளியர்-டோன் என் சருமத்தை மழமழப்பாக ஆக்கியிருக்கிறது— பாருங்க, முழங்கைப் பகுதிகளைக் கூட"
—ராஜம் ராஜாமணி
இல்லத் தலைவி

பரிபூரண சிகப்பழகு சாதன க்ரீம்

இதுபோல் ஆயிரமாயிரம் பேர் மேனியில் பேசுது **கிளியர்-டோன்**. அவர்கள் பார்க்காத க்ரீமா, லோஷனா, மூலிகை மருந்தா... இல்லை, எதுவுமே பலிக்கவில்லை. பிறகுதான் கண்டுகொண்டனர் ஒரு சம்பூரண சிகப்பழகு சாதன க்ரீம்: **கிளியர்-டோன்**.

பன்னாட்டுலக மருந்தாராய்ச்சிப் பயனும்—விஞ்ஞான ஆக்கமுறை சிகப்பழகு க்ரீம்—இதனை உங்களிடம் கொணருவோர் நிகோலஸ் லெபாரடரீஸ் இந்தியா லிமிடெட். இந்தியாவில் கிடைக்கின்ற வேறெந்த க்ரீமிலும் இல்லாத தனிச் சிறப்புப்பொருள் அடங்கியது.

கிளியர்-டோன் இயற்கை வழியில் இயங்கி, மேனிமீது மலரவைக்குது நிறைந்த சிகப்பழகை, மாசு மரு நீக்குது. கோடையிலும் குளிரிலும், ஈரத்திலும் வரட்சியிலும் வாடாத வாழைத்தண்டு மென்மையினை வழங்குகிறது **கிளியர்-டோனில்** உள்ள விசேஷ சாரத்து.

மாறுவீர் இன்றே—மாசில்லாது மிளிர்பெறும் சிகப்பழகுக்கு—இனி என்றும் **கிளியர்-டோன்**. காரணம், வெயிலில் பட்டு உடம்பு கறுக்கா வண்ணம் சூரிய அல்ட்ரா-வயலெட் கதிர்களைத் தடுக்கவும் செய்கிறது **கிளியர்-டோன்**.

பாரெங்கும் பலகோடி அழகுமாந்தர் பயன்கண்ட வழி உமக்கே-உபயோகிப்பீர் வேளாவேளை **கிளியர்-டோன்**



daCunha NICL/26/82-TM

உயரிய ஃபார்முலா
ஓங்கிய சக்தி

சிகப்பழகு ரகசியம்— இயற்கையாய் உமக்கே

கிளியர்·டோன்

பாரிஸ் . லண்டன் . நியூயார்க்